பக்கங்கள் : பதினாறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 21 வள்ளுவர் ஆண்டு 2036 மார்கழி 06 புதன்கிழமை (21.12.2005)UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் : 25



## விரைந்து பேச்சுக்களை ஆரம்பிக்கும்படி பாலாவிடம் சொல்ஹெய்ம் வற்புறுத்தல்



லண்டன்,டிசெ 21

இலங்கையின் வடக்கு - கிழக்கில் தற்போது வெடித்திருக்கும் வன்முறை இலங்கை அரச படைகளுக்கும், புலிகளுக்கும் இடையிலான ஒரு பெரிய யுத்தமாக வெடிக்க முன்னர் விரைந்து - இரு தரப்புக்கும் இணக்கமான ஓரிடத்தில் - யுத்த நிறுத்தத்தை வலுவுடையதாக்குவதற்கான பேச்சுகளை ஆரம்பிக்க வேண்டும்.

- இவ்வாறு நோர்வே அனுசரணைத் தரப்பு விடுதலைப் புலிகளிடம் வற்புறுத்திக் கூறியிருக்கின்றது. நோர்வே அனுசரணைத் தரப்பின் உயர்மட்டக் குழு நேற்று லண்டனில் விடுதலைப் புலிகளின் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கத்தைச் சந்தித்தபோது இந்த வற்புறுத்தல் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது. நோர்வே அனுசரணைக் குழுவின் விசேட பிரதிநிதியும், அந்த நாட்டு அமைச்சருமான எரிக் சொல்ஹெய்ம், நோர்வேயின் கொழும்புக்கான தூதுவர் ஹான்ஸ் பிரட்ஸ்கர், அந்த நாட்டின் வெளிவிவகார அமைச்சின் உயரதிகாரிகளான ஒலா பிரேவிக், சொன்ட்ரே போவெற் ஆகியோர் இந்தச் சந்திப்பில் கலந்துகொண்டனர்.

மதியுரைஞர் பாலசிங்கத்தின் லண்டன் இல்லத்தில் லண்டன் நேரப்படி நேற்றுக்காலை 9 மணிமுதல் நண்பகல் 12 மணிவரை இந்தப் பேச்சுகள் நடைபெற்றன.

பேச்சுகளின் ஆரம்பத்தில் யாழ்ப்பாணத்தின் தற்போதைய நிலைமைகளை - அங்கு இடம் பெறும் வன்முறைகளை - மதியுரைஞர் பாலசிங்கம் நோர்வேக் (16ஆம் பக்கம் பார்க்க)

### அடாவடித்தனம், அட்டூழியம் தொடர்கின்றன

# யாழ். பல்கலை வளாகத்துக்குள் புகுந்து மாணவர்கள் மீது படையினர் தாக்குதல்

## கண்ணீர் புகைக்குண்டுகளை வீசி கண்டபடி வேட்டுக்களைத் தீர்த்தனர்

யாழ்ப்பாணம், டிசெம்பர். 21

**யாழ்ப்பாணத்தில் இராணுவத்தினர் மற்றும் பொலீஸாரின் அடாவடித்தனங்கள் தொடர்ந்தும் அதிகரித்து வருகின்றன. யாழ். பல்கலைக்கழக வளாகத்தினுள் நேற்றுத் திடீரெனப் புகுந்த இராணுவத்தினர், மாணவர்கள் மீது கண்மூடித்தனமாகத் தாக்குதல் நடத்தியதுடன் கண்டபடி துப்பாக்கிப் பிரயோகமும் மேற்கொண்டனர். விரிவுரையாளர் ஒருவர் உட்பட மூவரைப் பிடித்து மூர்க்கத்தனமாகத் தாக்கிய படையினர், அவர்களை பொலீஸ் ஜீப்பில் தூக்கிப் போட்டுக் கொண்டு யாழ். பொலீஸ் நிலையத்திற்குப் பறந்தனர். இருவர் அங்கு வைத்து விடுவிக்கப்பட்டனர். ஒருவர் தொடர்ந்தும் தடுத்து வைக்கப்பட்டார்.**

இதற்கிடையே, யாழ்ப்பாணத்தில் தற்போது ஏற்பட்டுள்ள பாதுகாப்பு நிலைமை குறித்து உடனடியாகத் தனக்கு அறிக்கை சமர்ப்பிக்குமாறு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பாதுகாப்புப் படை உயர் அதிகாரிகளுக்குப் பணித்துள்ளார் என்று ஜனாதிபதி செயலகச் செய்திக் குறிப்பு ஒன்று தெரிவித்தது. மக்களைப் பாதுகாத்து அமைதியை நிலைநாட்டுவதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு பாதுகாப்புத் தரப்பினருக்கு அவர் உத்தரவிட்டிருக்கிறார் எனவும் அந்தச் செய்திக் குறிப்புத் தெரிவித்தது.

நேற்றுமுன்தினம் கண்காணிப்புக் குழு அலுவலகம் நோக்கி ஊர்வலமாகச் செல்ல முற்பட்ட யாழ். பல்கலைக் கழக மாணவர்கள், பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள் படையினரால் வழிமறிக்கப்பட்டுத் தாக்கப்பட்டனர். இதில் கலைப்பீடாதிபதி சிவச்சந்திரன், விரி (16ஆம் பக்கம் பார்க்க)

## சங்கத்தானையில் படையினர் மீது கிரனேட் வீச்சு

யாழ்ப்பாணம்,டிசெ.21

யாழ். மாவட்டத்திலுள்ள சாவகச்சேரி, சங்கத்தானையில் படையினர் மீது நேற்று கிரனேட் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. இதில் இரு படையினர் காயமடைந்துள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது. இதில் குணவர்த்தன என்ற (16ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்.நகரப் பகுதியில் நேற்றிரவு தாக்குதல்

யாழ்ப்பாணம்,டிசெ.21

நகரப்பகுதியில் மணிக்கூண்டு வீதியில் பெருமாள் கோயிலுக்குச் சமீபமாக அமைந்துள்ள காவலரண் மீது நேற்றிரவு 8 மணியளவில் கிரனேட் வீசப்பட்டது.

இந்தச் சம்பவத்தை அடுத்து நகரப்பகுதியில் குவிக்கப்பட்ட படையினர் தேடுதலில் ஈடு (16ஆம் பக்கம் பார்க்க)

### யாழ். வன்முறைச் சம்பவங்கள்

## இராணுவ உயர்மட்டத்தின் திட்டமிடப்பட்ட செயற்பாடு

### கண்காணிப்புக்குழுவிடம் இளம்பரிதி தெரிவிப்பு

பளை,டிசெ.21

குடாநாட்டில் இடம்பெறும் படையினரின் அத்துமீறல் சம்பவங்கள் அவர்களின் உணர்ச்சி வசப்பட்ட வெளிப்பாடு எனக் கருதமுடியாது. மாறாக இராணுவத்தின் உயர்பீடத்தினால் ஏற்கனவே நன்கு திட்டமிடப்பட்டு மக்களை அச்சுறுத்தி ஒடுக்கும் வன்முறைகளாகும்.

யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் யாழ்.மாவட்டக் கண்காணிப்பாளர்களிடம் விடுதலைப் புலிகளின் யாழ். மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி (16ஆம் பக்கம் பார்க்க)

## ஓட்டோச் சாரதிகள் மறியல் போராட்டம்

### அவர்களையும் விரட்டி விரட்டித் தாக்குதல்

யாழ்ப்பாணம், டிசெ. 21

யாழ். குடாநாட்டில் பல்வேறு இடங்களிலும் இராணுவத்தினரால் ஓட்டோச் சாரதிகள் தாக்கப்பட்டமையைக் கண்டித்து நேற்றுப் பிற்பகல் 3 மணியளவில் யாழ். நகரப் பகுதியில் ஓட்டோச் சாரதிகள் வீதி மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர். அவர்களையும் படையினர் விரட்டி விரட்டித் தாக்கிக் கலைத்தனர்.

கஸ்தூரியார் வீதி - ஸ்ரான்லி வீதி ஆகியன சந்திக்கும் வின்சர் சந்தியில், இராணுவ நிலையின் முன்பாக இந்த மறியல் போராட்டம் இடம்பெற்றது. சுமார் அரை மணி நேரம் இடம்பெற்ற இந்தப் போராட்டத்தின்போது (16ஆம் பூக்கம் பார்க்க)

## துணைப்படைகளின் செயற்பாடுகளும் அமைதிநிலை மோசமடையக் காரணம்

### இணைத்தலைமை நாடுகள் பிரஸல்ஸ் கூட்டத்தின் பின் அறிக்கை

கொழும்பு,டிசெ.21

இலங்கையில் அமைதி நிலைமை மோசமடைந்து வருவதற்கு இராணுவத்துணைப் படைகளின் நடவடிக்கைகளும் காரணமென்று ஏற்றுக்கொண்டிருக்கும் இலங்கைக்கு உதவி வழங்குவதற்கான இணைத்தலைமை நாடுகள், இவ்வாறானவற்றை முடிவுக்குக் கொண்டு வந்து அமைதி முயற்சிகளை முன்னெடுத்துச் செல்வதில் பற்றுறுதியை வெளிப்படுத்துமாறு இலங்கை அரசை வலியுறுத்திக்கேட்டிருக்கின்றன.

அதேபோல் வன்முறைகளை நிறுத்தி, போர் நிறுத்தப் புரிந்துணர்வு ஒப்பந்தம் மீதான தமது உள்ளார்ந்த ஈடுபாட்டைப் புலிகள் வெளிப்படுத்தாத பட்சத்தில் மோசமான விளைவுகளை சந்திக்க வேண்டியேற்படுமென விடுதலைப் புலிகளையும் இணைத்தலைமைகள் எச்சரித் (16ஆம் பக்கம் பார்க்க)

## கிழக்குப் பல்கலையிலும் பகிஷ்கரிப்புப் போர்


வவுனியா,டிசெ.21

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சமூகத்தினர் மீது இராணுவத்தினர் நடத்திவரும் தாக்குதல்களைக் கண்டித்தும், அதற்கு எதிர்ப்பைத் தெரிவிக்கும் வகையிலும் கிழக்குப் பல்கலைக்கழக மாணவர்களும், யாழ்.பல்கலைக்கழக வவுனியா வளாக மாணவர்களும் வகுப்புப் பகிஷ்கரிப்புப் போராட்டமொன்றை ஆரம்பித்திருக்கின்றனர்.

யாழ்ப்பாணத்தில் பல்கலைக்கழக சமூகத்தின் மீதான காட்டுமிராண்டித்தனமான (16ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



தென்மராட்சியில் நேற்றுஇடம்பெற்ற எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தின் போது எடுக்கப்பட்ட படங்கள். (படங்கள்: தென்மராட்சிச் செய்தியாளர்)

# சப்பாத்துக் கால்களால் உதைத்து பொல்லுகளினால் அடித்தனர்

## தாக்குதல் குறித்து விரிவுரையாளர் விவரிக்கிறார்

யாழ்ப்பாணம்,டிசெ.21

பல்கலைக்கழகத்தின் விரிவுரையாளர் என சிங்களத்தில் கூறியபோதும், நிலத்தில் கிடந்த என்னை சப்பாத்துக்கால்களால் உதைந்து பொல்லுகளினால் தாக்கினர்.

- இப்படிக்கூறினார் நேற்றுத் தாக்குதலுக்கு இலக்கான யாழ். பல்லைக்கழக உடற்கல்வித் துறை விரிவுரையாளர் மாணிக்கவாசகர் இளம்பிறையன்.

அவர் தமக்கு நேர்ந்த அவலத்தை விவரித்து உதயனுக்குக் கூறியதாவது:-

பல்கலைக்கழக வளாக பிரதான நிர்வாகக் கட்டடத்தின் முன்னால் பல்கலைக்கழக மாணவர்கள் நின்றனர்.

அதேநேரம் கோப்பாய் பொலீஸார் அப் பகுதியில் ஜீப்பில் வந்தார்கள். இவர்கள் வந்த சில நிமிடநேரத்தில் மேலும் பெரும் எண்ணிக்கையான பொலீஸார் வளாகத்தைச் சுற்றி நின்றார்கள்.

அதனைத் தொடர்ந்து திடீரென துப்பாக்கிப் பிரயோகம் செய்து கண்ணீர்புகைக் குண்டுகளை ஏவிய வண்ணம் 25 இற்கும் மேற்பட்ட பொலீஸார் பல்கலைக்கழத்தின் உட்புறம் வந்தனர். சூடுகள் இடம்பெறும் வேளையில், நிலத்தில் படுத்திருந்த என்னை நோக்கியும் துப்பாக்கிக் குண்டுகள் வருவதைக் கண்டு எழுந்து ஓட முனைந்தேன்.

அப்போது எனது தலைக்கு மேலால் துப்பாக்கிக் குண்டுகள் செல்ல நான் மீண்டும் நிலத்தில் படுத்தேன். அப்போது என்னைச் சுற்றி பதினைந்துக்கும் மேற்பட்ட பொலீஸார் நின்று சப்பாத்துக்காலினால் உளக்கியதுடன் பொல்லுகள் வயர்களினாலும் அடித்தார்கள்.

அறிவு மயங்கும் நிலையில் இருந்த என்னை இழுத்துச் சென்று வாகனத்தில் போட்டு காலால் உளக்கி வைத்திருந்தார்கள். பின்னர் யாழ்ப்பாணம் பொலீஸ் நிலையத்தில் இறக்கும் போது எனது தோள்மூட்டு உடைந்து தூக்க முடியாமல் இருப்பதை உணர்ந்தேன் - என்றார் அவர். (3-86-190)

# மறியலில் ஈடுபட்ட மாணவரை இராணுவம் விரட்டியடித்தது

வீதி மறியலில் ஈடுபட்ட யாழ். இந்துக் கல்லூரி மாணவர்கள் மீது இராணுவத்தினர் தடியடிப் பிரயோகத்தை நேற்று மேற்கொண்டார்கள். மாணவர்கள் இராணுவத்தால் தாக்கப்படுவது மற்றும் சோதனைகளுக்கு உள்ளாக்கப்படுவதைக் கண்டித்தே இந்த வீதி மறியற் போராட்டம் நடத்தப்பட்டது.

அப்போது அங்கு குவிந்த இராணுவத்தினர் மாணவர்களை விரட்டியடித்தனர். இச் சம்பவத்தையடுத்து அப்பதியில் பெரும் பதற்றம் நிலவியது. (ஓ-86)

# தென்மராட்சியில் நேற்று எதிர்ப்பு ஆர்ப்பாட்டம்

தென்மராட்சி,டிசெ.21

அண்மைக் காலமாக குடாநாட்டில் இடம்பெற்றுவரும் படையினரின் அடாவடித்தனங்களைக் கண்டித்து நேற்று தென்மராட்சிப் பிரதேச மக்கள் ஒரு மணிநேர அடையாள எதிர்ப்புப் போராட்டம் நடத்தினர்.

சாவகச்சேரி பஸ் நிலையத்தில் நடைபெற்ற இந்தப் போராட்டத்திற்காக சகல வர்த்தக நிலையங்கள், அரச திணைக்கள அலுவலகங்கள், சந்தைகள் அனைத்தும் முற்பகல் 10 மணி முதல் ஒரு மணித்தியாலம் மூடப்பட்டிருந்தன. சாவகச்சேரி வணிகர் சங்கத் தலைவர் தலை மையில் நடைபெற்ற கண்டனக் கூட்டத்தில் மாணவர் பேரவை உறுப்பினர் ச.விஜயரூபன், நாடாளுமன்ற உறுப்பினர் செ.கஜேந்திரன் உட்படப் பலர் உரையாற்றினர்.

இறுதியில் பொது அமைப்புகள் சார்பில் மகஜர் தென்மராட்சிப் பிரதேச செயலரிடம் கையளிக்கப்பட்டது.

இந்த எதிர்ப்புப் போராட்டத்தில் படையினருக்கு எதிராக எழுப்பப்பட்ட கோஷங்கள் சில வருமாறு:-

- கல்விமான்கள் மீது தாக்குதல் செய்யாதே.
- இயல்பு வாழ்க்கையை சீர்குலைக்காதே.
- பொது உடைமைகளை அழிக்காதே.
- கைது செய்தவர்களை விடுதலை செய்.
- இராணுவமே சுற்றிவளைப்புகளை நிறுத்து.
- பாடசாலை அருகிலுள்ள காவலரண்களை அகற்று.
- மாணவர்கள் மீதான தாக்குதல்களை நிறுத்து.
- பெண்களை பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தாதே. (3-117)

# பாலியல் வல்லுறவின் பின் கழுத்து நெரித்துக் கொலை!

## புங்குடுதீவு யுவதி கொலை தொடர்பாகத் தீர்ப்பு

யாழ்ப்பாணம்,டிசெ.21

புங்குடுதீவில் கிணற்றில் இருந்து மீட்கப்பட்ட இளம் பெண்ணின் மரணம் கொலை என நேற்றுத் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

இந்த யுவதி பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்திய பின் கழுத்து நெரிக்கப்பட்டுக் கொலை செய்யப்பட்டிருக்கின்றார் என ஊர்காவற்றுறை பதில் நீதிவான் திருமதி லிங்கா துரைராஜா தீர்ப்பு வழங்கியுள்ளார்.

யாழ். சட்ட வைத்திய அதிகாரி எஸ்.பாலசுப்பிரமணியம் சமர்பித்த பிரேத பரிசோதனை அறிக்கையின்படி இத்தீர்ப்பை நீதிவான் வழங்கியுள்ளார்.

காணாமற்போன புங்குடுதீவு 7ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த இளையதம்பி தர்சினி (வயது-20) என்ற யுவதியின் சடலம் மறுநாள் கடற்படை முகாமுக்கு அருகில் உள்ள கிணறு ஒன்றிலிருந்து மீட்கப்பட்டிருந்தது தெரிந்ததே. (ஐ-3)

# நகரில் நேற்று நடந்த சாத்வீகப் போர் இராணுவத்தால் தடுக்கப்பட்டது

## முச்சக்கரவண்டி சேவைச் சங்கம் அறிக்கை

யாழ்ப்பாணம்,டிசெ.21

நாம் சாத்வீக முறையில் வாகனங்களைப் பல இடங்களிலும் நிறுத்தி வீதி மறியல் போராட்டம் ஒன்றை நடத்தினோம். மறியல் போராட்டம் நடைபெற்றுக்கொண்டிருந்த போது இராணுவத்தினர் சகல இடங்களையும் முற்றுகையிட்டுத் தாக்கினர்.

- இவ்வாறு தெரிவித்தனர் வட பிராந்திய முச்சக்கர மோட்டார் ஊர்த்திச் சேவைச் சங்கத்தினர்.

நேற்று நடைபெற்ற சம்பவம் தொடர்பாக அவர்கள் வெளியிட்ட அறிக்கை ஒன்றிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

அண்மையில் சில நாள்ககளாக எமது பகுதியில் ஓட்டோக்களின் சேவைகளுக்கு ஓட்டோத்தரிப்பிடங்களில் இராணுவத்தினரால் ஏற்படுத்தப்பட்ட இடையூறுகளாலும் -

கடந்த திங்கட்கிழமை திருநெல்வேலிப் பகுதியில் இரண்டு ஓட்டோக்களை சேதப்படுத்தியும், சாரதிகளைக் காயப்படுத்தியதன் காரணமாக தொழிலாளர்களாகிய எமது அங்கத்தவரின் விசனத்தை வெளிப்படுத்தும் நோக்குடன் நேற்றுப் பிற்பகல் 3 மணிக்கு ஓட்டோ உரிமையாளர்கள், சாரதிகள், தனியார் போக்குவரத்துச் சங்க சிற்றூர்தி அங்கத்தினரும் இணைந்து சாத்வீக முறையில் வாகனங்களைப் பல இடங்களிலும் நிறுத்தி வீதி மறியல் போராட்டம் ஒன்றை பிற்பகல் நடத்தத் தீர்மானித்து நடத்தினோம்.

வீதி மறியல் போராட்டம் ஆரம்பமாகி வெற்றிகரமாக நடைபெற்றுக்கொண்டிருந்த சமயம் பிற்பகல் 3.10 மணியளவில் இராணுவத்தினர் மறியல்போராட்டம் நடைபெற்ற சகல இடங்களையும் முற்றுகையிட்டு ஓட்டோக்களையும் சேதப்படுத்திப் போராட்டத்தில் ஈடுபட்டவர்களையும் தாக்கி எமது அமைதிப் போராட்டத்தை சீர்குலைத்தனர். இது எமது உரிமையை அடக்குவதாகும் என்று உள்ளது. (3-12)

# பல்கலை மாணவர் கண்டனம்

யாழ்ப்பாணம்,டிசெ.21

யாழ். பல்லைக்கழக வளாகத்துள் அத்துமீறி உள்நுழைந்த இராணுவத்தினர் நேற்று மேற்கொண்ட அராஜக நடவடிக்கையை யாழ். பல்லைக்கழக மாணவர் ஒன்றியம் வன்மையாகக் கண்டித்துள்ளது.

இச்சம்பவம் தொடர்பாக மாணவர் ஒன்றியம் நேற்று வெளியிட்டுள்ள கண்டன அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

ஸ்ரீலங்காவின் புதிய அரசு பதவியேற்றது முதல் தமிழ் மக்கள் மீதும், மாணவர்கள் மீதும் புரிந்துணர்வு ஒப்பந்தத்தை மீறும் வகையில் இராணுவத்தினர் தமது அராஜக நடவடிக்கைகளை கட்டவிழ்த்துவிட்டுள்ளனர். இதனால் குடாநாட்டின் இயல்பு வாழ்க்கை முற்றாகச் சீர்குலைந்துள்ளது.

ஜி.சீ.ஈ. (சா.த) பரீட்சை நடைபெற்றுவருகின்ற போதும் இராணுவத்தின் காட்டுமிராண்டித்தனமான செயற்பாடுகள் தொடர்ந்த வண்ணமே உள்ளன. துப்பாக்கி வேட்டொலிகளுக்கும், இராணுவ கெடிபிடிகளுக்கும் மத்தியிலேயே எமது மாணவர் பரீட்சை எழுதி வருகின்றனர். இந்த நடவடிக்கை சர்வதேச விதிமுறைகளுக்கு முரணானது.

இவை எல்லாவற்றிற்கும் மேலாக நேற்றையதினம் படையினரின் உதவியுடன் பல்கலைக்கழக வளாகத்திற்குள் நுழைந்து பொலீஸார் மாணவர்களை நோக்கி சரமாரியாகத் துப்பாக்கிப்பிரயோகம் மேற்கொண்டதுடன், பல்கலைக்கழக பாதுகாப்பு உத்தியோகத்தர்களையும் மீறி எமது விரிவுரையாளர் ஒருவரையும் பல்கலைக்கழக மாணவன் ஒருவரையும் கைது செய்து இழுத்துச் சென்றுள்ளனர். இராணுவத்தினரின் இந்த அராஜக நடவடிக்கையை நாம் வன்மையாகக் கண்டிக்கும் அதேவேளை -

மாணவர்கள் இயல்பாக கல்வி கற்கக் கூடிய சரியான சூழல் ஏற்படும் வரை எமது கற்றல் செயற்பாடுகள் அனைத்தையும் இடைநிறுத்தி எமது அடுத்தகட்ட செயற்பாடுகளை நாம் ஆரம்பிக்கவுள்ளோம் என்றுள்ளது. (3-6)

# இலங்கை அணி இக்கட்டில்!

புதுடில்லி,டிசெ.21

இந்திய அணியுடனான மூன்றாவதும் இறுதியுமான டெஸ்ட் போட்டியில் இலங்கை அணி பெரும் நெருக்கடிக்குள்ளாகியுள்ளது.

இப்போட்டியின் இரண்டாம் நாளான நேற்று முன்தினம் 5 விக்கட்டுக்களை இழந்து 131 ஓட்டங்களைப் பெற்றிருந்த இலங்கை அணி நேற்று மேலதிகமாக 75 ஓட்டங்களுக்கு எஞ்சிய விக்கெட்டுக்களையும் இழந்தது.

இவ்வணிசார்பாக டில்ஷான் 65 ஓட்டங்களையும் அத்தப்பத்து, குமார் சங்ககார ஆகியோர் தலா 40 ஓட்டங்களையும் மலிங்க பண்டார ஆட்டமிழக்காமல் 26 ஓட்டங்களையும் பெற்றனர். இந்திய அணியின் பந்து வீச்சில் ஹர்பஜன் சிங் 7விக்கட்டுக்களையும் அனில் கும்ளே 2 விக்கெட்டுக்களையும் இர்பன்பதான் ஒரு விக்கெட்டையும் சாய்த்தனர்.

இதனால் இலங்கை அணியைவிட 192 ஓட்டங்களால் முன்னணியில் இருந்த இந்திய அணி நேற்றுத் தனது இரண்டாவது இன்னிங்ஸை துடுப்பெடுத்தாட களமிறங்கியது. நேற்றைய ஆட்ட நேர முடிவில் இந்தி அணி தனது இரண்டாவது இன்னிங்ஸில் 9 விக்கெட்டுக்களை இழந்து 287 ஓட்டங்களைப் பெற்றுள்ளது. முதல் இன்னிங்ஸைப் போலவே முன்வரிசை வீரர்கள் சோபிக்காத போதும், பின்வரிசை வீரர்களின் சிறப்பான ஆட்டத்தால் இந்திய அணி கௌரவமான நிலையை அடைந்தது.

இதனால் இந்திய அணி இலங்கை அணியைவிட 479 ஓட்டங்களால் முன்னணியில் உள்ளது.

இந்திய அணிசார்பாக யுவராஜ்சிங் அதிகபட்சமாக 75 ஓட்டங்களைப் பெற்றார். அகார்கர் 49 ஓட்டங்களையும், கௌதம் காம்பீர் 30 ஓட்டங்களையும், இர்பன்பதான் 27 ஓட்டங் களையும் பெற்றனர். அனில் கும்ளே ஆட்ட மிழக்காமல் 23 ஓட்டங்களைப் பெற்றார்.

பந்து வீச்சில் சுழல்பந்து வீச்சாளர்களான முத்தையா முரளிதரன், பண்டார ஆகியோர் தலா மூன்று விக்கெட்டுக்களையும் மலிங்க டில்ஷான் மற்றும் மஹ்ரூப் ஆகியோர் தலா ஒருவிக்கெட்டையும் கைப்பற்றினர்.

இன்னும் இருநாள் மீதமிருக்கும் நிலையில் இலங்கை அணி வாழ்வா, சாவா என்பதற்காக போராட வேண்டிய சூழ்நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது. (3-6)

# ஊடகவியலாளரின் பாதுகாப்பை அரசு உறுதிப்படுத்தவேண்டும்

## யாழ். ஊடகவியலாளர் சங்கம் வலியுறுத்து

தமிழ் ஊடகவியலாளரின் பாதுகாப்பை அரசு உறுதிப்படுத்தவேண்டும்

- இவ்வாறு வலியுறுத்தியுள்ளது யாழ்ப்பாண ஊடகவியலாளர் சங்கம்

இது தொடர்பாக சங்கம் வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

ஸ்ரீலங்காவின் புதிய அரசு தமிழ் ஊடகவியலாளர்கள் மீது தனது காட்டுமிராண்டி தனத்தைக் காட்டத்தொடங்கி விட்டது. கடந்த காலங்களில் தமிழ் ஊடகவியலாளர்களான நிமலராஜன், நடேசன், சிவராம் போன்றோரை சிங்கள ஆட்சியாளரின் கூலிப்படைகள் படுகொலை செய்து குருதி காய முன்னர் புதிய அரசும் தனது காட்டுமிராண்டித் தனத்தைக் காட்டத் தொடங்கியுள்ளது.

இந்த நிலையில் தமிழ் ஊடகவியலாளர்கள் மீதான தாக்குதலை நிறுத்த புதிய அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும். தவறும் பட்சத்தில் ஊடகவியலாளர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த அரசால் முடியாது என பகிரங்கமாக அறிவிக்கவேண்டும் என்றும் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஓ-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி, தொலைநகல் — 222 2030, 222 2083, 222 3837.

# ஒளிவு மறைவுச் செயற்பாட்டை கைவிடாதவரை முன்நகர்வு இல்லை

நேற்றும் நேற்றுமுன்தினமும் நாடாளுமன்ற உரைகளில் இரண்டு உறுப்பினர்கள் தெரிவித்த கருத்துக்கள் முக்கியத்துவம் பெறுகின்றன.

ஒருவர் - தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் இரா.சம்பந்தன். மற்றவர் - ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தவிசாளர் பஷீர் சேகுதாவூத்.

முன்னைய அரசுகள் மேற்கொண்ட அமைதி முயற்சிகளை ஜே.வி.பியினரும் அதனுடன் கூட்டுச் சேர்ந்துள்ள தற்போதைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும் அண்மைக்காலம்வரை மோசமாக விமர்சித்து வந்தனர். அவர்கள் சுமத்திய குற்றச்சாட்டுகளில் மிக முக்கியமானது அமைதி முயற்சிகள் தொடர்பான நடவடிக்கைகள் எல்லாம் மூடு மந்திரமாகவே - இரகசியமாகவே - நடைபெறுகின்றன என்பதாகும்.

சமாதான முயற்சிகள் தொடர்பான நடவடிக்கைகள், பேச்சுகள் போன்றவையெல்லாம் ஒளிவுமறைவின்றி, வெளிப்படையானவையாக நடைபெற வேண்டும் என்பதே ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ - ஜே.வி.பி. - ஜாதிக ஹெல உறுமய முக்கூட்டின் மூலக் கோஷமாக இருந்தது. இதையே மஹிந்த ராஜபக்ஷவின் ஜனாதிபதித் தேர்தல் விஞ்ஞாபனமான 'மஹிந்த சிந்தனை'யும் எழுத்தில் வலியுறுத்தி நின்றது.

ஆனால், தேர்தலுக்கு முன்னால் கூறிய வாக்குறுதிகளை எல்லாம் தேர்தலின் பின்னர் காற்றில் பறக்க விடும் தமது வழமையான செயற்பாடு போல, அமைதி நடவடிக்கைகளில் இந்தத் திறந்த - ஒளிவுமறைவற்ற - வெளிப்படையான - போக்கைக் கடைப்பிடிக்க வற்புறுத்திய விடயத்தையும் புதிய ஜனாதிபதி காற்றில் பறக்க விட்டுள்ளார் போலும்.

அது குறித்தே நாடாளுமன்றத்தில் கேள்வி எழுப்பியிருக்கின்றார் பஷீர் சேகுதாவூத் எம்.பி.

இலங்கை அமைதி முயற்சிகளில் அனுசரணைப் பணி வகிப்பது தொடர்பாக நோர்வேத் தரப்பு இலங்கை அரசுக்குக் கடும் நிபந்தனைகள் சிலவற்றை விதித்திருக்கின்றது என்பதும் -

அந்த நிபந்தனைகளை ஏற்றுச் செயற்பட இலங்கை அரசு இணங்கினால்தான் அனுசரணைப் பணியைத் தொடர முடியும் என நோர்வே திட்டவட்டமாகத் தெரிவித்து விட்டது என்பதும் - தெரிந்தவையே.

இந்த விடயத்தை அனுசரணை நடவடிக்கைக்கான நோர்வேயின் விசேட பிரதிநிதியும் அந்நாட்டு அமைச்சருமான எரிக்சொல்ஹெய்ம் பகிரங்கப்படுத்தியமைக்காக அவர் மீது கடும் கோபத்தில் இருக்கிறது இலங்கை அரசுத் தலைமை. இவ்விடயம் குறித்து நோர்வேயின் கொழும்புக்கான தூதுவரை அழைத்து விளக்கம் கோருமாறும் தமது வெளிவிவகார அமைச்சரை இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பணித்தார் என்று கேள்வி.

சரி. அமைதிப் பேச்சுகள் வெளிப்படையானவையாகவும், திறந்த வகையிலும் நடைபெறவேண்டும் என்ற ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மற்றும் அவரது கூட்டமைப்பைச் சேர்ந்த ஜே.வி.பியினரின் நிலைப்பாடு சரியானது எனின், இப்படி நிபந்தனை விதிக்கப்பட்டதை மறைக்காமல், பகிரங்கப்படுத்திய நோர்வேத் தரப்பு செயற்பாடு எப்படித் தப்பாகும்? தவறாகும்? அதை வெளிப்படுத்தியது ஏன் என்று இலங்கை அரசின் வெளிவிவகார அமைச்சினால் எழுப்பப்படும் கேள்வியே, அமைதி நடவடிக்கைகளை ஒளிவு மறைவாக நடத்தச் செய்யும் நோக்காகும் என்று சுட்டிக்காட்டியிருக்கின்றார் பஷீர் சேகுதாவூத்.

அதேபோன்று அமைதி முயற்சி விடயத்தில் வெளிப்படையான போக்கை இலங்கை அரசு காட்டவில்லை என்று நேற்று நாடாளுமன்றத்தில் இரா.சம்பந்தன் எம்.பியும் அரசு மீது காட்டமாகக் குற்றம்சுமத்தியிருக்கின்றார்.

''வெளிப்படைப் போக்கின்றி அரசு ஒளிவுமறைவுடன் செயற்படுவதை நாங்கள் அவதானிக்கின்றோம். சமாதான ஏற்பாட்டாளர்களான நோர்வேயினால் கிளப்பப்பட்டுள்ள பிரச்சினைகளையும் புலிகளை இராணுவ ரீதியில் அடக்கும் எத்தனத்தையும் மறைவில் அரசு கையாளுகின்றது.'' - என்று சம்பந்தன் குற்றம் சுமத்தியிருக்கின்றார்.

கிழக்கில் ஆயுதக் குழுக்கள், துணை இராணுவ அணிகள் போன்ற ஒட்டுப்படைகளை புலிகள் மீதும், புலிகளின் ஆதரவாளர்கள் மீதும் இலக்குவைத்து ஏவிவிட்டு, பின்புறத்தில் நின்று அவற்றை இயக்குவது மற்றும் தமிழ் - முஸ்லிம் வன்முறைகளையும், குழப்பங்களையும், பிரச்சினைகளையும் தூண்டிவிடுவது போன்ற பல்வேறு திரைமறைவு சதி நடவடிக்கைகளும் அரசுத் தரப்பினால் முன்னெடுக்கப்படுகின்றன.

இந்த ஒளிவு மறைவுப் போக்கிலிருந்து - திரை மறைவு சதி நடவடிக்கைகளிலிருந்து - வெளிப்பட்டு திறந்த மனதுடன், வெளிப்படையாகப் பேசுவதற்கும், செயற்படுவதற்கும் அரசுத் தரப்பு தயாராகாதவரை அமைதி முயற்சிகள் அர்த்தமுள்ள பாதையில் முன்னேறுவதற்கு வாய்ப்பேயில்லை.

உள்ளொன்று வைத்து வெளியில் வேறு விதமாகச் செயற்படும் தனது நாசகாரப் போக்கையும், தனது படைகளின் புலனாய்வுத்துறையின் சதித் திட்டங்களுக்கு இடங்கொடுத்துச் செயலாற்றும் பண்பையும் அரசுத் தலைமை மாற்ற வேண்டும். மாற்றினால்தான் அமைதி முயற்சிகள் ஆக்கபூர்வ திசையில் நகரமுடியும்.

# ஊடகவியலாளர் மீதான வன்முறை!
## கண்காணிப்புக் குழுவுக்கு மகஜர்

தமிழ் ஊடகவியலாளர் மீதான படுகொலைகள் மற்றும் தாக்குதல்கள் தொடர்பான பூர்வாங்க அறிக்கையைப் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழு வெளியிடவேண்டும்.

- இவ்வாறு கோரும் மகஜரைப் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் யாழ்அலுவலகப் பிரதிநிதியிடம் வடஇலங்கைப் பத்திரிகையாளர் சங்கம் நேற்றுக் கையளித்தது.

நேற்றுமுன்தினம் யாழ்.பல்கலைக் கழக மாணவர்களின் அமைதிப் பேரணி தொடர்பான செய்தி சேகரித்துக் கொண்டிருந்த செய்தியாளர்கள் படையினரால் தாக்கப்பட்டு அவர்களது தொழில் உபகரணங்களும் சேதப்படுத்தப் பட்டன.

இதனைக் கண்டித்து வடஇலங்கைப் பத்திரிகையாளர் சங்கத்தின் அழைப்பின் பேரில், கண்காணிப்புக் குழுவின் யாழ்.அலுவலகம் முன்பாக ஊடகவியலாளர்கள் நேற்றுமுற்பகல் 11 மணியளவில் அடையாள எதிர்ப்புப் போராட்டத்தை நடத்தினர். ஒரு மணித்தியாலம் இடம்பெற்ற அடையாளப் போராட்டத்தையடுத்து கண்காணிப்புக் குழுப் பிரதிநிதியிடம் மகஜர் கையளிக்கப்பட்டது.

அந்த மகஜரில் தெரிவிக்கப்பட்டதாவது:-

யாழ்.குடாநாட்டில் செய்தி சேகரிக்கும் பணியில் ஈடுபட்டுள்ள ஊடகவியலாளர்கள் மீதான படையினரின் தாக்குதல்கள் தொடர்கின்றன. பரமேஸ்வராச்சந்தியில் ஐந்து ஊடகவியலாளர்கள் மிக மோசமாகத் தாக்கப்பட்டுள்ளனர்.

ஊடகவியலாளர்கள் மீதான தாக்குதல்களைத் தடுத்து நிறுத்தக் கோரி போர்நிறுத்தக்கண்காணிப்புக் குழுப் பிரதிநிதிகள் முன்னிலையில் ஏற்கனவே இரு தடவைகள் யாழ்.மாவட்ட படைத் தளபதிகளுடன் எம்மால் நடத்தப்பட்ட பேச்சுகளின் போது வழங்கப்பட்ட உறுதிமொழிகள் எவையுமே இதுவரை நிறைவேற்றப்படவில்லை. இந்தநிலையில், இனிமேலும் அவர்களது உறுதிமொழிகளை எதிர்பார்த்திருக்கவும் நாம் தயாராக இல்லை.

இந்நிலையில் குடாநாட்டில் தமிழ் ஊடகவியலாளர்கள் மீது தொடரும் தாக்குதல்களைச் சர்வதேச சமூகத்தின் கவனத்துக்கு வெளிக்கொணரவேண்டிய பங்கு போர்நிறுத்த கண்காணிப்புக் குழுவையே சாரும். இதற்காக தமிழ் ஊடகவியலாளர் மீதான படுகொலைகள் மற்றும் நேரடித் தாக்குதல்கள் தொடர்பான பூர்வாங்க அறிக்கையொன்றைக் கண்காணிப்பு குழு வெளியிடவேண்டும் - இவ்வாறு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஒ-3-12-86-190)



போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழு அலுவலகம் முன்பாக ஊடகவியலாளர்கள் அடையாளப் போராட்டம் நடத்துவதையும் மகஜர் கையளிப்பதையும் படங்களில் காணலாம். (படங்கள்: பகீரதன்)

# கொடிகாமம் பஸ் நிலையம் விரைவில் பருத்தித்துறை வீதிக்கு இடம் மாற்றம்

தென்மராட்சி,டிசெ.21

கொடிகாமம் பஸ் நிலையம் விரைவில் பருத்தித்துறை வீதிக்கு மாற்றப்படவுள்ளது.

கண்டி வீதியில் அமைந்துள்ள கொடிகாமம் பஸ் நிலையத்தில் ஏற்படும் போக்குவரத்து நெருக்கடியைத் தவிர்க்கும் முகமாக கொடிகாமம் - பருத்தித்துறை வீதியில் - பிரதேச சபை தலைமை அலுவலகத்திற்கு முன்பாக - புதிய பஸ் நிலையம் அமைக்கப்பட்டுள்ளது.

புதிய பஸ் நிலையம், இம்மாத இறுதிக்குள் திறக்கப்பட்டு பயணிகள் வாகனங்கள் பயன்படுத்த அனுமதிக்கப்படுமென பிரதேச சபைச் செயலாளர் கு.ந. பாலச்சந்திரன் தெரிவித்தார். (ஒ-117)

# ஆலயங்களில் பூசையின் பின்னர் ஆன்மீக உரை

கொழும்பு,டிசெ.21

ஆலயங்களில் அன்றாடப் பூசையின் முடிவில் ஆன்மீக உரை நிகழ்த்துவதை நடைமுறைப்படுத்துவது தொடர்பாக அகில இலங்கை இந்துமாமன்றத்தினர் ஆலய சிவாச்சாரியார்கள் மற்றும் தர்மகர்த்தா 'சபையினருடன் கலந்துரையாடவுள்ளனர்.

எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு கொழும்பில் உள்ள இந்துமாமன்றத்தின் தலைமையகப் பிரார்த்தனை மண்டபத்தில் இக் கலந்துரையாடல் நடைபெறவுள்ளது.

மட்டுவில் சிவஸ்ரீ சி.சோமசுந்தரக் குருக்கள் தலைமையில் நடைபெறவுள்ள இக் கலந்துரையாடலில், இந்து ஆலய அறங்காவலர் சபையினரையும் ஆலயக் குருமார்களையும் கலந்துகொள்ளுமாறு இந்துமாமன்றப் பொதுச் செயலாளர் க.நீலகண்டன் கேட்டுள்ளார். (ஒ-202)

# மனித உரிமைக் குழுவின் அதிகாரி காயமடைந்தோரிடம் விசாரணை

யாழ்ப்பாணம்,டிசெ.21

யாழ்.பல்கலைக்கழக சமூகத்தினரின் பேரணி மீது படையினர் நடத்திய தாக்குதலில் படுகாயமடைந்த பேராசிரியர் கள், மாணவர்கள் மற்றும் ஊடகவியலாளர்களை மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ்.அலுவலக இணைப்பதிகாரி றோஹித பிரியதர்ஷன நேற்றுப் பார்வையிட்டார்.

நேற்றுமுன்தினம் யாழ்.பல்கலைக் கழக சமூகத்தினர் அமைதிப் பேரணி ஒன்றினை நடத்தினர். அப்போது அதனை வழிமறித்த படையினர் கண்மூடித்தனமான தாக்குதலை மேற்கொண்டனர்.

இதில் கலைப்பீடாதிபதி, பொருளியல்துறை விரிவுரையாளர், மருத்துவ பீட மாணவர் ஒன்றியத்தலைவர், ஊடகவியலாளர்கள் உட்படப் பன்னிரெண்டுக்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்தனர். இவர்கள் யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டனர்.

நேற்று முற்பகல் 11 மணியளவில் யாழ்.ஆஸ்பத்திரிக்குச் சென்ற மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ்.அலுவலக அதிகாரி றோஹித பிரியதர்ஷன அவர்களைப் பார்வையிட்டு சம்பவம் பற்றிய விவரங்களைக் கேட்டு, பதிவு செய்துகொண்டார்.

இதேவேளை, யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கி.சிவநேசனும் அவர்களைப் பார்வையிட்டு அவர்களின் நலன்களைக் கேட்டறிந்தார். (ஒ-13)

# புனரமைக்கப்பட்ட விடுதிகள் மந்திகை ஆஸ்பத்திரியில் திறப்பு

யாழ்ப்பாணம்,டிசெ.21

ஆழிப்பேரலை அனர்த்தத்தின் ஓராண்டு நிறைவையொட்டி 'எ.எஸ்.பி. போர்த்துக்கல்' நிறுவனத்தின் அனுசரணையுடன் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் புனரமைக்கப்பட்ட அவசர சிகிச்சைப் பிரிவு, பிரசவ விடுதி ஆகியவை எதிர்வரும் சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு திறந்து வைக்கப்படவுள்ளன.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு - கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி எஸ். குமாரவேற்பிள்ளை கலந்துகொள்வார்.

இதேவேளை- ஆழிப்பேரலை அனர்த்தத்தின் ஓராண்டு நிறைவை ஒட்டி விசேட மருத்துவமுகாம் ஒன்றும் நடத்தப்படவுள்ளது. இந்த மருத்துவமுகாம் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு மருதங்கேணி அரசினர் வைத்தியசாலையில் நடைபெறவுள்ளது.

இதில் யாழ்.போதனா வைத்தியசாலையைச் சேர்ந்த வைத்திய நிபுணர்கள் கலந்துகொண்டு ஆலோசனை வழங்கவுள்ளனர். (ஐ-202)

## உதயவாக்கு

பிறருக்கு உபயோகப்படாது இருக்கும் கல்வியும் அறிவும் மண்ணில் புதைத்து வைக்கப்பட்டிருக்கும் திரவியத்திலும் அதிகம் வீணானவை.

- ஓர் அறிஞர்.

## நாளை

மார்கழி 7
வியாழக்கிழமை
22.12.2005
திதி: ஸ்ப்தமி
நட்சத்திரம் : பூரம்
பின்னிரவு :12.36 வரை
சுபநேரம் : 07.55-09.25
ராகுகாலம் : 01.55-.03.25
(யாவும் பழைய நேரப்படி)

# ஜி.சீ.ஈ.விடைத்தாள்கள் மதிப்பீட்டுப்பணி 31 முதல்

கொழும்பு,டிசெ.21

நாடளாவிய ரீதியில் தற்போது நடைபெற்றுவரும் ஜி.சீ.ஈ. சாதாரணதரப் பரீட்சை விடைத்தாள்கள் திருத்தும் பணிகள் இந்த மாதம் 31ஆம் திகதி முதல் ஆரம்பமாகி ஜனவரி மாதம் 7ஆம் திகதி முடிவடையும் என பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அனுர எதிரிசிங்க தெரிவித்தார்.

ஜி.சீ.ஈ.சாதாரண தர விடைத்தாள் மதிப்பீட்டின் போது இம்முறை புதிதாக பல விசேட நடைமுறைகள் பின்பற்றப்படவுள்ளன.

அதன்படி மதிப்பீட்டு நடவடிக்கைகளில் ஈடுபடும் உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை 12ஆயிரமாக அதிகரிக்கப்படும். விடைத்தாள் மதிப்பீட்டு நடவடிக்கைக்காக ஒதுக்கப்படும் 12 நாள்களை 8 நாள்களாகக் குறைக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

இதன்படி எதிர்வரும் 31ஆம் திகதி ஆரம்பமாகும் விடைத்தாள் மதிப்பீட்டுப் பணிகள் யாவும் ஜனவரி மாதம் 7ஆம் திகதி நிறைவடையும்.

இதன்மூலம் பரீட்சை பெறுபேறுகளை விரைவில் வெளியிட முடியும் என ஆணையாளர் நாயகம் அனுர எதிரி சிங்க மேலும் தெரிவித்தார். (ஐ-204)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி



## நாட்டுப்பற்றாளர்
## திரு.ஆ.சி.குணரட்ணம்

**தோற்றம் 01.11.1938**

- முன்னாள் உதவிப்பணிப்பாளர் விளையாட்டுத்துறை வடக்கு – கிழக்கு மாகாண கல்வி, கலாசார விளையாட்டுத்துறை அமைச்சு
- இணைப்பாளர் – இளைஞர் விவகாரம் வடக்கு – கிழக்கு மாகாண கல்வி, கலாசார விளையாட்டுத்துறை அமைச்சு
- உதவிச்செயலாளர் – இலங்கை அமெச்சூர் மெய்வன்மைச் சங்கம்
- முன்னாள் உதவித் தலைவர் – இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனம்
- உறுப்பினர் – சர்வதேச உதைப்பந்தாட்ட மத்தியஸ்தர் சங்கம்.
- ஆலோசகர் – தமிழ் மக்கள் பேரவை, திருமலை மாவட்டம்.
- இணைப்பாளர் – தமிழீழ விளையாட்டுத்துறை.
- முகாமையாளர் – 10ஆவது மெய்வல்லுநர் போட்டிக்கான இலங்கை தேசிய குழு.
- முகாமையாளர் – உலக மெய்வல்லுநர் போட்டிக்கான இலங்கை தேசிய குழு.
- தர்மகர்த்தா – தில்லைவெளி பிடாரி அம்மன் ஆலயம்.
- அகில இலங்கை சமாதான நீதவான்.

**மறைவு 16.12.2005**

தமிழீழ தலைநகரில்
தமிழ் மக்கள் தலைநிமிர
தன்னையே அர்ப்பணித்து
தமிழ் வாழ தான் பிறந்த இனம் வாழ
தளராது பணி செய்து
தலைமைகள் பல ஏற்று
தமிழீழ விளையாட்டுக்குழுவிற்கு
தலைமகனாய் வெளிநாடு பல சென்று
தமிழ் மக்கள் வீரத்தை விளையாட்டின் சாதனையை
தமிழினம் சார்பில் சரித்திரத்தில் பொறிப்பதற்கு
ஓடி உழைத்த குணக்குன்றே குணம் ஐயா.

தேடியும் இனிக்கிடையார் உனைப்போல
ஒரு வீரன்
ஆடிப்போய்விட்டோம் ஆழிப்பேரலைத்
துயர்போல
வாடித்துடிக்கின்றோம் வாய்திறந்து பேசாயோ?

தமிழ் மக்கள் பேரவையின்
தகைசான்ற பெரியோனாய்
பக்கத்துணை நின்று–பகைவர்க்கு
வேங்கையென
ஓங்கி ஒலித்து – ஒளிர்விடும் சோதியென
எமக்குத்துணை நின்ற இனியவனே
குணமையா!
ஏங்கித் தவிக்கின்றோம்
இருவிழியைத் திறவாயோ?

மலரும் தமிழீழம்
மண்ணுக்கு விடிவு வரும் – எம் தலைவன்
வழியினிலே தமிழ் மக்கள் தலைநிமிர்வர்
என்றெல்லாம் சொன்னாய்
எதிரிக்குச் சவால் விட்டாய்
உன் கனவு பலிக்கும் நாள்
எமை நோக்கி வருகையிலே
ஏன் ஐயா நீ மறைந்தாய்?
தமிழீழப் புல்லும் தமிழுயிர்கள் அத்தனையும்
உனக்காக அழுவதனை ஒருதரங் கேட்பதற்கு
காதைத் திற ஐயா காவிய நாயகனே!



நாட்டுப்பற்றாளர் கௌரவம்
(பொறுப்பாளர் – அரசியல்துறை, தமிழீழம்)



நினைவுரை–அறியப்படாத ஆழக்கிணறுகளில் ஒன்று
(பொறுப்பாளர்–கலை பண்பாட்டுக்கழகம், தமிழீழம்)



அஞ்சலி உரை–சிறுவனுக்கு சிறுவன்
இளைஞருக்கு இளைஞன் முதியவருக்கு முதியவர்
(பொறுப்பாளர்–தமிழீழ விளையாட்டுத்துறை, தமிழீழம்)

## நினைவுகளில் சில .........



விளையாட்டுத்துறை விரிவுரையின் போது...



அகில இலங்கை சமாதான நீதிவானாக
சத்தியப்பிரமாணம் எடுக்கும் போது...



பரிசளிப்பு விழா – அகில இலங்கை மென்பந்து
கிரிக்கட் போட்டி – 2001



அடிக்கல் நாட்டு விழா – காற்பந்தாட்ட
பயிற்சிக் கல்லூரி 14.05.2001



முகாமையாளராக – உலகமெய்வல்லுநர் போட்டி
2005 பின்லாந்து



தொண்டனாக, ஏழைகளின் நண்பனாக
இறப்பதற்கு சில நாள்களுக்கு முன் – நல்லூர்.

### அறிவித்தல்

இவரது புகழுடல் கொக்குவிலில் உள்ள அவரது இல்லத்தில் வைக்கப்பட்டுள்ளது. இன்று (21.12.2005) புதன்கிழமை காலை நடைபெறும் கிரியைகளின் பின்னர் 11.30 மணியளவில் கொக்குவில் மாயனத்தில் தகனம் செய்யப்படும் என குடும்பத்தினர் அறிவித்துள்ளனர்.

**யாழ்., திருமலை நண்பர்கள்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யுவதியின் படுகொலை; மக்கள் மீதான தாக்குதல்

# சமாதான முயற்சிகளுக்குக் கேடு விளைவிக்கக்கூடியவை

## விவசாய நுகர்ச்சிக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம்

யாழ்ப்பாணம்,டிசெ.21

புங்குடுதீவில் யுவதி கடத்தப்பட்டு படுகொலைசெய்யப்பட்டமை - பொதுமக்கள் மீதான தாக்குதல்கள் சமாதான முயற்சிகளுக்குக் கேடு விளைக்கக்கூடியவை.

- இவ்வாறு தெரிவித்துள்ளது யாழ். மாவட்ட விவசாய நுகர்ச்சிக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம்.

புங்குடுதீவுச் சம்பவம் குறித்து மேற்படி சமாசம் விடுத்துள்ள செய்திக் குறிப்பில்:-

தனது வீட்டில் இருந்து பக்கத்திலுள்ள தனது பெரியம்மா வீட்டிற்குச் சென்றுவரும் இளையதம்பி தர்சினி கடந்த சனிக்கிழமை வீட்டிற்குத் திரும்பாத நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ள செய்தி தமிழ்மக்களின் மனங்களை உறைய வைத்துள்ளது.

குடாநாட்டில் எமது மக்கள் மீது பாதுகாப்புப் படையினரின் கெடுபிடிகளும் தாக்குதல்களும் அதிகரித்து வருகின்றன. இது சமாதான முயற்சிகளுக்குக் கேடு விளைவிக்கக்கூடியது.

புங்குடுதீவு கடற்படையின் பூரண கட்டுப்பாட்டிலுள்ளது. கடற்படைத் தளத்திற்கு அண்மையில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது. படையினரே பாலியல் வல்லுறவிற்குட்படுத்தி கொலைசெய்துள்ள இத்துயரச்சம்பவம் மிகக் கொடுமையானது.




இதனை யாழ். மாவட்ட ப.நோ.கூ.சங்கங்கள் வன்மையாகக் கண்டிக்கின்றன. உடனடியாகக் குற்றவாளி நீதி முன் நிறுத்தப்படவேண்டும். புங்குடுதீவு மக்கள் தமது நாளாந்த வாழ்வை மேற்கொள்ள அச்சம் கொண்டுள்ளனர். வெளியில் நடமாடமுடியாத பயப்பீதியுடன் பொழுதைக் கழிக்கின்றனர்.

போர்நிறுத்தம், புரிந்துணர்வு ஒப்பந்தம் அமுலிலுள்ள சூழலில் படையினரது அடாவடித்தனங்கள் அதிகரித்து வருவது மீண்டும் யுத்தம் ஒன்றைப் படையினர் விரும்புகின்றனர் என்பது வெளிப்படுகிறது.

போர்நிறுத்தம், புரிந்துணர்வு ஒப்பந்தத்தைச் சரிவரக் கடைப்பிடிக்கப் படையினர் முன்வரவேண்டும். புதிய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ உடனடியாகத் தலையிட்டு தமிழ்ப்பகுதிகளில் இயல்பு நிலை தோற்றுவிக்க உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டும் - என்று அதிலுள்ளது. (எ)



யாழ். மாவட்ட சர்வோதய நிறுவனத்தின் சார்பில் அதன் இணைப்பாளர் இ.சிவசுப்பிரமணியம், பருத்தித்துறை முனை கிராமத்தைச் சேர்ந்த கடற்றொழிலாளிக்குக் கட்டுமரம் மற்றும் மீன்பிடி உபகரணங்கள் வழங்குவதைப் படத்தில் காணலாம். (படம்: நல்லூர் செய்தியாளர்)

## சாரதாதேவி ஜெயந்திவிழா

யாழ்ப்பாணம்,டிசெ.21

தூய அன்னை ஸ்ரீ சாரதாதேவியாரின் 153ஆவது ஜெயந்தி விழா நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு தாவடி இ.த.க. பாடசாலை பழைய கட்டடத்தில் இயங்கும் சேவாச்சிரமத்தில் நடைபெறவுள்ளது.

வலிகாமம் கல்வி வலய சங்கீத ஆசிரிய ஆலோசகர் திருமதி விமலாதேவி நாகேஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். போதனா வைத்தியசாலையின் முன்னாள் பணிப்பாளரும் தற்போதைய தெல்லிப்பழை சுகாதார வைத்திய அதிகாரியுமான வைத்தியகலாநிதி செல்வி நவமலர் கனகரட்ணம் கலந்துகொள்வார்.

ஆசியுரையை தாவடி அம்பலவாண வேதவிநாயகர் ஆலயப் பிரதமகுரு பிரம்மஸ்ரீ கு.பரமசிவக்குருக்கள் நிகழ்த்துவார்.

இணுவில் மத்திய கல்லூரி ஆசிரியர் திருமதி ஈஸ்வரி தர்மலிங்கம் 'தாய்மையே இறைவனின் முதல் வடிவம்' என்னும் பொருளில் கருத்துரை நிகழ்த்துவார்.

சேவாச்சிரம அறநெறிப்பாடசாலையின் மாணவர்களுக்கு நடத்தப்பட்ட பரீட்சை பண்ணிசை, பேச்சுப்போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசில் வழங்கும் நிகழ்வும் இடம்பெறும். (ஐ-204)

## மதுபோதையில் தகராறு செய்த நபர்கள் மீது நையப்புடைப்பு

கோண்டாவில்,டிசெ.21

மதுபோதையில் வீதியில் நின்று தகராறு செய்தவரை இளைஞர்கள் நையப்புடைத்து விரட்டினர்.

இச்சம்பவம் பலாலி வீதி, கோண்டாவில், வாமஸ் சந்தியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4.30 மணியளவில் இடம் பெற்றது.

அப்பகுதியில் உள்ள மதுபான நிலையத்தில் மது அருந்திய நபர் பலாலி வீதியில் பயணித்துக்கொண்டிருந்த வழிப்போக்கர்களுடன் தகராறில் ஈடுபட்டதுடன், அநாகரிகமாக நடந்துகொண்டார். இதனை அவதானித்த இளைஞர்கள் சிலர் சம்பந்தப்பட்ட நபரை அணுகி கலாசாரத்தைச் சீர்குலைக்கும் வகையில் செயற்படாமல் வீடு செல்லுமாறு கேட்டனர். அப்போது அந்த நபருடன் மது போதையில் நின்றிருந்த சிலர் இளைஞர்களைத் தாக்க முற்பட்டனர். இதனையடுத்து அவர்களை இளைஞர்கள் நையப்புடைத்து விரட்டினர். (ஒ-49)

## மதகைத் திருத்தக் கோரிக்கை

அரியாலை,டிசெ.21

யாழ். பிரதம தபாலகத்திற்கு முன்பாக உள்ள மதகு தூர்ந்துபோயுள்ளதால் அதனை அண்டிய பகுதிகளில் மழைவெள்ளம் தேங்கி நிற்கின்றது. எனவே, அந்த மதகைப் புனரமைக்கவேண்டும்.

இவ்வாறு யாழ். மாவட்டக் கூட்டுறவுக் கிராமிய வங்கிகளின் சமாசம் யாழ். அரச அதிபரைக் கோரியுள்ளது.

யாழ். பிரதம தபாலகத்திற்கு முன்பாக அமைந்துள்ள மேற்படி சமாச அலுவலகத்தில் அண்மையில் பெய்த பலத்தமழை வெள்ளம் உட்புகுந்தது. இதனால் பணியாளர்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டனர்.

சமாசத்திற்கு முன்பாக கே.கே.எஸ். வீதியிலுள்ள மதகு தூர்ந்துபோயுள்ளதால் வெள்ளநீர் வழிந்தோட இடமின்றிக் கட்டடங்களுக்குள் சென்றது. (ஒ-17-202)

## புங்குடுதீவுக்கு விரைவில் மின்சாரம்

புங்குடுதீவு,டிசெ.21

புங்குடுதீவுப் பிரதேசத்திற்கு விரைவில் மின்சாரம் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது. எதிர்வரும் தைப்பொங்கல் தினத்துக்கு முன்னர் புங்குடுதீவில் ஒரு பகுதிக்கு மின்சாரம் வழங்கப்படவுள்ளதாகவும்- ஏனைய பகுதிகளுக்கு எதிர்வரும் மார்ச் மாத இறுதிக்குள் மின்சாரம் வழங்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.(ஒ-202)

## நத்தார் விழா

தென்மராட்சிப் பிரதேச செயலக நலன்புரிச் சங்கத்தின் ஒளிவிழா இன்று பிற்பகல் 2.15 மணிக்கு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும்.

பிரதேச செயலர் செ.ஸ்ரீநிவாசன் தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் சாவகச்சேரி புனித லியோரியார் தேவாலய பங்குத்தந்தை அருட்திரு. டொ.இரவிச்சந்திரன் அடிகளின் நற்செய்தியும் கிறிஸ்மஸ் நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன. (ஒ-117)

## 350 ரூபா விலையில் உரம் யாழ்.விவசாயிகளுக்கும் கிட்டும்

யாழ்ப்பாணம்,டிசெ.21

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் உறுதிமொழிக்கு அமைவாக யாழ். மாவட்ட விவசாயிகளுக்கு 50 கிலோ உரம் 350 ரூபாவிற்கு வழங்கும் திட்டம் அமுல் செய்யப்படவுள்ளது.

- இவ்வாறு யாழ்.மாவட்ட கமநல சேவை உதவி ஆணையாளர் எஸ்.சுந்தரேசன் தெரிவித்தார்.

உரமானியம் வழங்கும் திட்டத்தின் கீழ் யாழ்.மாவட்ட விவசாய சம்மேளனங்களில் பதிவு செய்யப்பட்ட விவசாயிகளுக்கு எதிர்வரும் ஜனவரி மாதம் முதல் உரம் வழங்கப்படவுள்ளது.

உரமானியம் பெறவிரும்புபவர்கள் அதற்குரிய படிவங்களைப் பெற்றுப் பூர்த்தி செய்து விவசாய சம்மேளனங்களால் உறுதிப்படுத்தி அந்தந்தப் பகுதி கமநல சேவை நிலையங்களில் ஒப்படைக்க வேண்டும்.

விவசாயத் திணைக்களத்தால் யாழ். மாவட்ட விவசாயிகளுக்கு வழங்கவென 100 மெற்றிக்தொன் உரம் ஒதுக்கப்பட்டுள்ளது. அவை கொழும்பிலிருந்து எடுத்து வரப்பட்டதும் விநியோகம் நடைபெறும் - என்று எஸ்.சுந்தரேசன் மேலும் தெரிவித்தார். (ஐ-204)



'அபிவிருத்திக்கான சமூக அமைப்புகளின் வலையமைப்பு' (சொண்ட்) நிறுவனத்தில் அண்மையில் தொழில் திணைக்களத்தின் அனுசரணையுடன் நடைபெற்ற சிறுவர் விழிப்புணர்வுக் கருத்தரங்குகளில் உதவித் தொழில் ஆணையாளர் முத்துக்குமாரசாமி உரையாற்றும்போது எடுக்கப்பட்ட படம். அருகில் சிறுவர் அபிவிருத்தி நிலையச் செயலாளர் பாலதயானந்தனும் காணப்படுகிறார். (ஐ)

## ஆழிப்பேரலை சொத்து இழப்புக்கு நஷ்ட ஈடு இல்லை என முறைப்பாடு

யாழ்ப்பாணம்,டிசெ.21

கடந்த வருடம் ஏற்பட்ட ஆழிப்பேரலை அனர்த்தத்தின்போது பெறுமதியான தொழில் உபகரணங்களை இழந்த ஒருவருக்கு நஷ்ட ஈடு எதுவும் வழங்கப்படவில்லை என்று தெரிவித்து சம்பந்தப்பட்ட நபர் சண்டிலிப்பாய் பிரதேச செயலரிடம் முறைப்பாட்டு மகஜர் ஒன்றைக் கையளித்துள்ளார்.

அந்த முறைப்பாட்டின் பிரகாரம் மாரீசன் கூடலைச் சேர்ந்த அ.அருள்ஞானசீலன் என்பவரின் 3 லட்சம் ரூபா பெறுமதியான கடற்றொழில் உபகரணங்கள் ஆழிப்பேரலையால் அழிவடைந்துள்ளன.

ஆழிப்பேரலையால் பாதிப்படைந்த பிரஸ்தாப நபர் முல்லைத்தீவிலிருந்து இடம்பெயர்ந்து சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் தனது இழப்பீட்டைப் பதிவு செய்துள்ளார். ஆயினும் அவரது சொத்துக்கான இழப்பீட்டுத் தொகை எதுவும் இதுவரை வழங்கப்படவில்லையெனத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. (ஐ-202)

## புகையிலைச் செய்கையாளருக்கு கடும் மழையால் மேலதிக செலவு

மண்டைதீவு,டிசெ.21

மண்டைதீவு கிராமப் பகுதியில் புகையிலைத் தோட்டங்கள் அண்மையில் பெய்த மழையாலும் வீசிய கடும் காற்றாலும் சேதமடைந்துவிட்டன என்று தெரிவிக்கப்படுகிறது. இதனால், புகையிலைச் செய்கையாளர்களுக்கு மேலதிக செலவு ஏற்பட்டுள்ளது.

மண்டைதீவு முதலாம் வட்டாரத்தில் உள்ள செம்மண் தோட்டங்களில் இருந்து புகையிலைச் செடிகள் வெள்ளத்தால் அடித்துச்செல்லப்பட்டன. இவை உட்பு வெளிக்குளப் பகுதியில் ஒதுங்கின. சில பகுதிகளில் மண்ணால் புகையிலைச் செடிகள் மூடப்பட்டு புதையுண்டு இருந்தன.

கடும் மழை வெள்ளத்தால் தோட்டங்களின் மண் இறுகி கடினமாகிவிட்டதால் மீள் நடுகைக்காகத் தோட்டங்கள் தற்போது மீண்டும் கொத்திப் பண்படுத்தபட்டு வருகின்றன.

இதனால், மேலதிக பணச் செலவு ஏற்பட்டுள்ளதாகப் புகையிலைச் செய்கையாளர்கள் தெரிவித்தனர். (ஒ-88)

## வல்வை ஆதி கோயிலடிப் பகுதியில் 'மக்கள் திலகம்' எம்.ஜி.ஆருக்குச் சிலை

கரவெட்டி,டிசெ.21

தமிழகத்தின் முன்னாள் முதலமைச்சர் மக்கள் திலகம் எம்.ஜி.இராமச்சந்திரனுக்கு வல்வையில் அவரது உயரச்சிலை நிறுவப்படுகின்றது.

இந்தச் சிலை எதிர்வரும் 24ஆம் திகதி சனிக்கிழமை திரைநீக்கம் செய்யப்படும்.

வல்வை, ஆலடிச் சந்தியிலுள்ள மாவீரர் நினைவுப் பூங்காவில் இந்தச்சிலை நிறுவப்படுகின்றது.

தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கான உந்துசக்திகளில் ஒருவராகச் செயற்பட்ட அமரர் எம்.ஜீ.ஆருக்கு நன்றி செலுத்தும் முகமாக வல்வை ஆதிகோயிலடி பொது மக்கள் இந்தச்சிலையை நிறுவி திரைநீக்கம் செய்யவுள்ளனர். (ஐ-70)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தசாக கிருகயஜ்ஞ அழைப்பு

அன்புடையீர்,



சென்ற 10-12-2005 சனிக்கிழமை சிவபதமடைந்த
எமது குடும்பத்தலைவர்
பிரம்மஸ்ரீ கார்த்திகேயக் குருக்கள் சபாரட்ணக் குருக்கள்
அவர்களின் ஆத்மசாந்திக் கிரியைகள்
பின்வரும் தினங்களில் நடைபெறும். அனைவரும் வந்து
பிரார்த்தனைகளில் கலந்துகொள்ளும்படி அன்புடன்
வேண்டுகின்றோம்.

22-12-2005 வியாழன் முற்பகல் 10 மணி - தசாகம்
23-12-2005 வெள்ளி முற்பகல் 10 மணி - ஏகோதிஷ்டம், மாசிகம்
24-12-2005 சனி முற்பகல் 10 மணி - சபிண்டீகரணம்
25-12-2005 ஞாயிறு நண்பகல் 12 மணி - கிருகயஜ்ஞம் (சமாராதனை)

கோவிற்கடவை,
துன்னாலை. (44317)(26-19-16) — குடும்பத்தினர்.

# கிராம அலுவலருக்கான பதவி உயர் பரீட்சை

வலி.வடக்கு,டிசெ.21

கிராம அலுவலர்களை நிர்வாகம், அதி சிறப்புத் தரத்திற்கு பதவி உயர்த்துவதற்காக மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை எதிர்வரும் 24 ஆம் திகதி சனிக்கிழமை கொழும்பில் இடம்பெறவுள்ளது.

இப்பதவி அகில இலங்கை ரீதியிலான சேவைக்கு உட்படுத்தப்பட்டது என்ற வகையில் இப் பரீட்சை கொழும்பில் மட்டும் இடம் பெறவுள்ளது.

யாழ்.மாவட்ட கிராம அலுவலர்கள் சுமார் நூற்றிஐம்பதுக்கும் மேற்பட்டவர்கள் இப் பரீட்சைக்குத் தோற்றவுள்ளனர். (ஒ-86)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 20 - 03 - 1928

உதிர்வு 01 - 01 - 2005

## திருமதி தங்கம்மா கனகரத்தினம்

அன்பின் உறைவிடமாய்
அமைதியின் திருவுருவாய்
பாசத்தின் இருப்பிடமாய் எம்
இதயத்தில் கலந்த எம் தெய்வமே!
எம்மோடு நீங்கள் வாழ்ந்த காலங்களும்
உங்கள் அன்பான திருவுருவமும்
என்றும் எம் நெஞ்சை விட்டகலாது!

உங்கள் நினைவில் உங்கள் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

பழைய நீதிமன்ற வீதி,
மல்லாகம். (44315)(26-19-16)

மகன்(ரவி - மில்) மல்லாகம்,
சகோதரி, சரஸ்வதி.

# IIS COMPUTER COURSES

சர்வதேச அங்கீகாரம் பெற்ற கணனி நிறுவனம் ஒன்றின் சான்றிதழ்களைப் பெற்றுக்கொள்ளக் கூடிய ஓர் அரிய சந்தர்ப்பத்தைத் தவறவிடாதீர்

**01.01.2006**
அன்று பதிவினை மேற்கொள்ளும் அனைத்து மாணவர்களுக்கும்
பதிவுக்கட்டணத்தில்
**50%**
கட்டணச்சலுகை வழங்கப்படும்

## New Batches Start on


Batch 1 [Weekend] : 01.01.2006
Batch 2 [Weekday] : 03.01.2006
Batch 3 [Weekday] : 11.01.2006
Batch 4 [Weekend] : 14.01.2006
at 10.00 A.M.

| பயிற்சி நெறிகள் | | வழமையான கட்டணம் | சலுகைக் கட்டணம் |
|---|---|---|---|
| Diploma in MS Office | | ~~4000/=~~ | 2000/= |
| Diploma in Desk Top Publishing | | ~~4000/=~~ | 2000/= |
| Diploma in Internet Technology | | ~~6000/=~~ | 3000/= |
| Diploma in Hardware Technology | | ~~7000/=~~ | 3000/= |
| Diploma in Computer Programming | | ~~10000/=~~ | 6000/= |
| PageMaker<br>Flash | CorelDRAW<br>Photoshop | ~~1500/=~~ | 1000/= |

கணனிக் கல்விக்கு தனித்துவம் மிக்க IIS நிறுவனத்தில் இணைவதனூடாக கணனி உலகில் நீங்கள் அங்கீகரிக்கப்படுகின்றீர்கள்

**INSTITUTE OF INFORMATICS STUDIES (IIS)**
# 100, Clock Tower Road, Jaffna
T.P.No. : 021 222 2831
Email : iiscc@sltnet.lk

# 4 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அன்னை மடியில் 15 - 06 - 1935

ஆண்டவன் அடியில் 21 - 12 - 2001

## அமரர் மரியாம்பிள்ளை வைற்றஸ்


(ஓய்வுபெற்ற உபதபாலதிபர், தாழையடி)

அன்பின் இருப்பிடமே! ஆசையின் உறைவிடமே!
இல்லத்து அரசனாய் எமை இவ்வுலகில் வாழ வழிகாட்டிய – தெய்வமே!
உலகம் போற்றிட வேணுமென உங்கள் சிந்தனைதனில்கொண்டு
என்னை உயர்த்திட்ட அப்பாவே!
ஆறாத்துயர் நின்று உம் ஆத்மா சாந்தியடைய வேண்டுகின்றோம்.

தகவல்:
ஜெபா(சுவிஸ்). (44202)(26-19-16)

தங்கள் பிரிவால் துயருறும்:
மனைவி, மகன், குடும்பம்.

# மரண அறிவித்தல்



## செல்லையா தம்பித்துரை

[ஓய்வுபெற்ற நீதிமன்ற முதலியார் Magistrate Courts,கொழும்பு, கப்பல்துறை பிரதம அத்தியட்சகர்]

182, சேர் பொன். இராமநாதன் வீதி, திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும் 'ராஜ்குடில்' ஆடியபாதம் வீதி, கொக்குவில் மேற்கு, கொக்குவிலை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா தம்பித்துரை அவர்கள் 14.12.2005 புதன்கிழமை காலை சிவபதமடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லையா-தங்கம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற சின்னையா - செல்லத் துரை தம்பதியரின் மருமகனும் காலஞ் சென்ற செல்லையா சீவரத்தினம் அவர்களின் அன்புச் சகோதரனும் பராசக்தியின் அன்புக் கணவரும் புவிராஜ் (ராஜன் - கனடா), பிருதிவிராஜ் (ரஞ்சன் -லண்டன்), சஞ்சீவராஜ் (குட்டி - லண்டன்), சண்முகராஜ் (தயாளன் -கனடா), பகீரதராஜ் (ஜெயன் -பகீர்-World vision, முல்லைத்தீவு), சுகுணராஜ் (சுதன் - கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும் சாந்தி, சந்திரபவானி, தர்ஷினி, கோகிலா ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆராதிகா, அர்ச்சுனராஜ், ராதவி, டிலான் ஆகியோரின் அருமைப் பேரனும் திருமதி மனோரஞ்சிதமலர் சீவரத்தினம் அவர்களின் மைத்துனரும் சீ.செல்வநாயகம் (செல்வா - சமுர்த்தி முகாமையாளர் - மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்) அவர்களின் சிறிய தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.12.2005) புதன்கிழமை அவரது இல்லத்தில் முற்பகல் 10 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக முற்பகல் 11.30 மணியளவில் கோம்பையன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

'ராஜ்குடில்'
ஆடியபாதம் வீதி,
கொக்குவில் மேற்கு, கொக்குவில்.
094 021 222 7467, 094 0776142584 (44306)(26-19-16)

தகவல்:
குடும்பத்தினர்.

# திருவாசக முற்றோதல்

யாழ்ப்பாணம்,டிசெ.21

உடுவில் கிழக்கு, கற்பகப் பிள்ளையார் கோயிலில் திருவெம்பாவை உற்சவத்தை முன்னிட்டு எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 6 மணி தொடக்கம் நண்பகல் 12 மணி வரை திருவாசக முற்றோதல் இடம் பெறவுள்ளது.(ஒ-202)

# மானிப்பாய் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம்

காலம்: 22-01-2006 ஞாயிற்றுக்கிழமை
நேரம்: பிற்பகல் 3 மணி
விடயம்:

1. பிரேரணைகள்
2. தலைவர், செயலாளர், பொருளாளர் பதவிக்குரிய வேட்புமனுக்கள் 21-12-2005 முதல் எதிர்வரும் 05-01-2006 பிற்பகல் ஒரு மணிக்கு முன்னர் எமக்குக்கிடைக்கக் கூடியதாக அனுப்பப்படல் வேண்டும்.

**குறிப்பு:** I ஆயுட் கால அங்கத்தவர்கள் தவிர்ந்த ஏனைய பழைய மாணவர்கள் வருடாந்த சந்தாவைச் செலுத்தித் தங்கள் அங்கத்துவத்தினைப் புதுப்பித்துக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

'ஓம் முருகா'
இல.01, கனகசபை வீதி,
மானிப்பாய். (44302)(26-19-16)

கௌரவ செயலாளர்,
சு.லீலாகிருஷ்ணன் J.P..


# நத்தார் – புதுவருடத்தை முன்னிட்டு அளப்பரிய அன்பளிப்புகள் இனாம்

kit

WESTERN UNION MONEY TRANSFER

வெளிநாட்டிலிருந்து உறவினர்கள்
WESTERN UNION மூலம் பணம் அனுப்பி பணப் பரிமாற்றல் இலக்கம் (MTCN 10 இலக்கங்கள்) உங்கள் கைகளில் கிடைத்துவிட்டதா?

வங்கிக்கணக்கு தேவையில்லை, 24 மணி நேரமும் ஒருசில நிமிடங்களில் உங்கள் கைகளில் பணத்துடன் அன்பளிப்பும் கிடைக்க உடன்நாடுங்கள்.
மேலும் சகல விதமான தொலைபேசி அட்டைகள் Dialog GSM இணைப்புகள் (SIM) மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளவும்,
உள்நாட்டு, வெளிநாட்டுக் கடிதங்கள், பொதிகள் உடனுக்குடன் அனுப்பிட




(C-46357)(45-15)

SRI MURUGAN
TELE COMMUNICATION
AGENCY POST OFFICE
303, K.K.S. ROAD, JAFFNA. T.P. : 021 222 5392.
E.mail : srimurugan@eureka.lk
இன்னும் பல சேவைகளையும், அன்பளிப்புகளையும் ஒரே கூரையின் கீழ் பெற்றுக்கொள்ளவும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆழிப்பேரலையில் பலியானோர் நினைவாக முல்லை. யாகப்பர் ஆலயத்தில் நினைவுத்தூபி

புதுக்குடியிருப்பு,டிசெ.21

முல்லைத்தீவு மாவட்டத்தில் ஆழிப்பேரலையின் போது பலியானவர்களின் நினைவாக நினைவுத்தூபி ஒன்று நிறுவப்பட்டு வருகின்றது.

ஆழிப்பேரலையால் அழிவடைந்த முல்லைத்தீவு புனித யாகப்பர் தேவாலயத்திலேயே இந்த நினைவுத்தூபி அமைக்கப்பட்டு வருகின்றது.

முல்லைத்தீவுப் பங்குத்தந்தை அருட்திரு. ஜேம்ஸ் பத்திநாதர் தலைமையில் பிரதேச மக்கள் ஒன்றிணைந்து இதனை அமைத்துவருகின்றனர். ஆழிப்பேரலை இடம்பெற்று ஒரு வருடம் பூர்த்தியாகும் எதிர்வரும் 26 ஆம் திகதி இந்த நினைவாலயம் திறக்கப்பட்டு நினைவு வழிபாடும் இடம்பெறவுள்ளன.

இந்த ஆலயத்தின் ஒவ்வொரு தூண்களிலும் இறந்தவர்களின் பெயர்கள் பொறிக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

நினைவு தினமன்று முற்பகல் 10 மணிக்கு சர்வமத பிரார்த்தனை இடம்பெறும். தற்காலிகக் கொட்டகைகள் அமைக்கப்பட்டு இறந்த மக்களின் உருவப்படங்கள் வைக்கப்பட்டு அஞ்சலி செலுத்தப்படும்.

இதேவேளை- அன்றைய தினம் பிற்பகல் 4 மணிக்கு முள்ளியவளை, கயட்டையில் உள்ள ஆழிப்பேரலையால் இறந்தவர்களை அடக்கம் செய்த இடத்தில் நினைவுத்தூபி திறப்புவிழாவும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் இடம்பெறவுள்ளன.

புதுக்குடியிருப்பு - ஒட்டுசுட்டான் வீதியில் ஐயன் கோயிலடியில் சடலங்கள் புதைக்கப்பட்ட இடத்திலும் நினைவுத்தூபித் திறப்பு விழாவும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் இடம்பெறும். (எ-353-202)

## மழைப் பாதிப்புக்கு உதவிப் பொருள்கள்

வெள்ளாங்குளம்,டிசெ.21

இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தின் மன்னார்க்கிளை மாந்தை மேற்குப் பிரதேச சபைக்குட்பட்ட பகுதியில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உலர் உணவு அற்ற நிவாரணப் பொருள்களை வழங்கியுள்ளது.

தேவன்பிட்டியைச் சேர்ந்த பாதிக்கப்பட்ட 180 குடும்பங்களுக்கு தலா ஆயிரம் ரூபா பெறுமதியான நிவாரணப் பொருள்கள் வழங்கப்பட்டுள்ளன.

விடத்தல் தீவு, கத்தாளம்பிட்டி, இலுப்பைக்கடவை, மூன்றாம்பிட்டி, பாலியாறு, சேவாசிரமம் ஆகிய கிராமங்களைச் சேர்ந்த மக்களுக்கும் இந்த நிவாரணப் பொருள்கள் வழங்கப்பட்டுள்ளன. (ஐ-415-202)



கௌதாரிமுனை அ.த.க. பாடசாலைக்கு 'யுனிசெவ்' நிறுவனம் புதிய கட்டடம் ஒன்றை அமைத்துக் கொடுத்துள்ளது. அந்தக் கட்டடத்தின் திறப்பு விழாவில் முன்னாள் மாகாணக் கல்விப் பணிப்பாளரும் 'யுனிசெவ்' நிறுவன இணைப்பாளருமான கே.கந்தசாமி கட்டடத்தினை நாடா வெட்டித்திறந்து வைப்பதைப் படத்தில் காணலாம். அருகில் பாடசாலை அதிபர் ஆர்.கலைச்செல்வன், 'யுனிசெவ்' நிறுவன சுகாதாரஉத்தியோகத்தர் ஆகியோரும் காணப்படுகின்றனர். (படங்கள்: ஆர்.பி.வசந்தன்- பூநகரிச் செய்தியாளர்)




## சுகாதாரத்துக்கு கேடு விளைவித்த அரைக்கும் ஆலைகள் மூடப்பட்டன

கிளிநொச்சி,டிசெ.21

பூநகரிப் பகுதியில் சுற்றாடல் சுகாதாரத்திற்கு கேடுவிளைவித்த அரிசியாலைகள், அரைக்கும் ஆலைகள் என்பன தமிழீழ சுகாதார சேவைகள் நடுவப்பணியகத்தினால் தற்காலிகமாக மூடப்பட்டுள்ளன.

பூநகரிப் பிரதேசத்திலுள்ள அரிசிஆலைகள், அரைக்கும் ஆலைகள், சிகை அலங்கரிப்பு நிலையங்கள் என்பவற்றில் தமிழீழ சுகாதார சேவையினரும், பூநகரி சுகாதாரப் பகுதியினரும் இணைந்து கடந்த 15ஆம் திகதி திடீர் பரிசோதனை மேற்கொண்டனர். இந்தத் திடீர் பரிசோதனை நடவடிக்கைகளின் போது அரிசிஆலைகள், அரைக்கும் ஆலைகளில் சுற்றாடல் சுகாதாரத்திற்கு ஊறுவிளைவிக்கும் வகையில் நீர் தேங்கிக் காணப்பட்டது. சுற்றுப்புறச் சூழல் சுகாதாரமற்ற முறையில் இருப்பதுவும் இனங்காணப்பட்டது.

இந்த நிலையங்களுக்கு ஏற்கனவே சுகாதார அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டிருந்தன. எனினும், அவற்றைப் பின்பற்றாது செயற்பட்டமையால் தமிழீழ சுகாதார சேவையினர் தற்காலிகமாக மூடியுள்ளனர்.எனத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-6)

# தமிழீழ தேசம் தன்னிறைவுடன் இயங்க வேண்டும்: பொருண்மிய மேம்பாட்டு நிறுவன நோக்கமும் அதுவே!

### வருடாந்த ஒன்று கூடலில் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன்

பரந்தன்,டிசெ.21

தமிழீழ தேசம் தங்கு நிலைப் பொருளாதாரத்தில் தங்கிநிற்காது தன்னிறைவுடன் வாழ வேண்டும். இத்தகைய உயர்ந்த நோக்குடனேயே ஆரம்பிக்கப்பட்டது தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம்.

- இவ்வாறு தெரிவித்தார் தமிழீழ அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன்.

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் வருடாந்த ஒன்றுகூடல் நிகழ்வு கடந்த சனியன்று நிறுவனத்தின் நடுவப்பணியகத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் கலந்துகொண்டு சிறப்புரையாற்றியபோதே அரசியல் துறைப் பொறுப்பளார் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் தெரிவித்ததாவது:-

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் ஒரு வியாபார நோக்கிற்கான நிறுவனம் அல்ல. இது முழுக்க முழுக்க தலைவரின் சிந்தனையில் உருவான கட்டமைப்பு.

மிக உக்கிரமாக போர் நடந்து கொண்டிருந்த நேரம் - ஆக்கிரமிப்புப் படைகள் எமது தேசத்தின் மீது கொடூரமான யுத்தத்தைத் திணித்து நின்ற நேரம் - நாங்கள் அவற்றுக்கெதிராகப் போராடிக் கொண்டிருந்த நேரத்தில் கூட எங்களுடைய தலைவர், நிறுவனத்தின் முக்கியத்துவத்தை உணர்ந்து அதற்கான அத்திவாரத்தை இட்டிருந்தார். இது இன்று வளர்ந்து வியாபித்து தமிழீழமெங்கும் செயற்பட்டுக்கொண்டிருக்கின்றது.

இந்நிறுவனம் ஒரு சேவை நோக்கம் கொண்ட கட்டமைப்பாக செயற்பட்டு வருகின்றது.

நாங்கள் தேசவிடுதலைக்காகப் போராடிக் கொண்டிருக்கின்றோம். எமது தேசத்தினுடைய பெருமளவிலான நிலப்பரப்புக்களை நாங்கள் மீட்டெடுத்து, எங்களுடைய மக்களுக்கான பாதுகாப்பையும் அவர்களுக்கான உறுதியான வாழ்வையும் ஏற்படுத்துவதற்காக முயன்று கொண்டிருக்கின்றோம்.

இந்த வகையில், தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் பணி மிகமிக முக்கியத்துவம் வாய்ந்தது. எங்களுடைய தேசத்தைப் பொறுத்தவரையில் இரு கண்கள் போல் கடல்வளம், நிலவளம் என்பன அமைந்துள்ளன.

விவசாயமும் கடற்றொழிலுமே எங்களுடைய முக்கிய வளமாகும். இந்த வளத்திலேயே எமது தேசம் முழு அளவில் தங்கி நிற்கிறது. இந்த வளங்களை முழுமையாகப் பயன்படுத்தி எங்களுடைய மக்கள் எவரிலும் தங்கி நிற்காமல் வாழவேண்டும்.

இதற்கான விழிப்பை நாம் உருவாக்க வேண்டும். புதிய மாற்றங்களை உருவாக்க வேண்டும். அப்போது தான் எமது தேசத்தை மிகப்பெரிய வளம்பொருந்திய தேசமாக உருவாக்கலாம். வளர்ச்சி அடைந்த பல நாடுகளுக்குச் சென்று பார்த்தபோதுதான் எங்களுடைய நாட்டின் செழிப்பு பற்றி புரிந்து கொள்ளமுடிந்தது. எங்களுடைய தேசத்திலே எந்தக் காலத்திலுமே உற்பத்தி செய்யக் கூடிய வளங்கள் நிறைந்து காணப்படுகின்றன. வெளிநாடுகளிலே உள்ள மக்கள் தமது பெருமுயற்சி காரணமாகவே உற்பத்திகளை மேற்கொள்கின்றனர். குறிப்பாகக் கூறின் பெரும் போராட்டத்திற்கு மத்தியிலே போராடித்தான் அவர்கள் உற்பத்திகளை மேற்கொள்கின்றனர்.

எனவே, திட்டமிட்ட முறையில் எமது மக்களின் உயர்ந்த உழைப்பினூடாகத் தேசத்தைக் கட்டியெழுப்புவோம் - என்றார்.

நடுவப் பணியகத்தின் நிர்வாக உத்தியோகத்தர் திருமதி ச.மதிவதனி தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் நிறுவனத்தின் பொறுப்பாளர் சி.கரிகாலன், துணைப் பொறுப்பாளர் சு.சின்னண்ணை, கிராமிய அபிவிருத்தி வங்கிப் பணிப்பாளர், நிறுவனத்தின் மாவட்ட இணைப்பாளர்கள் உட்படப் பலர் கலந்துகொண்டனர்.

நிகழ்வில் 10 வருடங்களுக்கு மேலாகப் பணியாற்றிய நிறுவனத்தின் பணியாளர்களும் சிறப்பாக நிர்வாகத்தை ஒழுங்குபடுத்திய நிர்வாகிகளும் கௌரவிக்கப்பட்டதுடன் அவர்களுக்குப் பரிசில்களும் வழங்கப்பட்டன. (எ-352-202)

## மனித உரிமைகள் தினத்தை முன்னிட்டு சிறப்பு நிகழ்வுகள்

பரந்தன்,டிசெ.21

சர்வதேச மனித உரிமைகள் தினத்தை முன்னிட்டு 'செடோ' நிறுவனமும், 'டெனிஸ்' அகதிகள் பேரவை நிறுவனமும் இணைந்து நடத்திய சிறப்பு நிகழ்வுகள் அண்மையில் உடையார்கட்டு மகாவித்தியாலயத்தில் இடம்பெற்றன.

இந்த நிகழ்வில் மங்கள விளக்கினை 'டெனிஸ்' அகதிகள் பேரவை நிறுவனத்தைச் சேர்ந்த சௌத்திரி ஏற்றினார்.

உடையார்கட்டு மகாவித்தியாலய அதிபர் எஸ்.ராஜா சிறப்புரையாற்றினார். அவர் தமதுரையில் மனித உரிமைகளில் சிறுவர் உரிமைகள் பற்றி எடுத்து விளக்கினார்.

தொடர்ந்து விசுவமடு, உடையார்கட்டு ஆகிய பிரதேச முன்பள்ளிச் சிறார்களின் கும்மி, செம்பு நடனம், காவடி,,கரகாட்டம், கோலாட்டம் மற்றும் பரதநாட்டியம் என்பன இடம்பெற்றன.

அதேவேளை, நிகழ்வில் கலந்து கொண்ட அனைத்து சிறுவர்களுக்கும் பரிசில்கள் வழங்கப்பட்டன. (எ-6-352)

## வட்டக்கச்சிப் பகுதியில் பஸ்தரிப்பிடங்கள் சீரில்லை

பரந்தன்,டிசெ.21

வட்டக்கச்சிப் பிரதேசத்தில் பஸ்தரிப்பிடங்கள் சீரற்றுக் காணப்படுகின்றன. இதனால், இப்பிரதேச மக்கள் பெரும் சிரமங்களை அடைகின்றனர்.

வட்டக்கச்சி சந்தையிலிருந்து ஹட்சன் வீதிச் சந்திவரை 5 பஸ் தரிப்பிடங்கள் அமைக்கப்பட்டன. எனினும், மூன்று பஸ் தரிப்பிடங்களே கட்டடங்களாக உள்ளன. ஏனைய இரண்டும் உடைந்துபோய் மக்கள் பயன்படுத்த முடியாத நிலையில் உள்ளன.

மிகுதியாக உள்ள பஸ்தரிப்பிடக் கட்டடங்களில் கால்நடைகள் தங்கி அசுத்தம் செய்கின்றன. இதனால், மக்கள் பயன்படுத்த முடியாது பெரும் சிரமம் அடைகின்றனர். மரங்களின் கீழ் பஸ்ஸுக்காகக் காத்து நிற்கின்றனர்.

உரியவர்கள் இந்தப் பஸ் தரிப்பிடங்களைத் திருத்தி, மக்களின் சிரமங்களை குறைக்க வேண்டும் என கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (ஐ-353-204)

*தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் ஒன்றுகூடல் நிகழ்வில் நிறுவனத்தின் பணியாளர் ஒருவருக்கு தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் பரிசில் வழங்கிக் கௌரவிப்பதை முதலாவது படத்திலும் - அரசியல் துறைப் பிரமுகர் ஒருவர் பொதுச்சுடரேற்றுவதை இரண்டாவது படத்திலும் - வைபவத்தில் கலந்து கொண்ட பணியாளர்களை அடுத்துள்ள படத்திலும் காணலாம். (படங்கள்: மு.கந்தசாமி - பரந்தன் செய்தியாளர்)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்டில் உருக்குக் கட்டுமானப் பணிகளில்
முன்னணியில் திகழும் நிறுவனம் ஒன்றுக்கு
பின்வரும் வேலைகள் தொடர்பான வடக்கு-கிழக்கில்
இருந்து
**உப ஒப்பந்தகாரர்கள் தேவை**

வெளிவாசல் கதவு (GATE) உற்பத்தியாளர்கள்
மின் ஒட்டுநர்கள்

தயவு செய்து உங்கள் விவரங்களைக் கீழ்கண்ட
முகவரிக்கு அனுப்பவும்.

**விளம்பர இல. 2766**
**உதயன் பணிமனை**
**361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**

## அங்குரார்ப்பணக் கூட்டம்

யாழ்ப்பாணம்,டிசெ.20

யாழ்.மாவட்டக் கரம் சங்கத்தின் அங்குரார்ப்பணக் கூட்டம் எதிர்வரும் சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ்.மத்திய கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் ஆர்வமுள்ள அனைத்து வீரர்களையும் கலந்துகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (3-202)

## ஸ்சைக்கிளோட்டி காயம்

தென்மராட்சி,டிசெ.20

வேகமாகச் சென்ற மோட்டார் சைக்கிளின் முன் சக்கர ரயர் வெடித்ததில் மோட்டார் சைக்கிளோட்டி தூக்கி வீசப்பட்டுக் காயமடைந்தார்.

கடந்த 18ஆம் திகதி மீசாலையில் இச்சம்பவம் இடம்பெற்றது.

இச் சம்பவத்தில் காயமடைந்த ஏ.லதீபன் (வயது 35) என்பவர் சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்றுவருகிறார். (3-117)

## 5ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
12 ★ 10 ★ 1938

மறைவு
21 ★ 12 ★ 2000

அமரர்
**கந்தையா சிவலிங்கம்**

ஆண்டுகள் ஐந்து சென்றாலும் உங்கள்
நினைவுகள் என்றென்றும் எம் உயிருள்ளவரை
எம்மோடு நிலைத்திருக்கும்.

169/6, முதலாம் ஒழுங்கை,
அரசடி வீதி, நல்லூர்.
(44308) (24-19-16)

தகவல்:
மனைவி, மகன் - சுதர்சன்
மற்றும் பிள்ளைகள்.

## மோட்சதீப அழைப்பிதழும் நன்றி நவிலலும்



தெய்வீக அவதாரம்
03.11.1923

தெய்வீக சமாதி
11.12.2005

**கலாநிதி அருட்கவி சீ.விநாசித்தம்பி புலவர்**

கருவிலே கவிபாடி புவி தேடினீர்
கடல் சூழ்ந்த கருநீலன் மனம் நாடினீர்
உருவிலே உமைபாகன் நிறம் ஆகினீர்
உயிருடன் ஒவ்வொருவர் உளம் வாழ்கிறீர்

பூரணி புகழ் பாடிப் புலவரானீர்
தாரணி உமைப் போற்றிப் பரவலானீர்
சீரணி சிறப்பெல்லாம் துறந்தாகினீர்
பேரணி புடை சூழப் பிரிந்தாகினீர்

எமது குடும்பத்தின் குலவிளக்காய் எமக்கும் உலக மக்களுக்கும் ஆசியையும் அருளையும் அளித்து கடந்த 11.12.2005 நாள் அணைந்தும் எம் உள்ளங்களில் அணையாத தீபமாய் ஒளிவீசிக்கொண்டிருக்கின்ற தெய்வீக புருஷர் கலாநிதி அருட்கவி சீ.விநாசித்தம்பி புலவர் ஐயா அவர்கள் மோட்சம் உற்ற செய்தி கேட்டு இல்லம் வந்தும் இறைசமாதி ஊர்வலத்தில் பங்குகொண்டு தமது கண்ணீர்க் காணிக்கைகளைத் துண்டுப்பிரசுரம், பத்திரிகை, வானொலி, தொலைக்காட்சி, தொலைபேசி, தந்திகள் மூலம் அனுதாபச் செய்திகளை தெரிவித்து எமது துயரில் பங்குகொண்ட அனைத்து அன்பு இதயங்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவிப்பதுடன், நாளை (22.12.2005) வியாழக்கிழமை காலை 9 மணியளவில் நடைபெறும் மோட்சதீபக் கிரியையிலும் அன்னசுபூபி மண்டபத்தில் நடைபெறவிருக்கும் அஞ்சலிப்பிரார்த்தனையிலும் திருவருள் சக்தி பேராளர் அனைத்து உயிர்களையும் என்றென்றும் ஆசீர்வதிக்க வேண்டி நல்கும் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

மோட்ச தீபஅழைப்புக் கிடைக்காத அன்பர்கள் தயவுசெய்து
இவ்வழைப்பிதழை ஏற்று வருகை தருமாறு அன்புடன் அழைக்கிறோம்.

நாகேஸ்வரம், அளவெட்டி. (44264) (39-19-16-24) - குடும்பத்தினர்.

## நீங்காத நினைவலைகளில் முதலாம் ஆண்டு



மலர்வு
13-04-1922
உதிர்வு
01-01-2005

மலர்வு
25-08-1924
உதிர்வு
20-05-2004

அமரர் திருமதி
நல்லதம்பி தர்மலிங்கம் தர்மலிங்கம் யோகம்மா
திதி: 21.12.2005

நிலையில்லா உலகில்
நிலைத்துவிட்ட உங்கள் அன்பால்
நினைவிழக்க முடியாது நாம்
நீந்துகிறோம் கண்ணீரில்!

ஆடியபாதம் வீதி,
திருநெல்வேலி.
(44252) (32-19-16-24)
- குடும்பத்தினர்.

காலத்தின் தேவையறிந்து புதியதை அறிமுகம் செய்யும் சி.ஐ.சி
இல்லத்தில் இருந்து விவசாயிகளுக்கு புதிய தோர் வரப்பிரசாதம்
நெற்பயிரில் கபிலநிறத்தத்தியையும், ஏனையதத்திகளையும் கட்டுப்படுத்த




**அக்டரா 25W.G**

உருளைக்கிழங்குப்பயிரில்
அழுக்கணவனைக்
கட்டுப்படுத்த

※அனைத்து சாறு உறிஞ்சும்
பூச்சிகளையும் கட்டுப்படுத்தும்.
※5gஅக்டரா 16l நீருக்கு போதுமானது

குறிப்பு:- சங்கரத்தை, மட்டுவில், வரணி, மிருசுவில், நாவற்குழி
ஆகிய இடங்களில் தத்தியின் தாக்கம் அதிகமாக காணப்படுகிறது.

சி.ஐ.சி. இல்லம்
199, கியூ வீதி,
கொழும்பு.

ஏகவிநியோகஸ்தர்கள்:
பவானி களஞ்சியம் [யாழ்., நீர்வேலி]
அம்பிகா களஞ்சியம் [வன்னி]

## யாழ். நகரில் நவீன வசதிகளுடன் கூடிய புடைவை விற்பனைக்காட்சியகம்

கிறிஸ்மஸ் பண்டிகையை முன்னிட்டு நவநாகரீக ஆடைத்தெரிவுகளுக்கு நாடுங்கள்



# Style Park

Perfect Collection

# ஸ்ரைல் பார்க்



முற்றிலும் குளிரூட்டப்பட்ட காட்சியறையில் யாழ். நகரில் குறைந்த
விலையில் மங்கையர் மனம் நிறைந்த ரகங்கள், நிகரில்லாத்தரங்கள்
அழகிய புடைவைத் தினுசுகளின் றெடிமேட் சாம்ராஜ்ஜம்

**No. 171, K.K.S. Road, Jaffna. T.P. ... இல. 171, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிங்கள மக்களை ஜே.வி.பி. முட்டாள்களாக்குகிறது!



**''சிங்களவர்களுக்கு சிந்திக்கும் திறன் கிடையாது'' என விடுதலைப் புலிகளின் மதியுரைஞர் தெரிவித்தார் என அண்மையில் பத்திரிகைகளில் செய்திகள் வெளி வந்தன. சிங்களவர்களின் சிந்திக்கும் திறமின்மையைப் பயன்படுத்தி ஜே.வி.பி. வயிறு வளர்ப்பதை ஆராய்கிறது இக்கட்டுரை. உபுல் ஜோசெப் பெர்னாண்டோ எழுதி 'லங்காதீப' நாளிதழில் வெளியான கட்டுரையின் தமிழாக்கத்தை இங்கு தருகிறோம்.**

''சிங்கள மக்களுக்குச் சிந்திக்கும் திறன் கிடையாது. அவர்கள் புத்தியற்றவர்கள்'' இவ்விதம் கூறியவர் வேறு யாருமல்லர்; விடுதலைப் புலிகள் அமைப்பின் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கமே. அண்மையில் லண்டனில் இடம்பெற்ற மாவீரர் தின வைபவத்தில் அவர் இவ்விதம் கூறியிருந்தார். அன்ரன் பாலசிங்கத்தின் மேற்குறித்த கருத்து நூற்றுக்கு நூறு உண்மையே.

இது முற்றிலும் சரியான கருத்துத்தான் என்பதை மற்றெவரையும் விட ஜே.வி.பியினர் நன்கறிவர். ஏனெனில் சிங்கள மக்களின் இப்புத்தியீனத்தைப் பயன்படுத்திப் பயன் ஈட்டிக் கொள்ளும் திறமை ஜே.வி.பியினருக்கு நிறையவே உண்டு.

1940 தொடக்கம் ஐக்கிய தேசியக் கட்சி, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, லங்கா சம சமாஜக் கட்சி மற்றும் கம்யூனிஸ்ட் கட்சி என்பன ஒன்றுடன் ஒன்று போட்டியிட்டுக் கொண்டு சிங்கள மக்களை ஏமாற்றி வந்தபோதிலும், ஜே.வி.பியைப் போன்று சிங்கள மக்களை வேறெவரும் முழு முட்டாள்களாக்கியது கிடையாது.

அதற்காக ஜே.வி.பியினரைத் திட்டித் தீர்க்க இயலாது. அவர்கள் மீது குற்றம் காண்பதும் தவறானதாகும். அது ஜே.வி.பியினரின் கெட்டிக்காரத்தனம்; சிங்கள மக்களது புத்தியீனம் அது. ஜே.வி.பியினரின் இக் கெட்டிக்காரத்தனத்தையும் சிங்களப் பொதுமக்களது மூடத்தனத்தையும் கணிப்பிட்டுப் பார்ப்பதானால் நோர்வேக்காரர்களின் வருகையிலிருந்து அதனை ஆரம்பித்தாக வேண்டும்.

இந்நாட்டின் இனப்பிரச்சினைக்குச் சமாதான வழியில் தீர்வு தேடித் தருவதற்காக நோர்வேத் தரப்பினர் 2000 ஆம் ஆண்டின் பிற்பகுதியில் இந்நாட்டுக்கு வந்தார்கள். அதாவது 2006 ஆம் ஆண்டில் நோர்வேயின் மத்தியஸ்தப் பணி ஆரம்பமாகி ஆறு ஆண்டுகள் முடிவடைகின்றன.

இந்த ஆறு ஆண்டுகளாக நோர்வேயின் தலையீடு குறித்து ஜே.வி.பியினர் சிங்களப் பொதுமக்களுக்கு வெளிப்படுத்திய கருத்துக்கள் சுவாரஸ்யமானவை. அவர்களை முட்டாள்களாக்கும் விதத்தில் அமைந்தவை; ஜே.வி.பியினர் அரச தரப்பில் இருந்தவேளையிலும் சரி, எதிர்க்கட்சி தரப்பில் இருந்த வேளையிலும் சரி நோர்வேயின் மத்தியஸ்தம் குறித்து வெளிப்படுத்திய கருத்துக்கள், சுவாரஸ்யமானதொரு கதைப் புத்தகத்தின் பக்கங்கள் போன்றவை.

இனப்பிரச்சினைத் தீர்வு குறித்த நடவடிக்கைகளில் மத்தியஸ்தம் வகிப்பதற்காக முதன்முதலில் நோர்வே நாட்டினரை சந்திரிகாவின் தலைமையிலான அரசே அழைத்தது. அந்தவேளையில் ஜே.வி.பியினர் எதிர்க்கட்சி வரிசையில் இருந்தனர். ''சிக்கலானதும் முக்கியமானதுமான இனப்பிரச்சினைத் தீர்வு விடயத்தில் எரிக் சொல்ஹெய்ம் வகிக்கும் பாத்திரம் குறித்துப் பகிரங்கப் படுத்தப்பட்டாகவேண்டும். அப்பேச்சுவார்த்தைகள் குறித்த விவரங்கள் நாட்டு மக்களுக்



சோமவன்ஸ அமரசிங்க
டில்வின் சில்வா

குத் தெரிவிக்கப்பட்டாகவேண்டும். அப்பேச்சுவார்த்தை விவரங்கள் குறித்துத் தெரிந்துகொள்ளும் சட்டபூர்வமான - நியாயபூர்வமான உரிமை இச்சபைக்கு உள்ளது.'' - என 2000 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 12 ஆம் திகதி நாடாளுமன்றத்தில் உரையாற்றிய வேளையில், ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினராயிருந்த விமல் வீரவன்ஸ ஆக்ரோசமான தொனியில் கருத்து வெளியிட்டிருந்தார். இந்த விதத்திலே, எதிர்க்கட்சியிலிருந்து கொண்டு ஜே.வி.பியினர் அரசுக்கெதிரான - நோர்வேக்காரர்களுக்கு எதிரான தமது கடும் விமர்சனங்களை ஆரம்பித்தனர்.

''இப்போது சமாதான நடவடிக்கைகளில் உதவுவதற்காக இங்கு வந்துள்ள எரிக்சொல்ஹெமின் தகப்பனாரே, சில ஆண்டுகளுக்கு முன்னர் இஸ்ரேல் - பலஸ்தீன சமாதான நடவடிக்கைகளில் மத்தியஸ்தப் பணியை மேற்கொண்டிருந்தார். எமது நாட்டின் பிரச்சினைகளைத் தீர்க்க முயல்வதற்கு முன்னர் தமது நாடுகளின் பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்ளுமாறு நாம் அவர்களுக்குக் கூறிக் கொள்ள விரும்புகிறோம். அவர்கள் எம்முடன் பேச்சுக்களை நடத்த முன்வந்துள்ளனர். நாங்கள் பேச்சுக்களை நடத்துவதற்கு உதவு



அன்ரன் பாலசிங்கம்

வதற்கு முன்னர் உங்களது பிரச்சினைகளைத் தீர்த்துக்கொண்டு வாருங்கள் என நாம் கூறியிருக்கிறோம்''

ஜே.வி.பியைச் சேர்ந்த அநுரகுமார திஸநாயக்காவின் மேற்கூறப்பட்ட கருத்து பெரும் கைதட்டல்களுடன் வரவேற்கப்பட்டதாக 2001 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 25 ஆம் திகதி தனது பதிப்பில் 'லங்காதீப' பத்திரிகை செய்தி வெளியிட்டிருந்தது.

மேற்குறித்த இருவரது பேச்சுக்களும் முறையே 2000 மற்றும் 2001 ஆம் ஆண்டுகளில் நிகழ்த்தப்பட்டவையாகும். 2001 ஆம் ஆண்டு செப்ரெம்பரில் சமாதான நடவடிக்கைகளில் அனுசரணை வழங்குமாறு கோரி நோர்வேக்காரர்களை இந்த நாட்டுக்கு அழைப்பித்த சந்திரிகா அரசுடன் இணைந்து தகுதிகாண் அரசொன்றினை உருவாக்கிக் கொண்டு ஜே.வி.பியினர் அரசில் இணைந்து கொண்டனர். ''நாம் நோர்வேயின் அனுசரணைப் பணிக்குத் தடையாக இருக்கப் போவதில்லை. சமாதான நடவடிக்கைகளில் நோர்வேயை மத்தியஸ்தம் வகிக்க வைக்கும் அரசின் தீர்மானத்துக்கு ஜே.வி.பி எதிர்ப்பு எதையும் தெரிவிக்காது.''

மேற்கண்டவாறு ஜே.வி.பி. தலைவர்களுள் ஒருவரான நந்தன குணதிலக கருத்து வெளியிட்டதாக 2001 செப்ரெம்பர் 16 ஆம் திகதிய 'சண்டே ஒப்சேவர்' பத்திரிகை செய்தி வெளியிட்டிருந்தது. இது நோர்வேக்காரர்களின் அனுசரணைப் பணி தொடர்பாக ஜே.வி.பி. தனது தாளத்தை மாற்றிக் கொண்டு சிங்கள மக்களை மூடர்களாக ஆக்கிய சம்பவமாகும். 2001 ஆம் ஆண்டு ஒக்ரோபரில் பொ.ஐ.முன்னணி அரசில் அங்கம் வகித்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலரை அரசினின்றும் விலக வைப்பதில் வெற்றி கண்ட ஐ.தே. கட்சி, சந்திரிகா - ஜே.வி.பி. தகுதிகாண் அரசைப் பதவியினின்றும் வீழ்த்தியது. அதனைத் தொடர்ந்து 2001 டிசெம்பரில் இடம்பெற்ற பொதுத் தேர்தலில் வெற்றி பெற்ற ஐ.தே. கட்சி புதிய அரசினை அமைத்தது.

இந்த மாற்றம் காரணமாக ஜே.வி.பியினர் மீண்டும் எதிர்க்கட்சி வரிசையில் இணைந்துகொள்ள நேர்ந்தது. அந்தவேளையில் நோர்வேயின் மத்தியஸ்தம் குறித்த தமது தாளத்தை மீண்டும் மாற்றிக்கொண்டு மீண்டும் சிங்கள மக்களை முழு முட்டாள்களாக ஆக்கும் தமது வழக்கத்தை ஆரம்பித்தது ஜே.வி.பி.

''இது அடிமைத்தனம் அல்லவா? இதுவா சமாதானம்? இது இலங்கை அரசையும் இந்நாட்டு மக்களையும் விடுதலைப் புலிகள் அமைப்பிடம் காட்டிக் கொடுக்கும் நடவடிக்கையல்லவா?'' நோர்வேக்காரர்களுக்கு நாட்டின் சமாதானம் குறித்து முடிவு மேற்கொள்ளும் உரிமையை வழங்குவது நரியிடம் கோழிகளை ஒப்படைப்பதற்குச் சமனான நடவடிக்கையாகும். நோர்வேக்காரர்கள் விடுதலைப் புலிகளின் விருப்பத்துக்குச் சார்பாகவே [illegible] வுள்ளனர். இந்த நாட்டைப் பிரித்து எல்லை வகுக்கவே நோர்வேக்காரர்கள் இங்கு வந்துள்ளனர்'' என விமல்வீரவன்ஸ நோர்வேயை விமர்சித்தார் என்று 2002 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 24 ஆம் திகதிய 'லங்காதீப' பத்திரிகை செய்தி வெளியிட்டிருந்தது.

மேற்கண்ட விதத்தில் நோர்வேயைக் கடுமையாக விமர்சித்து, நோர்வேயைச் சமாதான அனுசரணைப் பணியிலிருந்து வெளியேற்ற வேண்டுமென மீண்டும் மீண்டும் வற்புறுத்திய ஜே.வி.பியினர், சமாதான நடவடிக்கைகளில் அனுசரணை வழங்கும் பொருட்டு நோர்வேக்காரர்களை இங்கு வரவழைத்த சந்திரிகாவின் பொ.ஐ. முன்னணியுடன் கூட்டு ஒப்பந்தமொன்றினை ஏற்படுத்திக் கொண்டு 2004 ஆம் ஆண்டுப் பொதுத் தேர்தலில் அதிகாரத்தைக் கைப்பற்றி, அரசமைத்தது மட்டுமன்றி, அமைச்சுப் பொறுப்புக்களையும் பொறுபேற்றுக் கொண்டனர்.

அந்த வகையில் ஜே.வி.பி. மீண்டும் அரச தரப்பில் அமர்ந்துகொண்டது. அந்த வேளையில் மீண்டும் தமது தாளத்தை மாற்றிக் கொண்டு சிங்கள மக்களை முட்டாள்களாக ஆக்கும் தமது கைங்கரியத்தை ஜே.வி.பியினர் மேற்கொண்டும் தொடர்ந்தனர்.

அந்தவேளையில் 2004 ஆம் ஆண்டு மே மாதம் இரண்டாம் திகதியன்று ஜே.வி.பியின் பிரசாரச் செயலர் விமல் வீரவன்ச பத்திரிகையொன்றுக்குப் பேட்டியளித்தார்.

அந்தப் பேட்டியில் 'சமாதான நடவடிக்கைகளில் அனுசரணை வழங்குமாறு ஜனாதிபதி சந்திரிகாவே நோர்வே அரசைக் கோரினார். நோர்வே அரசு அவ்வித அனுசரணைப் பணியை மேற்கொள்வதை நீங்கள் எதிர்க்கிறீர்கள். இது குறித்து உங்களது கருத்தென்ன?'' எனப் பத்திரிகையாளரால் எழுப்பப்பட்ட வினாவுக்கு விமல் வீரவன்ஸ தெரிவித்த பதில் குதர்க்கம் நிறைந்ததொன்றாய் அமைந்திருந்தது.

''நாம் ஜனாதிபதியுடன் இது குறித்து எதிர்வரும் நாள்களில் பேச்சுநடத்தவுள்ளோம். அதன் பின்னரே எமது நிலைப்பாடு குறித்து அறியத்தரமுடியும்'' - என நழுவல் போக்கில் விமல் வீரவன்ஸ பதிலளித்திருந்தார். ''ஜனாதிபதி சந்திரிகா நோர்வேயின் மத்தியஸ்தம் குறித்த தமது முடிவில் உறுதியாக இருப்பாரானால் மேற்கொண்டு நீங்கள் என்ன செய்ய உத்தேசித்துள்ளீர்கள்'' என பத்திரிகையாளர் மேலுமொரு கேள்வி தொடுத்தார். அந்தக் கேள்விக்குக் கூட குதர்க்கமான விதத்தில் ''ஜனாதிபதி தமது முடிவை மாற்றிக் கொள்வது பற்றியோ மாற்றிக் கொள்ளாதிருப்பது பற்றியோ நாம் அவருடன் பேசப்போவதில்லை. ஜனாதிபதியின் இத்தகைய அணுகுமுறை எந்த அடிப்படையில் மேற்கொள்ளப்படவுள்ளது என்பதைத் தெரிந்து கொள்ளவே ஜனாதிபதியுடன் பேசவுள்ளோம்'' எனப் பதிலளித்திருந்தார் விமல் வீரவன்ஸ.

சந்திரிகா - ஜே.வி.பி. கூட்டணி அரசு பதவியேற்று ஒரு மாத காலத்துள் மேற்கண்ட விதத்தில் - ஒன்றுக்கொன்று முரண்பட்ட விதத்தில்- கருத்து வெளியிட்டு, நழுவல் போக்கில் செயற்பட்டதன் மூலம் சிங்கள மக்களை ஜே.வி.பியினர் மென்மேலும் மடையர்களாக ஆக்கி வந்துள்ளனர். இந்த நிலை நீண்ட காலம் நீடிக்கவில்லை. அனுசரணைப் பணியை முன்னெடுப்பதற்காக மீண்டும் நோர்வே மத்தியஸ்தர்கள் வருகை தந்தனர். ஜே.வி.பியினர் வசமிருந்த கலாசார அமைச்சு மற்றும் மீன் வளத்துறை அமைச்சு ஆகியனவற்றின் அமைச்சர்களை நோர்வே அனுசரணையாளர்கள் சந்தித்துப் பேசிய வேளையில் அவ்விரு அமைச்சுக்களின் செயற்பாடுகளை முன்னெடுக்க நோர்வே அரசு நிதியுதவியும் வழங்கியது. இலங்கைக்கான நோர்வேத் தூதுவரிடமிருந்து ஜே.வி.பி அமைச்சர்கள் நிதியுதவிக்கான காசோலைகளைப் பெற்றுக்கொள்ளும் புகைப்படங்கள் அந்தவேளையில் வெளிவந்த பத்திரிகைகளில் பிரசுரமாயின.

இச்சம்பவம் இடம்பெற்று, குறுகியகால இடைவெளியில் ஆழிப்பேரலை அனர்த்த நிவாரண சபையை உருவாக்கும் அரசின் முடிவை எதிர்த்து ஜே.வி.பியினர் சந்திரிகா அரசினின்றும் வெளியேறி, எதிர்க்கட்சி வரிசையில் இடம்பிடித்துக் கொண்டனர்.

எதிர்க்கட்சியில் இருந்துகொண்டு, ''வெள்ளைப் புலிகளான'' நோர்வேக்காரர்களை வெளியேற்றுமாறு கோரி ஜே.வி.பியினர் நோர்வேத் தூதரகத்தின் முன்னால் ஆர்ப்பாட்டம் செய்தவேளையில் ஜனாதிபதித் தேர்தல் வேட்பாளராக தமது கட்சி சார்பில் போட்டியிடும் அபேட்சகராக மஹிந்த ராஜபக்ஷவைச் சுதந்திரக் கட்சி தெரிவு செய்தது. அதனைத் தொடர்ந்து மஹிந்த ராஜபக்ஷவுடன் தேர்தல் ஒப்பந்தமொன்றை ஏற்படுத்திக் கொண்டு நோர்வேயை சமாதான நடவடிக்கைகளில் அனுசரணை வழங்கும் பணியிலிருந்து விலக்கி விடுவதற்கு சிங்கள மக்களது அனுமதியை ஜே.வி.பி. கோரி நின்றது. மஹிந்த ராஜபக்ஷவுடன் தாம் ஏற்படுத்திக் கொண்ட தேர்தல் உடன்படிக்கை விவரங்களைப் பொதுமக்களுக்குப் பகிரங்கப்படுத்திய வேளையில், ஜே.வி.பியின் தலைவர் சோமவன்ச அமரசிங்க ''நோர்வே அரசின் பக்கச்சார்பான அனுசரணை நடவடிக்கைகளை நாம் நிறுத்தியாக வேண்டும்.'' எனத் தெரிவித்தார் என கடந்த செப்ரெம்பர் மாதம் 6 ஆம் திகதி வெளியான 'லங்காதீப' பத்திரிகை செய்தி வெளியிட்டிருந்தது.

தமிழில்: வீவெஸ்ரி

## ''அன்ரன் பாலசிங்கத்தின் வாயில் தங்க நாணயம் போடவேண்டும்''

''வெளியுறவு அமைச்சர் கதிர்காமரின் படுகொலைக்குக் காரணமான பயங்கரவாத அமைப்பைப் பாதுகாக்கும் வகையில் வெட்கமின்றி வக்காலத்து வாங்கும் நோர்வே நாடு தொடர்ந்தும் எந்த வகையில் அனுசரணைப் பணியில் பக்கச் சார்பற்ற விதத்தில் செயற்படும் என நம்பமுடியும்? இத்தகைய பின்னணியில் நோர்வே இந்நாட்டில் சமாதானத்தை உருவாக்கும் பணியில் அனுசரணையாளர்களாகவோ அல்லது இடைநிலை மத்தியஸ்தர்களாகவோ செயற்படுவதற்கு அனுமதிப்பது தவறாகாதா? விடுதலைப் புலிகள் அமைப்புக்கு சகல வழிகளிலும் உதவியளிக்கும் இவ்வித நாடொன்று இந்நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்தும் செயற்பாட்டில் தொடர்ந்தும் பங்களிப்புச் செய்வதை அனுமதிப்பதை நாம் கடுமையாக எதிர்க்கிறோம்.'' - என ஜே.வி.பியின் பிரசாரச் செயலாளர் விமல் வீரவன்ஸ தமது நாட்டுப் பற்றாளர் அமைப்பின் சார்பில் ஜனாதிபதித் தேர்தல் பிரசாரத்தின்போது கருத்து வெளியிட்டார் எனக் கடந்த செப்ரெம்பர் மாதம் 21ஆம் திகதிய 'லங்காதீப' பத்திரிகை செய்தி வெளியிட்டிருந்தது.

இவ்விதம் பொதுமக்களுக்குக் கருத்துக் கூறிவந்த ஜே.வி.பி. தாம் ஜனாதிபதித் தேர்தலில் ஆதரவு வழங்கிய சுதந்திரக் கட்சியின் வேட்பாளர் மஹிந்த ராஜபக்ஷவை வெற்றி பெற வைத்தது. இருப்பினும், ஜனாதிபதியாகப் பதவியேற்ற கையோடு சமாதான முயற்சிகளில் தொடர்ந்தும் அனுசரணை வழங்குமாறு நோர்வே அரசை ஜனாதிபதி கேட்டுக் கொண்டார். அவ்வித வேண்டுகோளை விடுக்கு முன்னர் ஜே.வி.பியினரையும் கலந்தாலோசித்தே இருந்தார். முடிவில் அவ்வித கோரிக்கையை ஜனாதிபதி நோர்வே அரசுக்கு விடுத்தார்.

சிங்கள மக்களுக்கு இதனைக் கூறுவதற்கு ஜே.வி.பியினருக்கு எவ்வித சிரமமும் ஏற்படவில்லை. 2000 ஆம் ஆண்டில் நோர்வேயின் அனுசரணை தேவையற்றதென ஜே.வி.பி. தெரிவித்திருந்தது. 2001 ஆம் ஆண்டில் தகுதிகாண் அரசின் பங்குதாரர்களாகச் செயற்பட்டவேளையில் நோர்வே அனுசரணை வழங்குவதில் தமக்கு ஆட்சேபனை ஏதும் கிடையாது எனத் தெரிவித்திருந்தது. 2002 ஆம் ஆண்டில் மீண்டும் நோர்வேயின் மத்தியஸ்தத்தை ஜே.வி.பி. எதிர்ப்பதாகத் தெரிவித்திருந்தது. 2004 ஆம் ஆண்டு பிறந்ததும் இதோ மீண்டும் வந்து சேர்ந்தது நோர்வேயின் மத்தியஸ்தம் என்ற நழுவல் வார்த்தை பேசி ஜாலம் காட்டியது ஜே.வி.பி.

(10ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிங்கள மக்களை....

(09ஆம் பக்கத் தொடர்ச்சி)

''நோர்வேயின் அனுசரணையைப் பெற்றுக்கொள்வது குறித்த தீர்மானம் மேற்கொள்வதை ஜனாதிபதியின் பொறுப்பில் விட்டுவிட ஜே.வி.பி தயாராயுள்ளது. நாம் நோர்வேயின் அனுசரணைப் பணியை எதிர்த்தபோதிலும், எமது நிலைப்பாட்டுக்கு அமையத் தீர்மானம் மேற்கொள்ளவேண்டுமென வற்புறுத்தவில்லை'' என அண்மையில் விமல் வீரவன்ஸ தெரிவித்தார் என இம்மாதம் எட்டாம் திகதி வெளியான 'லங்காதீப' பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

நோர்வே அரசின் அனுசரணை தொடர்பாக ஜே.வி.பி. சிங்கள மக்களை இவ்விதம் மடையர்களாக்குவதை காணும்போது அன்ரன் பாலசிங்கத்தின் வாயில் தங்க நாணயம் போடவேண்டுமென எண்ணத் தோன்றுகிறது.

நோர்வே அரசின் அனுசரணை குறித்து இன்று ஜே.வி.பி. தெரிவிக்கும் நிலைப்பாட்டை நோக்கும்போது இன்னமும் பல தடவைகள் சிங்கள மக்களை மடையர்களாக்கலாமென அவர்கள் எண்ணுவதாகத் தோன்றுகிறது. அது உண்மையானதே.

2000 ஆம் ஆண்டில் நோர்வேயை வெளியேற்றுமாறு கோஷமிட்டு, 2001 செப்ரெம்பரில் நோர்வேயின் மத்தியஸ்த முயற்சியை வரவேற்று, 2002 முதல் 2003 வரை மீண்டும் நோர்வேயை வெளியேற்றுமாறு கோஷமிட்டு, 2004இல் மீண்டும் நோர்வேயின் மத்தியஸ்த முயற்சிகளை வரவேற்று 2005இல் மீண்டும் (மூன்றாவது தடவையாக) நோர்வேயை வெளியேற்றுமாறு கோஷமெழுப்பி, பின்னர் தமது தாளத்தை மாற்றி நோர்வே மத்தியஸ்த முயற்சிகளில் ஈடுபடுவதில் எமக்கு ஆட்சேபனை இல்லையெனத் தெரிவித்து சிங்கள மக்களின் காதுகளில் பூச்சுற்றி அவர்களை முழு முட்டாள்களாக ஆக்கும் கைங்கரியத்தை சாதுரியமாக முன்னெடுக்க ஜே.வி.பினருக்கு இயலுமாயின், தொடர்ந்தும் பல ஆண்டு காலம் இவ்விதம் சிங்கள மக்களை முட்டாள்களாக்க ஜே.வி.பியினரால் முடியாதெனக் கொள்ள இயலாதல்லவா?

இன்றும் ஜே.வி.பியினர் சிங்கள மக்களை முட்டாள்களாக ஆக்கும் வகையிலேயே செயற்பட்டு வருகின்றனர். ஆனால், ஜே.வி.பியினர் இன்றும் அதனைப் புத்திசாலித்தனமாகவே மேற்கொண்டு வருகின்றனர்.

புதிய ஜனாதிபதி நாட்டின் தேசிய பாதுகாப்புத் தொடர்பாக மேற்கொண்டுவரும் நடவடிக்கைகள் ஜே.வி.பியினருக்கு வாய்ப்பானதாக அமைந்துவிட்டது. தமது அழுத்தங்கள் காரணமாகவே ஜனாதிபதி இவ்வித நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார் என ஜே.வி.பியினர் சொல்லாமல் சொல்லிப் பெருமை அடித்துக் கொள்கின்றனர்.

புதிய ஜனாதிபதி நாட்டின் தேசிய பாதுகாப்பை முன்னிலைப்படுத்தி மேற்கொண்ட முக்கியமானதொரு நடவடிக்கையாக புதிய இராணுவத் தளபதியாக சரத் பொன்சேகாவை நியமித்தமையைக் குறிப்பிட இயலும்.

ஐ.தே. கட்சி அரசு 2002 ஆம் ஆண்டில் போர் நிறுத்த உடன்படிக்கையை மேற்கொண்ட தருணம் சரத் பொன்சேகா வடபகுதிக் கட்டளைத் தளபதியாகக் கடமையாற்றினார். ஐ.தே.கட்சி அரசு ஆட்சியிலிருக்கும்வரை அவரை வடபகுதியிலேயே சேவையாற்ற வைத்தது. 2004 ஆம் ஆண்டில் ஜே.வி.பியுடன் கூட்டு ஏற்படுத்திக்கொண்டு சுதந்திரக் கட்சி மீண்டும் அதிகாரத்தைக் கைப்பற்றிக் கொண்ட பின்னர் அவரை வடபகுதிக் கட்டளைத் தளபதிப் பதவியிலிருந்து அகற்றியது. அந்தவேளையில் அமைச்சரவையில் ஜே.வி.பியைச் சார்ந்த நான்கு அமைச்சர்கள் அங்கம் வகித்தனர். ஜே.வி.பியின் பிரசாரச் செயலாளர் விமல் வீரவன்ஸ பாதுகாப்புச் சபைக் கூட்டங்களில் கூடக் கலந்துகொண்டார் என அச்சமயம் பத்திரிகைகளில் செய்தி வெளியாகியிருந்தது.

அந்த நிலையிலும் சரத் பொன்சேகாவை வடபகுதிக் கட்டளைத் தளபதிப் பதவியிலிருந்து அகற்றியமை தொடர்பாக ஜே.வி.பியினர் கேள்வியேதும் கேட்டதில்லை. அதேபோன்று அவரை அப்பதவியிலிருந்து அகற்றியமை குறித்து ஆட்சேபம் கூடத் தெரிவித்ததில்லை. அந்தச் சமயத்தில் ஜே.வி.பியினர் ஏதும் அறியாதவர்கள் போல மௌனம் காத்தனர்.

முன்னாள் இராணுவத் தளபதி பலகல்ல இராணுவ சேவையிலிருந்து ஓய்வுபெற்றதும் நிரப்பப்பட வேண்டியிருந்த அப்பதவி வெற்றிடத்துக்கு, அப்பதவிக்கான தகைமைகளைக் கொண்டிருந்தும் சரத் பொன்சேகாவுக்கு ஜே.வி.பியினர் அங்கம் வகித்த கூட்டணி அரசு இராணுவத் தளபதிப் பதவியை வழங்க முன்வரவில்லை. அவ்விதம் சரத் பொன்சேகாவுக்கு இராணுவத் தளபதி பதவி வழங்கப்படாதது குறித்தும் ஜே.வி.பியினர் எதுவித ஆட்சேபனையும் தெரிவிக்கவில்லை. ஆனால், இன்று சரத்பொன்சேகா இராணுவத் தளபதியாக நியமிக்கப்பட்டமை நாட்டின் தேசிய பாதுகாப்புத் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட சிறந்ததொரு நடவடிக்கையென ஜே.வி.பியினர் கூறிவருகின்றனர். சரத் பொன்சேகாவை வடபகுதிக் கட்டளைத் தளபதிப் பதவியிலிருந்து யார் அகற்றினார்கள்? ஜே.வி.பியினர் அங்கம் வகித்த கூட்டணி அரசே அவ்வித நடவடிக்கை மேற்கொண்டது. அப்படியானால் யாழ்ப்பாணப் பகுதியில் தற்போது நிலவும் பாதுகாப்பற்ற நிலைக்கு யார் பொறுப்பேற்றாகவேண்டும்?

வடபகுதிக் கட்டளைத் தளபதிப் பதவியிலிருந்து சரத் பொன்சேகாவை மாற்றம் செய்த ஜே.வி.பியினர் அங்கம் வகித்த அரசே அதற்கான பொறுப்பை ஏற்க வேண்டும். இவைகள் ஜே.வி.பியினர் அறியாத விடயங்களல்ல. இப்போதும் ஜே.வி.பியினர் ஏதும் அறியாத நிலையிலேயே தாம் இருக்கின்றனர் எனக் காட்டிக் கொள்கின்றனர். இவை நாட்டு மக்களுக்குப் பகிரங்கப் படுத்தப்பட்டாலும்கூட, ஐ.தே. கட்சியினர் ஒப்பந்தக்காரர்கள்; அரச சார்பற்ற நிறுவனங்கள் காகக் கூட்டத்தை ஒத்தவை; விடுதலைப் புலிகள் சதுரங்கக் காய்களை ஒத்தவர்கள் என வர்ணித்துக் குற்றஞ்சாட்டி தமது காலத்தை ஓட்டும் ஜே.வி.பியினர் தாம் கூறுவது மட்டுமே பொருத்தமானதெனக் காட்டிக்கொள்ள விழைவது அவர்களின் மாஜாயால தந்திர வித்தையாகும்.

இதற்காகவும் ஜே.வி.பியினரைக் குறைகூற இயலாது. அது அவர்களது புத்திசாலித்தனமான காய் நகர்த்தும் திறன். அன்ரன் பாலசிங்கம் தெரிவித்த விதத்தில் மூளையற்ற சிங்களவர்கள் இந்நாட்டில் இருக்கும் வரை இவ்வித ஏமாற்று வேலைகளால் ஜே.வி.பியினர் ஒருபோதும் எந்த வகையிலும் நட்டமடையப் போவதில்லை. ✱


## புதிய பிரிவுகள் ஆரம்பம்

**CIMA**
Foundation & Managerial Level
ஆரம்பம் - 07.01.2006 11.30 a.m.

**aat (SriLanka)**
Medium - Tamil & English
ஆரம்பம் - 07.01.2006 11.30 a.m.

Further Details:
**Director**
Jaffna College Undergraduate Dept.,
464, Hospital Road,
Jaffna.
(C/46862)(21.11.15)



## கண்ணீர் அஞ்சலி

தாதிய உத்தியோகத்தராக யாழ்.போதனா வைத்தியசாலையில் பணிபுரியும்
திரு.கே.சிவகுமாரன், திருமதி யசோ சந்திரமௌளீஸ்வரன்
ஆகியோரின் அன்புத் தந்தை
**கணபதிப்பிள்ளை கணேசன்**
காலமானதையிட்டு துயருறும் குடும்பத்திற்கு
எமது கண்ணீர் அஞ்சலியைச் செலுத்துகின்றோம்.
தாதியர் நலன்புரிச்சங்கம்,
யாழ். போதனா வைத்தியசாலை.
(44300)(21.11.15)



## றிச்கேக்

175 றிச் கேக் தயாரிக்கத் தேவையான மூலப் பொருள்கள்

| | |
|---|---|
| 500g ரவை | 1 போ.கோல்டன் சிரப் |
| 500g பட்டர் | 200 கிராம் கென்டீட்பீல் |
| 500g பிளம்ஸ் | 1 வெனிலா எசன்ஸ் |
| 500g ரெய்சின்ஸ் | 1 ஆமன்ட் சென்ஸ் |
| 500g செரீஸ் | 1/2ரோஸ் எசன்ஸ் |
| 500g பம்கின் பிரசர்வ் | 1 வைன் கிளாஸ் தேன் |
| 600g கஜீ | 2 வைன் கிளாஸ் பிரண்டி |
| 200g கறன்ஸ் | 1/4 தேக்கரண்டி உப்பு |
| 500g சவ்சவ் | 27 முட்டை (27 மஞ்சள் கரு |
| 500g ஜின்ஜர் பிரசர்வ் | 14 வெள்ளைக்கரு) |
| 1போ.ஸ்ட்ரோபரி ஜேம் | (1/4 தேக்கரண்டி சாதிக்காய்) |
| 600g சொவ்ட் சுகர் | |

## RICH CAKE செய்யும் முறை

முட்டை, சீனி, வறுத்த ரவை, பட்டர் முதலியவற்றைத் தவிர மற்றைய பொருள்களை சிறு துண்டுகளாக வெட்டி 5 நாள்களுக்கு வைக்கவும். வெள்ளைக்கருவை சீனியில் சேர்த்து நன்றாக அடித்து வறுத்த ரவையை சேர்க்கவும். அத்துடன் மஞ்சட்கரு, பட்டர், வெட்டிய பொருள்கள் சிறிதளவு பேக்கிங் பவுடரையும் சேர்க்கவும். பிறகு கேக் டிரேயில் போட்டு பேக் செய்யவும்.

குறிப்பு : பெற்றா எசன்ஸ் ஸ்தாபனத்திற்கு வேறு கிளைகள் இல்லை.

PETTAH ESSENCE SUPPLIERS
**பெற்றா எசன்ஸ் சப்ளையர்ஸ்**
104, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். தொ.பே: 222 2386



## இடம் தேவை

றொலெக்ஸ் ஹொட்டலில் இருந்து கஸ்தூரியார் வீதியூடாக வின்சர் தியேட்டர் வரைக்கு மிடையிலான பகுதியில் 1/2 பரப்பளவிற்கு குறையாமல் விலைக்கு இடம் தேவை. நேரில் தொடர்பு கொள்வது விரும்பத்தக்கது.
தொடர்பு : ந.செல்லத்துரை
இல: 11, சப்பல் வீதி, யாழ்ப்பாணம்.
T.P.: 222 6358
(44287) (21.11.15)



## ஒத்து மாறல்

மு/பாண்டியன்குளம் மகாவித்தியாலயத்தில் கல்வி கற்பிக்கும் சங்கீத ஆசிரியை யாழ்ப்பாணம் அல்லது பச்சிலைப் பள்ளியில் கடமையாற்றும் ஆசிரியருடன் ஒத்துமாற விரும்புகின்றார்.
தொடர்புகளுக்கு :
0776913137, 0602212691
(44231)(21.11.15)



## COMPUTER EXPRESS
### Institute of Information Technology

இல. 15, சிறாம்பியடி வீதி,யாழ்ப்பாணம்.(off Stanley Rd.)
021-222 8250,0777 222422

யாழ்நகரில் முதன்முறையாக தமிழ்மொழி விளக்கத்துடன் மூன்று நாள் முழுநேர பயிற்சி நெறி

**Mobile Phone Rep iring Course**

*Course Condense:-*

- Mobile Phone spares (Mobial Phone இல் காணப்படும் பாகங்கள்)
- Type of I.C (Phone ல் காணப்படும் I.C க்கள்)
- Spares பழுதினால் Phone ல் ஏற்படும் பழுதுகள்
- I.C கள் பழுதடைந்தால் Phone ல் ஏற்படும் பழுதுகள்
- பொதுவாக Phoneல் ஏற்படும் பழுதுகளும் அதற்கான காரணங்களும்
- பழுதுகளும் சோதனை வரிசைகளும்.
- நேரடியாக சில I.C க்களை மாற்றுவதன் மூலம் பழுதுகளை கண்டறியும் சில வழிமுறைகள்.
- ஒரு phone ல் இருந்து இன்னொரு Phone இற்கு மாற்றக்கூடிய I.C வகைகள்.
- Power amp I.C ல் தான் பிழை உள்ளதென கண்டறிய சில வழிமுறைகள்.
- Software fault, software codes.

**Hard Ware பயிற்சி**

- Battery இல் voltage அளவிடும் முறை Battery நல்ல நிலையில் உள்ளதா என அறியும் முறை. அத்துடன் Chareg ஏறாத Battery ஐ எவ்வாறு மீண்டும் Charge ஏற்றிப்பயன்படுத்துவது பற்றிய பயிற்சி.
- Phone service செய்யும் பயிற்சி.
- Resistors, Transistors, Capacitors போன்ற பொருட்கள் board இல் இருந்து கழட்டி மாற்றுவது பற்றிய பயிற்சி நெறி.
- Charge pin, Battery pin, Sim connector, switch, display போன்றவற்றை கழட்டி மாற்றுவதுபற்றிய பயிற்சி.
- புதிய L.E.D மாற்றுவது எவ்வாறு என்ற பயிற்சி.
- IC களை கழட்டுவது எவ்வாறு மீண்டும் புதிய IC க்களை பொருத்துவது எவ்வாறு என்பது பற்றிய பயிற்சிகள்.
- Phone இல் Charge ஏறாவிடின் Phone இல் எவ்வாறு பரிசோதனைகள் மேற்கொள்வது பற்றிய பயிற்சிநெறி.
- Hot Gun பயன்படுத்துவது எவ்வாறு என்ற பயிற்சி.

**Software பயிற்சிகள்**

- Lock உடைப்பது என்பது பற்றிய விரிவான விளக்கம் அத்துடன் பயிற்சி.
- ஒரு Phone இல் உள்ள file ஐ எடுத்து புதிய File மாற்றுவது எவ்வாறு என்ற பயிற்சி (Flash பண்ணும் முறை)

ஒரு பிரிவில் 20பேர் மட்டுமே அனுமதிக்கப்பட உள்ளதால் பதிவுகளிற்கு முந்துங்கள்
ஆரம்பம்: 23/12/2005 08.30-04.30

கொழும்பிலிருந்து வருகைதரும் பிரபல விரிவுரையாளரினால் வகுப்புக்கள் நடாத்தப்படும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடாநாட்டில் வீதிக்கு வீதி இராணுவம் இந்த நிலையில் சமாதானம் சாத்தியமா?

## மாவை எம்.பி. நாடாளுமன்றத்தில் கேள்வி

கொழும்பு,டிசெ.21

குடாநாட்டின் வீதிக்கு வீதி இராணுவம் நிற்கிறது. அவர்களை வெளியேற்றும் வரை சமாதான சூழல் சாத்தியமாகாது.

- இவ்வாறு யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் நாடாளுமன்றில் இடம்பெற்ற வரவு - செலவுத் திட்டம் மீதான விவாதத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

புங்குடுதீவில் இளம் யுவதி ஒருவர் பாலியல் வல்லுறவுக்குள்ளாக்கப்பட்டு படுகொலை செய்யப்பட்டுள்ளார். மரணச் சடங்கில் கலந்துகொள்ளச் சென்ற மாணவர்கள், பொதுமக்கள் படையினரால் தடுத்து நிறுத்தப்பட்டு தாக்கப்பட்டுள்ளனர்.

இதேபோன்று -

எமது கூட்டமைப்பைச் சேர்ந்த யாழ்.மாவட்ட எம்.பியான கஜேந்திரன் இராணுவத்தினரால் தாக்கப்பட்டுள்ளார். மரணச் சடங்கில் கலந்துகொள்ளச் சென்ற யாழ். பல்கலைக்கழக மாணவர்கள், பேராசிரியர்கள் மீது இராணுவத்தினர் நடத்திய துப்பாக்கிச் சூடு மற்றும் தாக்குதல்களினால் 50 இற்கு மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர்.

குடாநாட்டுக்கு ஒவ்வொரு வீட்டுக்கு முன்பாகவும் இராணுவம் நிற்கின்றது. இவர்களால் இளம் பெண்களின் கற்புக்கு, உயிருக்கு ஆபத்து ஏற்பட்டுள்ளது. இளைஞர்கள் மீது தாக்குதல்கள் தொடர்கின்றன. இவ்வாறான நிலையில் சமாதானப் பேச்சு பற்றிப் பேசுவதில் அர்த்தமில்லை.

குடாநாட்டில் தொடரும் இராணுவ அடக்குமுறைகளால் கொதித்துப்போயிருக்கும் இளைஞர்கள் இராணுவத்தை அவர்களின் வழியில் சந்திப்பதில் ஆயுதப்பயிற்சி பெறுவதில் ஆர்வம் காட்டத் தொடங்கியுள்ளனர். இராணுவத்தைத் தமது இடங்களிலிருந்து விரட்டியடிப்பதற்காக மக்கள் திரண்டெழுந்துள்ளனர். எனவே, குடாநாட்டில் மட்டுமன்றி தமிழர் தாயகப் பகுதியில் இயல்பு நிலையைத் தோற்றுவிக்க அதியுயர் பாதுகாப்பு வலயங்களிலிருந்து இராணுவத்தை அரசு உடனடியாக வாபஸ் பெறவேண்டும்.

இதேவேளை, தற்போது ஆறுமுகன் தொண்டமான், சந்திரசேகரன் போன்றவர்களுடன் இணைந்து நாம் பொதுவேலைத் திட்டமொன்றை முன்னெடுக்கவுள்ளோம். இதன் மூலம் எமது பலத்தை ஒன்றுதிரட்டி பேரினவாத சக்திகளுக்கு எதிரான செயற்பாடுகளை முன்னெடுப்போம் - என்று அவர் தெரிவித்தார். (ஐ-202)

# மஹிந்த - நாட்டுக்கோழி! ரணில் - பண்ணைக்கோழி!

## அதனால்தான் வெற்றி என்கிறார் ஜெயராஜ்

கொழும்பு, டிசெ.21

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கும், ஐ.தே.க. தலைவர் ரணில் விக்கிரமசிங்கவிற்குமிடையிலான கடந்த தேர்தல் போட்டியானது நாட்டுக்கோழிக்கும், பண்ணைக் கோழிக்குமிடையிலான சண்டை போன்றது. இதனால்தான் மஹிந்த வெல்லுவார் என நாம் உறுதியாகக் கூறினோம். எவ்வாறாயினும், ஜே.வி.பியினரின் ஆதரவு இருந்திருக்காவிட்டால் மஹிந்த ஜனாதிபதியாக வந்திருக்க முடியாது.

- இவ்வாறு நேற்றுமுன்தினம் நாடாளுமன்றத்தில் தெரிவித்தார் வர்த்தக, வாணிபத்துறை அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே. வரவு - செலவுத் திட்ட இரண்டாம் வாசிப்பின் மீதான ஐந்தாவது நாள் விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு கூறினார். அங்கு அவர் மேலும் கூறியதாவது:-

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் எதிர்க்கட்சியினர் போலியானதும், மோசமான குற்றச்சாட்டுக்களையும் எமது ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மீது சுமத்தினர். ஹெல்பிங் அம்பாந்தோட்டை பற்றி கூறினர். சமுர்த்தி பற்றிய குற்றச்சாட்டுக்களை முன்வைத்தனர். ஆனால், தேர்தலில் மக்கள் அதனை நிராகரித்து விட்டனர்.

விடுதலைப் புலிகளிடமிருந்து கருணாவைப் பிரித்தமை தொடர்பில் தேர்தல் காலத்தில் ஐ.தே.கட்சி எம்.பியொருவர் கருத்து வெளியிட்டிருந்தார். தேர்தலில் ஐ.தே.க. தோல்வியடைய இதுவே பிரதான காரணியாக இருந்தது.

மஹிந்த ராஜபக்ஷ ஒரு நாட்டுக்கோழி. ரணில் ஒரு 'புறொயிலர்' கோழி. நாட்டுக்கோழி சின்ன முட்டை இட்டாலும் சத்தான முட்டையாகவே அது இருக்கும்.

கடந்த தேர்தலில் வர்த்தகப் புள்ளிகளும், கிறிஸ்தவ மதகுருமார்களும் ஐக்கிய தேசியக் கட்சிக்கு ஆதரவாகவே செயற்பட்டனர். தனியார் தொலைக்காட்சிகளும் 'எஸ்.எம்.எஸ்.' கணிப்பீடுகளைச் செய்து ரணிலைத் தலைவராக்கினர். இப்போது கரு ஜயசூரியவா, ரணிலா ஐ.தே.க. தலைவரென்று அந்தத் தொலைக்காட்சிகள் 'எஸ்.எம்.எஸ்.'கணிப்பீட்டைச் செய்யவேண்டும். ஐ.தே.கவிற்குள் உட்கட்சிப் பூசல்கள் அவ்வளவு தூரம் தீவிரமடைந்துள்ளன.

- இவ்வாறு கூறினார் அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே. (க)

# முஸ்லிம்களைக் கொலைசெய்யும் புலிகளிடமே கொலைகாரர்களைக் கண்டுபிடிக்கக் கேட்பதா?

## ஏனைய முஸ்லிம் தலைவர்களைப் பார்த்துச் சீறுகிறார் அதாவுல்லா




கிழக்கிலே முஸ்லிம்கள் கொலை செய்யப்படுவது தொடர்பாக கொலையாளிகளிடமே கொலையாளிகளைக் கண்டுபிடிக்கும் பொறுப்பை ஒப்படைத்துள்ளார்கள் எமது முஸ்லிம் தலைவர்கள்.

அவர்களின் இயலாமையும் பயத்தையும் எண்ணி நாம் வெட்கப்பட வேண்டியுள்ளது. புலிகள் செய்கின்ற இந்தக் கொலைச் சம்பவங்களை கண்டிக்க இயலாது அவர்களிடமே கொலையாளிகளைக் கண்டுபிடிக்கும் பொறுப்பை ஒப்படைத்து, மக்களுக்கு சேவை செய்பவர்களாகத் தங்களைக் காட்டிக் கொள்கிறார்கள் எமது தலைவர்கள்.

- இவ்வாறு கூறினார் அமைச்சர் அதாவுல்லா. நேற்றுமுன்தினம் நாடாளுமன்றில் இடம்பெற்ற 2006ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான ஐந்தாம் நாள் விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறினார். அவர் மேலும் கூறியதாவது:-

கிழக்கில் இடம்பெற்றுவரும் வன்முறைச் சம்பவங்களுக்கு புலிகள்தான் காரணம். தாங்கள் செய்கின்ற கொலையை ஏற்றுக்கொள்ளக் கூடிய தைரியம் புலிகளிடம் இல்லை.

புலிகள் எத்தனையோ பேரைக் கொலை செய்துள்ளார்கள். அதில் ஒன்றையாவது நாங்கள்தான் செய்தோம் என அவர்கள் ஏற்றுக்கொண்டிருக்கிறார்களா? செய்வதெல்லாம் அவர்கள். அவர்கள் கொலைகளைச் செய்வது மாத்திரமின்றி அக்கொலைகளுக்கான பழியை வேறு சிலர் மீதுபோட்டும் விடுகின்றனர்.

கருணா குழுவினரே இதைச் செய்கின்றனர் என்கின்றனர். அது போதாதென்று அவர்களுடன் முஸ்லிம் அமைச்சர்களையும் இணைத்துக் கதைகட்டிவிடுகின்றனர். இது தான் புலிகளின் அதர்ம யுத்தம்.

இவ்வாறான நிலை ஏற்பட வழி சமைத்தவர்கள் ஐ.தே.கவினரே தான். 1987 இல் இலங்கை - இந்திய ஒப்பந்தம் மூலம் வடக்கு - கிழக்கு மக்களுக்கே தெரியாமல் வடக்கு -கிழக்கை இணைத்து கிழக்கு மக்களுக்குத் துரோகம் செய்தனர்.

அதேபோல் யுத்தநிறுத்த ஒப்பந்தத்தை ஏற்படுத்தி அதில் முஸ்லிம்களின் பாதுகாப்பைப் புறக்கணித்து முஸ்லிம்களுக்குத் துரோகம் செய்தனர்.

இந்த நிலைமையின் காரணமாகவே முஸ்லிம்களுக்கு எதிரான தற்போதய நிலை ஏற்பட்டுள்ளது. இதைச் செய்பவர்கள் புலிகள்தான் என அனைவருக்கும் நன்றாகத் தெரியும். அப்படித் தெரிந்திருந்தும் கொலை செய்தவர்களைப் பிடித்துத் தருமாறு புலிகளிடமே கேட்கின்றனர் எமது முஸ்லிம் தலைவர்கள்.

நாடாளுமன்றத்திற்கு வந்துவிட்டோம். மக்களுக்கு ஏதாவது செய்யவேண்டும் என்ற நோக்கிலேயே இவர்கள் இவ்வாறு செய்கின்றனர். -என்றார் அவர். (க)

# அமைச்சர்களின் எண்ணிக்கை அதிகரிப்பு அதனால் அரசின் மீது மக்களுக்கு அதிருப்தி

## நாடாளுமன்றில் மீண்டும் ஜே.வி.பியினர் தெரிவிப்பு

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இந்த நாட்டு மக்களை மதிப்பவராகவிருந்தால் அவரது அமைச்சரவையில் அடங்கியுள்ள அமைச்சர்களின் எண்ணிக்கையைக் குறைக்க வேண்டும்.

அமைச்சர்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டிருப்பதன் காரணமாக மக்கள் இந்த அரசின் மீது வெறுப்படைந்துள்ளனர். அரசின் எதிர்காலத்தைக் கேள்விக்குறியாக்கியிருக்கும் இந்த சாபக்கேடான நிலையை ஜனாதிபதி மாற்றி அமைக்கவேண்டும்.

- இவ்வாறு கூறினார் ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர் கே.டீ.லால்காந்த.

நேற்றுமுன்தினம் நாடாளுமன்றில் வரவு - செலவுத் திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான ஐந்தாம் நாள் விவாதத்தின்போது கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறினார். அவர் அங்கு மேலும் கூறியதாவது:-

இந்த அரசில் அமைச்சர்களின் எண்ணிக்கை என்றுமில்லாதவாறு இம்முறை அதிகரித்துள்ளது. இந்த நாட்டின் அரசியல் கலாசாரம் சீர்குலைந்துவிட்டதை இது எடுத்துக் காட்டுகின்றது.

இதன் காரணமாக மக்கள் இந்த அரசின் மீது ஒருவகையான அதிருப்தி அடைந்துள்ளனர். அவர்கள் வெளிப்படையாக எதிர்ப்புக் காட்டாவிட்டாலும், என்றாவது ஒரு நாளைக்கு அது பூகம்பமாக வெடிக்கும்.

இது அரசின் எதிர்காலத்திற்கு ஆபத்தாக அமையும். இதைக் கருத்தில்கொண்டு ஜனாதிபதி செயற்படவேண்டும். இந்த விடயத்தில் நேர்மையைப் பின்பற்றுங்கள். நீதியாக நடவுங்கள்.

அமைச்சர்களின் எண்ணிக்கையை அதிகரிக்கவேண்டிய இக்கட்டு நிலைக்குள் ஜனாதிபதி சிக்கிவிட்டார் என்றே தெரிகின்றது. இதை மக்கள் என்றைக்கும் ஏற்கமாட்டார்கள்.

ஆகவே, நான் மிகவும் அன்பாகக் கேட்டுக்கொள்கிறேன். தயவு செய்து அமைச்சர்களின் எண்ணிக்கையைக் குறையுங்கள். - எனக் கூறினார்.

கடந்த வாரம் இதே விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினரான நந்தன குணதிலகவும் அமைச்சர்களின் எண்ணிக்கை அதிகரிப்பைக் கடுமையாக விமர்சித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# 104 மேலதிக வாக்குகளால் பட்ஜெட் நிறைவேறியது

## மு.காங்கிரஸும் ஆதரித்தது

கொழும்பு,டிசெ.21

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கத்தின் முதலாவது வரவு - செலவுத் திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு நேற்றுமுன்தினம் நாடாளுமன்றத்தில் 104 மேலதிக வாக்குகளால் நிறைவேறியது.

வரவு - செலவுத் திட்டத்திற்கு ஆதரவாக 119 வாக்குகளும், எதிராக 15 வாக்குகளும் கிடைத்தன. ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், ஜாதிக ஹெல உறுமய, ஜே.வி.பி., ஈ.பி.டி.பி. ஆகிய கட்சிகளைச் சேர்ந்தோரும், பிரதி அமைச்சர் வடிவேல் சுரேஷ், நாடாளுமன்ற உறுப்பினர் பைசர் முஸ்தபா ஆகியோரும் அரசாங்கத்திற்கு ஆதரவாக வாக்களித்தனர்.

ஐக்கிய தேசியக் கட்சியும், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸும் வாக்கெடுப்பில் கலந்துகொள்ளவில்லை. தமிழ் தேசியக் கூட்டமைப்பு மாத்திரமே எதிர்த்து வாக்களித்தது. ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர்களும், இ.தொ.கா. உறுப்பினரும், பிரதியமைச்சருமான வடிவேல் சுரேஷும் அரசுக்கு ஆதரவளிப்பதற்காக எழுந்து நின்றபோது ஆளுங்கட்சி உறுப்பினர்கள் மேசை மீது தட்டி மகிழ்ச்சி தெரிவித்தனர்.

வரவு - செலவுத் திட்ட மூன்றாம் வாசிப்பின் மீதான குழுநிலை விவாதம் இன்று முதல் நடைபெறவுள்ளது. (க)

# 'பட்ஜெட்'டை வரவேற்று சபையில் கவிதை பாடினார் டி.எம்.ஜயரட்ண

கொழும்பு, டிசெ.21

அரசாங்கத்தின் வரவு - செலவுத் திட்டத்தைப் புகழ்ந்து நேற்றுமுன்தினம் நாடாளுமன்றத்தில் கவிதை பாடினார் தபால் தொலைத்தொடர்புகள் அமைச்சர் டி.எம். ஜயரட்ண.

வரவு - செலவுத் திட்ட இரண்டாம் வாசிப்பின் பின்னர் அவர் இவ்வாறு கவிதை பாடி அரச வரவு - செலவுத் திட்ட யோசனைகளைப் புகழ்ந்துத் தள்ளினார்.

நாடாளுமன்ற நிலையியற் கட்டளையின்படி நாடாளுமன்ற உறுப்பினரொருவர் கவிதையை வாசிக்க மட்டுமே முடியும். அல்லது சபையில் அதனை சமர்ப்பிக்கலாம். ஆனால், அதற்கு மாறாக ராகத்துடன் அமைச்சர் கவிதையை இசையுடன் பாடினார்.

அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களும் கவிதையை நன்றாக ரசித்துக் கேட்டுக்கொண்டிருந்தனரே தவிர, கவிதை பாடுவது தொடர்பான நாடாளுமன்ற நிலையியற் கட்டளையை எவரும் கவனிக்கவில்லையென்பது குறிப்பிடத்தக்கது. (க)

# புரிந்துணர்வு ஒப்பந்தத்தை மறுசீரமைத்து பேச்சு மூலம் தீர்வுகாண அரசு விரும்புகிறது

## சபையில் அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா அறிவிப்பு

கொழும்பு,டிசெ.21

போர்நிறுத்தப் புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் குறைபாடுகளை நீக்கி, மறுசீரமைத்து, புதிதாக உருவாகும் ஒப்பந்தத்தைப் பாதுகாத்து பேச்சு மூலமாக தீர்வொன்றைக் காண்பதற்கே அரசாங்கம் விரும்புகின்றது. விடுதலைப் புலிகள் இது விடயத்தில் நேர்மையாகவும், பொறுப்புடனும் பிரதிபலிப்பை வெளிப்படுத்துவார்கள் என எதிர்பார்க்கின்றோம்.

- இவ்வாறு நேற்றுமுன்தினம் நாடாளுமன்றத்தில் தெரிவித்தார் சுகாதார, போஷாக்கு துறை அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா. வரவு - செலவுத் திட்டத்தின் இரண்டாம் வாசிப்பின் மீதான ஐந்தாவது நாள் விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு கூறினார். அவர் அங்கு மேலும் கூறியதாவது:-

வரவு- செலவுத்திட்டத்தின் இலக்குகளை அடைய வேண்டுமாயின் நாட்டில் அமைதி நிலவ வேண்டுமென்பதை அரசாங்கம் ஏற்கிறது. அதனால்தான் இனப்பிரச்சினைக்கு நிரந்தரத்தீர்வொன்றை தேடுவதற்காக ஜனாதிபதி நடவடிக்கை எடுத்துவருகிறார். தேர்தலில் 'மஹிந்த சிந்தனை'யில் கூறியதற்கமைய தெற்கில் அமைதி முயற்சிகள் தொடர்பில் ஒருமைப்பாட்டை ஏற்படுத்த ஜனாதிபதி நடவடிக்கை எடுத்துவருகிறார். இதற்காக அவர் அனைத்துக் கட்சிகளுடனும் பேச்சு நடத்திவருகிறார். அதற்கான பின்புலத்தை அவர் தயார் செய்துவருகிறார்.

தனித்தரப்பால் அமைதி முயற்சிகளை ஆரம்பிக்கமுடியாது. இதற்கு பரஸ்பர விருப்பம் அவசியம். போர்நிறுத்த புரிந்துணர்வு ஒப்பந்தம் உட்பட அனைத்து விடயங்களையும் புலிகளுடன் பேசுவதற்கு அரசு தயாராகவிருக்கிறது. அதேபோல் தனது முன்னைய நிலைப்பாட்டைத் தளர்த்திய அரசு, விடுதலைப்புலிகளுடன் பேச்சுகளை ஆசிய நாடொன்றில் நடத்தவும் சம்மதம் தெரிவித்திருக்கின்றது.

தனது தேசிய செயற்றிட்டத்தில் அமைதிக்கான தீர்வு முயற்சிகளையே ஜனாதிபதி முதலாவதாக குறிப்பிட்டிருக்கிறார். இதுவரை தெற்கிலுள்ள அரசியல் கட்சிகளுடன் நடத்திய பேச்சுகளில் ஜனாதிபதி நல்ல முன்னேற்றத்தைக் கண்டிருக்கிறார். பிரதான எதிர்க்கட்சியும் இதற்கு ஒத்துழைப்பதாக உறுதியளித்துள்ளது.

- இவ்வாறு கூறினார் அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா. (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

### விற்பனைக்கு

பாவித்த நல்ல நிலையில் உள்ள **TVS Champ Bike, Bajaj Sprit Scooter, LG Fridge Coolmax, Table Top wet Grinder, Air Cooler, Stereo Tape Recoder** மற்றும் **Lap Top model Computer, Pentium III Computer with maltimedia and Printer** விற்னைக் குண்டு. 39, பிறவுண் வீதி, நீராவியடி, யாழ்ப் பாணம். **T.P.No.:** 077 9163439. (44319)

மணவறை (புதிய) விற்னைக்குண்டு. தொடர்பு: **S**.தயா, கோயில் வாசல், இணு வில் சந்தி. (44232)

### நாய்க்குட்டி விற்பனை

3 வயது நிரம்பிய **Dobermann'- Pincher** நாய் குறைந்த விலையில் விற்பனைக் குண்டு. தொடர்பு: **S**.நிருஜன், 249/2, நாயன் மார் வீதி, நல்லூர். (44279)

### இறைச்சிக்கோழி விற்பனைக்கு

**Prima** உயிர் **Broiler** மற்றும் இறைச்சிக் கோழிகள் சுகாதார முறைப்படி உடன் சுத்தம் செய்து தினமும் பெற்றுக்கொள்ளலாம். (**Electronic** நிறுவை) தொடர்பு:(நல்லூர் வீடியோ சென்ரர் வளவு), 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (44136)

### கோழிக்குஞ்சு விநியோகம்

இரண்டு மூறை தடுப்பு மருந்து போடப் பட்ட **Original Prima Broilar** குஞ்சுகள், பேட்டுக் குஞ்சுகள் 26.12.2005 திங்கட் கிழமை பிற்பகல் விநியோகிக்கப்படும். எமது பருத்தித்துறை, நெல்லியடிக் கிளைகளிலும், கரன் - உடுவில் (ஆலடி), நல்லூர் பாம் சென் ரர் - 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந் தையடி, நல்லூர். (44135)

**Refresh System**

*புதிய, பழைய கணனிகள் வீட்டில் வந்து திருத் திக்கொடுக்கப்படும். தொடர்பு: சுதுமலை,* **மானிப்பாய், 077-6279671, 077-3253104.**

(43247)(42.32.19.11)

### வீடு வாடகைக்கு

இல.170, கொழும்புத்துறை வீதி, சுண் டுக்குளி, கணக்கர் சந்திக்கு அருகில் சகல வச திகளுடனும் கூடிய 5 அறைகள், 2 பெரிய ஹோல், வாகனத் தரிப்பிட வசதி மற்றும் நன் னீர் வசதியுடன் கொண்ட வீடு வாடகைக் குண்டு. தனியார் நிறுவனங்களுக்கும் வியா பார நிறுவனங்களுக்கும் உகந்தது. தொடர்பு: 021 - 222 7530, 021 - 222 6612. (44305)

### தவறிவிட்டது

காரைநகரைச் சேர்ந்த திருமதி புஸ்பலீலா வதி இராசரத்தினம் என்பவருடைய தே.அ. அட்டை (536172432V), கடற்படை அ. அட்டை, இராணுவ அ.அட்டை, தொழில் அ. அட்டை என்பன 17.12.2005 அன்று தவறி விட்டது. கண்டெடுத்தவர்கள் சயம்பு வீதி, காரைநகர் என்ற முகவரியுடன் தொடர்பு கொள்ளவும். (44311)

அரியாலையைச் சேர்ந்த செல்வரத்தினம் ருக்மணி என்பவரது தே.அ.அட்டை (இல.556263930V), வி.அ.அட்டை என் பன யாழ்ப்பாணத்திற்கும் புன்னாலைக்கட் டுவனுக்கும் இடையில் தவறிவிட்டது. தயவு செய்து கண்டெடுத்தவர்கள் இல.90, புங்கன் குளம் றோட், கொழும்புத்துறை **T.P.:** 0776621845, 077 6327618 தொடர்பு கொள்ளவும். (44312)

### மணமகன் தேவை

யாழ்.இந்து, பட்டம் பெற்ற நிரந்தர அரச உத்தியோகத்தராக வேலை பார்க்கும் மண மகளுக்கு 39-43 வயதிற்குட்பட்ட படித்த மணமகன் தேவை. தொடர்பு: 077 9577323. (43284)

**கோபாலையரின்**

*தமிழ் இலக்கணப் பேரகராதி*

*17 தொகுதிகள்*

**சேமமடு பொத்தகசாலை**

UG.*52,பீப்பிள்ஸ் பார்க்,*

*கொழும்பு-11,*

*011-2331475* **பெற்றுக்கொள்ளலாம்.**

(சி/46667)




கெருடாவிலைப் பிறப்பிடமாகவும், ஆஸ்திரேலி யாவை வதிவிடமாகவும் கொண்ட **சிவராஜன்- திருநந்தினி** தம்பதியினரின் செல்வப் புதல்வி செல்வி **சிவானி** இன்று (21.12.2005) புதன்கிழமை தனது முதலாவது பிறந்த நாளை கொழும்பில் வெகுவிமரிசையா கக் கொண்டாடுகிறார்.

இவரை அன்பு அப்பா, அம்மா மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் கருமாரி அம்மன் அருள் பெற்று பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துகின்றனர்.

*தகவல்:* **சிவராஜன்- திருநந்தினி**

(44283)(51-11-34)

**FedEx** Express® **அனுசரணையுடன்** **FedEx** Express®

## திருமுருகன் கொம் நெற்றின் பரிசு மழை

**05.12.2005 முதல் 15.01.2006 வரை**

எமது நிறுவனத்தின் மூலம் நத்தார், புதுவருட, பொங்கல் தினங்களை முன்னிட்டு உங்கள் உறவுகளுக்கு துரித கதியில் கடிதங்கள், உணவு, உடை, V.D.O பிரதி மற்றும் அன்பளிப்புப் பொருள்களை அனுப்புவோரின் பற்றுச்சீட்டு இலக்கங்கள் குலுக்கலின் மூலம் அதிர்ஷ்டம் பார்க்கப்பட்டு பெறுமதிவாய்ந்த பரிசில்கள் வழங்கப்படும்.

**முதலாம் பரிசு - தங்கநாணயம் மற்றும்**

**பெறுமதிவாய்ந்த 10 ஆறுதல் பரிசுகள்**

**மற்றும் 20% கழிவு**

**சுவிஸ்லாந்துக்கான 5kg பொதி ஒன்றிற்கு 1kg க்கான கட்டணம் 650/=**

**லண்டனுக்கான 5kg பொதி ஒன்றிற்கு 1kg க்கான கட்டணம் 500/=**

**ஐரோப்பிய நாடுகளுக்கு விசேட கழிவு வழங்கப்படும்.**

## திருமுருகன் கொம் நெற்

**259, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.** Tel - 021 222 7835 Fax - 021 222 7836

46, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம். (பலநோக்கு கூ.ச.முன்பாக) Tel - 021 222 7560 Fax - 021 222 7310


36, செல்லப்பிள்ளையார் கட்டடம், பிரதான வீதி, நெல்லியடி, கரவெட்டி. Tel - 021 226 4252 Fax - 021 226 4253

குகன் தொலைத்தொடர்பகம் 166, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். Tel - 021 222 2027 Fax - 021 222 2993

**வாடிக்கையாளர்களுக்காக தினசரி காலை 7.00 மணிமுதல் இரவு 10.00 மணிவரை எமது சேவை நடைபெறுகின்றது.**

***யாழ். நகரில் இவை அனைத்தும் திருமுருகன் கொம் நெற்றில் மட்டும்***

# மரண அறிவித்தல்



## மருதப்பு நல்லையா

வராகி அம்மன் கோயிலடி, கொக்குவில் மேற்கு, ஆனைக்கோட்டையைச் சேர்ந்த மருதப்பு நல்லையா 18.12.2005 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் பரமேஸ்வரியின் அன்புக் கணவரும் ஜெயராணி (வசந்தா), செல்வ ராணி (றஞ்சி), புவனேஸ்வரி (மலர் - சுவிஸ்), ஜெயகௌரி (ஜெயா-சுவிஸ்), சிவகுமார் (சிவா-சொலக்ஸ் மூக்குக் கண்ணாடியக உரிமையாளர்) ஆகியோரின் அன்புத் தந்தையும் எழில்மோகன் (கலா-கலா ஸ்ரோர்ஸ், திருநெல்வேலி), கைலாத நாதன் (சின்னத்தம்பி), அகிலேஸ்வரன் (சுவிஸ்), சிறீகாந்தன் (கரன் - சுவிஸ்), ஜெயந்தி ஆகியோரின் மாமனும் வினோயா, நிசானா, றாகவி, நிரோபா, கௌசிகா, நிரோயன், அனோயன், அமிலன், ஜெனசன், சயந்தன், சரனியன், சயீபகாந், நிஷாலி ஆகியோரின் பாசமிகு பேரனும் சற்குருநாதன், சற்குணதேவி, குருநாதன், சாந்தி, தில்லைநாதன், செந்தில்நாதன், துஷந்தி ஆகியோரின் சித்தப்பாவும் இராசேஸ்வரி (கனடா), காலஞ்சென்ற வாமதேவன், நகுலேஸ்வரி ஆகியோரின் மைத்துனரும் காலஞ்சென்றவர்களான நடராசா, இரத்தினராசா ஆகியோரின் சகலனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (22.12.2005) வியாழக்கிழமை அவ ரது இல்லத்தில் நண்பகல் 12 மணிக்கு நடைபெற்று, தகனக்கிரியைக்காக அன் னாரின் பூதவுடல் ஒரு மணியளவில் கோம்பையன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*தகவல்:*

**N.சிவகுமார்**

*சொலக்ஸ் உரிமையாளர்,*

வராகி அம்மன் கோயிலடி,
கொக்குவில் மேற்கு,
ஆனைக்கோட்டை.

*(44331)(32-34-19)*

## பாடநூல் விநியோகம்

யாழ்ப்பாணம்,டிசெ.21

கொக்குவில் இந்துக் கல்லூரியில் தரம் 7முதல் 10 வரை கல்வி பயிலும் மாண வர்களுக்கான இல வச பாடநூல்கள் எதிர்வரும் வெள் ளிக்கிழமை முற்ப கல் 10 மணிக்கு பாட சாலையில் வைத்து விநியோகிக்கப்பட வுள்ளதால் மாணவர் கள் அன்றைய தினம் தவறாது கல்லூரிக்கு வருகைதந்து இல வசப் பாடநூல்களைப் பெற்றுக் கொள்ளும் படி பாடசாலை அதி பர் கேட்டுள்ளார்.

(ஒ)

## கணக்காய்வு சேவை திறமைகாண் பரீட்சை

வலி.வடக்கு,டிசெ.21

இலங்கை கணக் காய்வுத் திணைக் களத்தின் கணக் காய்வு சேவை II ஆம் வகுப்பு I ஆம் தர அலுவலர்களுக் கான வினைத்திறமை காண் தடைப்பரீட்சை எதிர்வரும் சனிக் கிழமை கொழும்பில் நடைபெறவுள்ளது.

பரீட்சார்த்திகளுக் கான அனுமதி அட் டைகள் பரீட்சைத் திணைக்களத்தினால் உரியவர்களுக்கு அனுப்பி வைக்கப் பட்டுள்ளன.

(ஒ-202)

## 100th Anniversary
## நூற்றாண்டு நிறைவு



**Late Rev.**

**Dr.A.J.B.Antoninus** O.M.I

M.A., PhD.,Dip.Ad.Ed.,M.A.E.A.,M.R.A.S.C.

**Former Director SETIK**

22.12.2005 [வியாழன்]
யாழ்.புனித யாகப்பர் ஆலயத்தில்
காலை 6.15 மணிக்கு ஆத்மசாந்தித் திருப்பலி

28.12.2005 [புதன்]
நினைவுப் பேருரையும் நூல் அறிமுகமும்

*அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்*

**V.J.Constantine/Director**

**NEO CULTURAL COUNCIL**

115, Bankshall street, Jaffna. Phone: 021-222-3224

(44322)(21.32.34.19)

## 10ஆம் வருட நினைவு நாள்
## 21.12.2005



## திருமதி அன்னம்மா சூசைப்பிள்ளை

**தாம் பெற்ற பிள்ளைகளின்
நல்வாழ்வுக்காகத் தம் வாழ்வையே
தியாகம் செய்த தியாகச் செம்மல்
எமது அன்பான அம்மாவின்
நினைவு எம்மைவிட்டு
என்றும் மறையாது!**

*நீங்காத நினைவுகளுடன்:*


**பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள் மற்றும் உறவினர்.**

*இல.4, கோயில் வீதி
ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.*

*(44320) (32-34-19)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். பல்கலைக்கழகத்திற்குள் நேற்று....



படையினர் ஏவிய கண்ணீர்ப்புகைக்குண்டு


தாக்குதலுக்குள்ளாகி படுகாயமடைந்த உடற்கல்வி விரிவுரையாளர் எம்.இளம்பிறையன்




சம்பவத்தின் பின்னர் இராமநாதன் வீதி...


படையினர் அகன்றபின்னர் வளாகம்.


மாணவர் அறைச் சுவரில் பாய்ந்த படையினரின் தோட்டா.

படங்கள் : பகீரதன்,நேசன்.

# 'தமிழீழம் சிவக்கிறது' நூலை எழுதிய நெடுமாறன் அதற்கான கருத்துரிமை தனக்கு உண்டு என வாதம்

## சென்னை நீதிமன்றில் அவர் எழுத்தில் வாக்கு மூலம்

சென்னை,டிசெ.21

தடைசெய்யப்பட்ட விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாகவும், இந்திய அமைதிப்படைக்கு எதிராகவும் 'தமிழீழம் சிவக்கிறது' எனும் தலைப்பில் நூல் எழுதியதாக பழ.நெடுமாறன் மீதும், அந்நூல்களை வெளிநாட்டிற்கு அனுப்ப முயன்றார் எனத் தமிழ் முழக்கம் சாகுல் ஹமீது மீதும் தமிழக அரசு வழக்குத் தொடுத்துள்ளது.

சென்னை முதலாவது கூடுதல் அமர்வு நீதிமன்ற நீதிபதி செல்வக்குமார் முன்னிலையில் வழக்கு விசாரணை நடைபெற்றபோது பழ.நெடுமாறன் கீழ்க்கண்டவாறு வாக்குமூலம் அளித்தார்.

1987ஆம்ஆண்டு, செப்ரெம்பர் இறுதி வாரத்திலும், 1990ஆம் ஆண்டு பெப்ரவரி மாதத்திலும் இலங்கைத் தமிழர் பகுதிகளில் விரிவாகச் சுற்றுப்பயணம் செய்து அங்குள்ள பல அமைப்புகளைச் சேர்ந்த தலைவர்கள், மக்கள் குழுத் தலைவர்கள், பல்கலைக்கழகப் பேராசிரியர்கள், மருத்துவர்கள், துறவிகள் மற்றும் பொதுமக்கள் ஆகியோரைச் சந்தித்து, அவர்களிடமிருந்து நான் பெற்ற மனுக்களின் அடிப்படையில் சேகரிக்கப்பட்ட செய்திகளை இந்தியா திரும்பியதும் பத்திரிகைகளுக்குப் பேட்டியளித்து வெளியிட்டேன். 'ஆனந்த விகடன்', ஜூனியர் விகடன்', ' தேவி', 'சத்திரியன்' ஆகிய இதழ்களில் கட்டுரைகளையும், தொடர்கட்டுரைகளையும் எழுதிவெளியிட்டேன். இவையாவும் இந்த நூலில் தொகுத்து வெளியிடப்பட்டுள்ளன.

1988ஆம் ஆண்டு மே மாதம் லண்டனில் நடைபெற்ற உலகத் தமிழீழ மாநாட்டிற்குத் தலைமை தாங்கினேன். இம்மாநாட்டில் உச்ச நீதிமன்ற முன்னாள் நீதியரசர் வி.ஆர்கிருஷ்ணய்யர், இந்திய வெளியுறவுத்துறை முன்னாள் செயலாளர் ஏ.பி.வெங்கடேஸ்வரன் மற்றும் இந்திய, பிரிட்டிஷ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலரும் பேசினார்கள். அந்தப் பேச்சுகளைத் தொகுத்து இந்நூலில் சேர்த்துள்ளேன்.

1990ஆம் ஆண்டு மார்ச் இறுதி வாரத்தில் டில்லி சென்று அப்போதைய பிரதமர் வி.பி. சிங், வெளியுறவுத்துறை அமைச்சர் ஐ.கே.குஜ்ரால், அமைச்சர்கள் ஜோர்ஜ் பெர்னாண்டஸ், உன்னிக்கிருஷ்ணன் மற்றும் எதிர்க்கட்சித் தலைவர்கள், நாடாளுமன்ற முக்கிய உறுப்பினர்கள், பத்திரிகையாளர்கள் ஆகியோரைச் சந்தித்து இலங்கையில் நான், கண்டு, கேட்டு, அறிந்த உண்மை விவரங்களை அவர்களுக்குத் தெரிவித்தேன். அவைகளையும் தொகுத்து இந்நூலில் எழுதியுள்ளேன்.



இந்திய அமைதிப் படையின் தளபதிகளாக இலங்கை சென்ற லெப்டினன்ட் ஜெனரல் திபீந் தர்சிங், மேஜர் ஜெனரல் சர்தேஷ் பாண்டே ஆகியோர் எழுதியுள்ள நூல்களில் அவர்கள் தெரிவித்துள்ள கருத்துக்களை அப்படியே இந்நூலில் வெளியிட்டுள்ளேன்.

'எகனாமிக் அண்ட் பொடிகல் வீக்லி' இதழில் பிரிகேடியர் அர்ஜுன் கட்டோஜ் எழுதிய கட்டுரையையும், 'இந்து' இதழில் மனோஜ் ஜோஷி எழுதிய கட்டுரையையும் அப்படியே மொழிபெயர்த்து இந்நூலில் சேர்த்துள்ளேன்.

முன்னாள் பாதுகாப்புத்துறை அமைச்சர், ஜோர்ஜ் பெர்னாண்டஸ்' வெளியிட்ட 'வல்வெட்டித்துறைப் படுகொலை - இந்தியாவின் மைலாய்' என்னும் நூலில் தெரிவிக்கப்பட்டுள்ள கருத்துக்களை அப்படியே மொழிபெயர்த்து இந்நூலில் இணைத்துள்ளேன்.

தமிழக முதலமைச்சராக இருந்த எம்.ஜி. ஆரைச் சந்தித்து ஈழத் தமிழர் பிரச்சினை சம்பந்தமாகப்பேசிய விவரங்களையும் அவரின் கருத்தோட்டங்களையும் அப்படியே இந்நூலில் பதிவுசெய்துள்ளேன்.

இந்திய நாடாளுமன்றத்தில் அமைதிப் படையின் நடவடிக்கை குறித்து நடைபெற்ற விவாதங்களை இந்நூலில் குறித்துள்ளேன்.

தமிழ்நாட்டில் இந்திய அமைதிப்படைக்கு எதிராகப் பல கட்சிகள் நடத்திய போராட்டங்கள், மாநாடுகள் ஆகியவற்றைப் பற்றிய செய்திகளை இந்நூலில் சேர்த்துள்ளேன்.

1993ஆம் ஆண்டில் தளபதி கிட்டு வந்த கப்பலைச் சர்வதேசக் கடலில் இந்தியக் கடற்படை வழிமறித்தது குறித்துச் சென்னை உயர் நீதிமன்றத்தில், ஆள்கொணர்வு மனுவைத் தாக்கல் செய்த விவரங்களையும், கிட்டுவுடன் வந்தவர்களைக் கைதுசெய்து காவல்துறை தொடுத்த வழக்கில், சர்வதேசக் கடல் எல்லையில் இவ்வாறு கைது செய்தது தவறானது, என உச்ச நீதிமன்றம் அளித்த தீர்ப்பையும் இந் நூலில் சுட்டிக் காட்டியுள்ளேன்.

'இன்சைட்' அன் எலுசிஸ் மைண்ட்' எனும் ஆங்கில நூலை எம்.ஆர். நாராயண சாமி எழுதி 2003 ஆம் ஆண்டில் வெளியிட்டார். எனது நூலில் உள்ள பல குறிப்புகளை அடிப்படை ஆதாரமாகக் காட்டியுள்ளார். அவரைப் போல வேறு பலரும் தாங்கள் எழுதியுள்ள நூல்களில் எனது நூலின் பல பகுதிகளை எடுத்தாண்டுள்ளனர். எனது நூலின் நம்பகத்தன்மைக்கும் அதில் கூறப்பட்டுள்ள குறிப்புகள் உண்மையானவை என்பதற்கும் இதுவே ஆதரமாகும்.

இந்திய அரசியல் சட்டம் வழங்கியுள்ள கருத்துரிமையின் அடிப்படையிலும், சனநாயக மரபுகளுக்கு உட்பட்டும் இந்நூலை எழுதி யுள்ளேன்.

இந்திய - சீன எல்லைப் போரின் போதும் இந்திய - பாகிஸ்தான் போர்களின் போதும், இந்திய அரசும், இந்திய இராணுவமும் கடும் விமர்சனத்திற்கு உள்ளாக்கப்பட்டன. இந்திய நாடாளுமன்றத்திற்கு உள்ளேயும், வெளியேயும், பத்திரிகைகளிலும் இத்தகைய விமர்சனங்கள் வெளிவந்துள்ளன என்பதைச் சுட்டிக் காட்டவிரும்புகிறேன்.

எனவே, அரசியல் சட்ட வரம்புக்கு உட்பட்டு இந்நூலை எழுதியுள்ளேன் என்பதையும் என் மேல் சாட்டப்பட்டுள்ள குற்றங்கள் அனைத்தையும் மறுக்கிறேன் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். - என்று உள்ளது.

(க)


Jayoda ஜயோதா

## உத்தியோகபூர்வ முடிவுகள்

டிக்கட் தொடர் இல. 6426007 முதல் 6436380 வரை சீட்டிழுப்பு இல. 195 திகதி 19-12-2005

வெற்றி எண்கள் 2 6 1 3 4 7 சுப்பர் எண் 01

சுப்பர் ஜக்பொட் பரிசு 1,35,47,825/- வெல்லப்படவில்லை

| வெற்றி எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | முழு பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 6 எண்களுடன் சுப்பர் எண் | - | 1,35,47,825/- | - |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 6 எண்கள் | 01 | 10,00,000/- | 10,00,000/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 5 எண்கள் | 08 | 50,000/- | 4,00,000/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 4 எண்கள் | 83 | 5,000/- | 4,15,000/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 3 எண்கள் | 903 | 500/- | 4,51,500/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 2 எண்கள் | 8,967 | 50/- | 4,48,350/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 1 எண் | 88,836 | 10/- | 8,88,360/- |
| வலது பக்கத்தில் இருந்து முதல் 5 எண்கள் | 09 | 5,000/- | 45,000/- |
| வலது பக்கத்தில் இருந்து முதல் 4 எண்கள் | 93 | 1,000/- | 93,000/- |
| வலது பக்கத்தில் இருந்து முதல் 3 எண்கள் | 895 | 100/- | 89,500/- |
| வலது பக்கத்தில் இருந்து முதல் 2 எண்கள் | 8,884 | 20/- | 1,77,680/- |
| | | மொத்தம் | 40,08,390/- |
| மோட்டார் சைக்கிள்களின் பெறுமதி | 08 | 75,325/- | 6,02,600/- |
| வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை | | | 46,10,990/- |

இந்த வியாழக்கிழமை சுப்பர் ஜக்பொட்

ரூ. 1,37,97,075/-

தொடர் இல. 7349281 க்கு மேற்பட்ட செம்மஞ்சள் நிற டிக்கட்டுக்கள் 2005 டிசம்பர் 22 ஆம் திகதி வியாழக்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்கள் செல்லுபடியாகும்.

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை

இல. 33, சென்ற் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 3.

ரூபா 75,325/- பெறுமதியான எட்டு மோட்டார் சைக்கிள்களை வெற்றிபெற்ற 8 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்

| | |
|---|---|
| புத்தளம் | 6434663-1-55 |
| அம்பாறை | 6431913-6-47 |
| காலி | 6429635-6-31 |
| கம்பஹா | 6431276-6-05 |
| இரத்தினபுரி | 6431067-3-97 |
| பதுளை | 6427955-6-61 |
| மொனராகலை | 6429965-3-85 |
| மட்டக்களப்பு | 6429068-0-25 |



உங்கள் விமானப் பயணத்திற்கு!

Aero Lanka

In Domestic Operation

New way of flying



Head office
No.500,Galle Road,
Wellawatte,
Colombo-06
Tel:2505632-3 Fax:2500626

Jaffna office
No.86,PointPedro Road,
Jaffna. Tel:021-2226242
Fax:021-2225600

Branch
No:14,New Market Building
Chavakachcheri
Tel:021-2227979 Fax: 021-2227979

Trinco Office
No.47,Kandy Road,
Trincomalee.
Tel:026-2221519
Fax:026-2221519

யாழ்⇆கொழும்பு | யாழ்⇆திருகோணமலை⇆கொழும்பு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலை பழைய மாணவர் சங்கத்தின் செயலாளர்
த.பகீரதராஜ் (பகீர்) அவர்களின் அன்புத்தந்தை
அமரர் செல்லையா தம்பித்துரை
(ஓய்வுபெற்ற நீதிமன்ற முதலியார்)
அவர்களின் திடீர் மறைவினால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடையவும் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

பழைய மாணவர் சங்கம்,
யா/கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை
கொக்குவில்.

(44325)
(21.16.24)


பைனரி SOLUTIONS



NET WORKING
STRUCTURED CABLING
COMPUTER UPGRADE
COMPUTER REPAIRS
INTERNET CONFIGURATION
CARRIER TRAINING
MAINTANANCE

TEL: 077 922 8808
MANIPAY ROAD, JAFFNA

**Diploma in Computer Hardware Engineering**

Basic Electronics, Fundamentals, Assembling, Software(OS & Applications) Installation, Trouble Shooting, Upgradation, Basic Networking & Maintenance.

காலம்: 3 மாதம்

**Diploma in Computer Network Engineering**

Catagories of Networks, Network Models, Need for Network, Components of Network, Communication & Standard, Topologies, Remote Accessing & Cabling*
(Cross, Straight & Structured)

காலம்: 3 மாதம்

Cross Culvert, Manipay Road,
Aanaikoddai, Jaffna.
Contact: Mobile :- 0779228808
email:- binary01_solutions@Yahoo.com.


## ஓராண்டு நினைவாக.....

தோற்றம் 11 – 04 – 1932



மறைவு 01 – 01 – 2005

திருமதி ஈஸ்வரி பாலசுப்பிரமணியம்

திதி 21.12.2005

அன்பின் உறைவிடமாக
பண்பின் பிறப்பிடமாக
பாசத்தின் இருப்பிடமாக விளங்கும்
எங்கள் அம்மாவே!
நாம் வாழ்கையில் நீயும் வாழ்கிறாய்.

கணவன், மக்கள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

விளானை,
களபூமி, காரைநகர்.

(44332)(21.1624)

எங்கள் நெஞ்சைவிட்டு அகலாத
## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அன்னை மடியில்
19.08.1996

ஆண்டவனடியில்
01.01.2005

செல்வன்
சுகதாசன்-தமிழிந்தன் [விது]

*வளம் கொண்ட வன்னி மண்ணதில்*
*எம் உளம் மகிழ ஆவணி பத்தொன்பதில்*
*அவதரித்த எங்கள் முத்தான முதல்வனே!*
*புதுவையில் புகழ் பொங்கும்*
*ஸ்ரீ சோமாஸ்கந்த கல்லூரி மாணவனாய்*
*மண்புகழ வாழ்வாயென*
*எண்ணியிருந்த எம் விதுவே!*
*உன் நினைவுகளை எட்டாவது அகவைதனில்*
*காலமெல்லாம் கலங்க வைத்து*
*கூடிடும் உறவுகளோடு*
*நின் கல்லறை தனில் கதறியழ வைத்தாயோ....*

விக்கினேஸ்வரா வீதி,
புத்தூர் கிழக்கு, புத்தூர்.

உன் நினைவில்
குடும்பத்தினர்.

(44333)(21.53.16)

## மிருசுவில் மருந்தகத்தில் அபிவிருத்திப் பணி

தென்மராட்சி,டிசெ.21

மிருசுவில் மத்திய மருந்தகத்தில் உள்ள குடும்ப நல சேவையாளர் விடுதி புனரமைக்கப்பட்டுவருகிறது. அத்துடன், மத்திய மருந்தகத்தில் எல்லைப்புற மதில்களும் ஆண்கள் விடுதிக்கான இரு மலசலகூடங்களும் அமைக்கப்பட்டு வருகின்றன.

நிக்கொட் நிறுவன நிதி உதவியுடன் சுகாதாரத் திணைக்களத்தினால் இக்கட்டடங்கள் அமைக்கப்படுகின்றன.

இதேவேளை, மருந்தக வெளிநோயாளர் பிரிவுக்கென மூன்று லட்சம் ரூபா செலவில் இரு மலசலகூடங்களை சிறுவர் பாதுகாப்பு நிதிய நிறுவனத்தினர் அமைத்து வருவதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ஒ-117)

## மனித உரிமை இல்ல சான்றிதழ் வைபவம்

யாழ்ப்பாணம்,டிசெ.21

மனித உரிமைகள் இல்லத்தினால் நடத்தப்பட்ட மனித உரிமைகள் கற்கைநெறியின் சான்றிதழ் வழங்கும் வைபவம் கடந்த 10ஆம் திகதி யாழ்.தொடர்பகத்தில் இடம்பெற்றது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக ஓய்வு பெற்ற நீதிபதி எ.திருநாவுக்கரசு கலந்து கொண்டார்.

நிகழ்வின் அறிமுகவுரையை மனித உரிமைகள் இல்லப் பணிப்பாளர் திருமதி திலகா சேவியரும் 'மனித உரிமைகள் கற்கை நெறியும் தொடர்செயற்பாடுகளும்' என்ற தலைப்பிலான விளக்கவுரையை சட்ட ஆலோசகர் பி.குகனேஸ்வரனும் நிகழ்த்தினர். தொடர்ந்து பயிற்சிநெறியை பூர்த்தி செய்த 60 பேருக்கான டிப்ளோமா சான்றிதழ்களும் பங்குபற்றுதலுக்கான சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.

'உரிமை மீறலுக்கு பெரிதும் தூண்டுதலாக இருப்பவர்கள் ஆண்களா? பெண்களா?' என்னும் தலைப்பிலான விவாத அரங்கு, கவிதை, நகைச்சுவை, தாளலயம் போன்ற நிகழ்வுகளும் இடம்பெற்றன. (ஒ-202)

## கல்விச் சேவை கருத்தரங்கு

யாழ்ப்பாணம்,டிசெ.21

இலங்கை ஆசிரியர் சங்கம் நடத்தும் கல்வி நிர்வாகசேவை, அதிபர் சேவை, ஆசிரியர் சேவை ஆகியவற்றுக்கான போட்டிப் பரீட்சைக் கருத்தரங்கு எதிர்வரும் 24 ஆம் திகதி முதல் 27ஆம் திகதி வரை யாழ்.இந்துக் கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

காலை 9 மணிமுதல் மாலை 5 மணி வரை நடைபெறவுள்ள இந்தக் கருத்தரங்கில் சம்பந்தப்பட்ட ஆசிரியர்கள், அதிபர்கள் அனைவரையும் தவறாது கலந்துகொள்ளுமாறு இலங்கை ஆசிரிய சங்கத்தின் செயலாளர் ஆ.பாலச்சந்திரன் கேட்டுள்ளார். (ஒ-13)

## தென்னம்பிள்ளை விநியோகம்

தென்மராட்சி,டிசெ.21

தென்மராட்சி பிரதேசத்தில் மீள்நடுகைத் திட்டத்தின் கீழ் 2 ஆயிரம் தென்னம்பிள்ளை வழங்கப்படவுள்ளன.

யாழ்.மாவட்ட தென்னைப் பயிர்ச்செய்கை சபை தென்னம்பிள்ளைகளை வழங்கவுள்ளது.

ஒரு குடும்பத்திற்கு 3 தென்னம்பிள்ளைகள் வீதம் வழங்குவதற்கு கிராம அலுவலர் ரீதியாக விவரங்களை அனுப்பிவைக்குமாறு தென்மராட்சிப் பிரதேச செயலருக்கு தென்னை அபிவிருத்தி அலுவலர் அறிவித்துள்ளார். (ஒ-117)

## லயன்ஸ் கழகம் அங்குரார்ப்பணம்

தென்மராட்சி,டிசெ.21

தென்மராட்சி லயன்ஸ் கழகம் கடந்த ஞாயிற்றுக்கிழமை அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது.

சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தின் அனுசரணையுடன் கொடிகாமம் பிரதேச சபை மண்டபத்தில் இந்நிகழ்வு நடைபெற்றது.

சாவகச்சேரி லயன்ஸ் கழகத் தலைவர் லயன் சி.சிவபாலசுப்பிரமணியம் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் முதன்மை விருந்தினராக சர்வதேச லயன்ஸ் கழக 306 பி 1, மாவட்ட இணைப்பாளர் லயன் கே.வி. முத்துக்குமாரசுவாமி கலந்துகொண்டார்.

கழகத்தின் ஸ்தாபக அங்கத்தவர்கள் 25 பேர் முதன்மை விருந்தினர் முன்னிலையில் லயன்ஸ் கழக உறுப்பினர்களாக சத்தியப் பிரமாணம் செய்துகொண்டனர்.


கழகத்தின் தலைவராக லயன் அருணாசலம் திருநாவுக்கரசுவும், செயலாளராக லயன் செல்லையா சரவணமுத்துவும், பொருளாளராக சின்னையா அருளம்பலமும் பதவிப் பிரமாணம் செய்து கொண்டனர்.

சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினரால் சாவகச்சேரியில் நடத்தப்பட்ட ஆங்கிலப் பயிற்சி வகுப்பினை நிறைவு செய்த மாணவர்களுக்கு சான்றிதழ் வழங்கப்பட்டன.

தென்மராட்சி லயன்ஸ் கழகத்தினருக்கு சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினர் ஒரு தொகுதி [illegible] வழங்கினர். (ஒ-117)

## கண்ணீர் அஞ்சலி

சோமசுந்தரக்குருக்கள் வாமதேவசர்மா
(முன்னாள் தபாலதிபர், கொழும்பு, யாழ்ப்பாணம், திருமலை மாவட்டம்)



உடுவில் முருகமூர்த்தி கோவில் முன்னாள் அர்ச்சகரும், இந்நாள் அர்ச்சகரின் மாமனுமாகிய சோமசுந்தரம் வாமதேவசர்மா ஐயா அவர்கள் அமரரான செய்திகேட்டு ஆறாத்துயரடைவதோடு, அவரது பிரிவால் துயருறும் மனைவி, பிள்ளைகள் மற்றும் குடும்பத்தினர்களுக்கும் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு அவரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்

ச.முத்தையா மாஸ்ரர்,
உடுவில் முருகமூர்த்தி கோவில் தர்மகத்தா,
இ.தருமானந்தன் குடும்பம்.

முருகமூர்த்தி கோயிலடி,
உடுவில். (44330)(21.16.24)

## கண்ணீர் அஞ்சலி



எமது கல்லூரியின் இளைப்பாறிய பிரதி அதிபர்
திருமதி சிவனேசரத்தினம்
அவர்களின் அன்புக் கணவர்
அமரர் ஆறுமுகம் சிவசம்பு குணரத்தினம்
அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்திக்காகவும் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள்,
மாணவர்கள், பழையமாணவர்கள், பெற்றோர்,
கொக்குவில் இந்துக் கல்லூரி.

(44327)
(21.16.24)

## கண்ணீர் அஞ்சலி



எமது மதிப்பிற்குரிய
ஏ.எஸ்.குணரத்தினம்
அவர்கள் மறைவால் துயருறும் நாம் அவரது குடும்பத்தினருக்கும் உறவினர்களுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஊழியர்கள்,
இலங்கை வங்கி,
திருநெல்வேலி.

(44316)(21.16.24)

## மரண அறிவித்தல்கள்

### சோமசுந்தரக் குருக்கள் வாமதேவசர்மா

(ஓய்வுபெற்ற தபாலதிபர்-திருகோணமலை)

காரைநகரைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் கொழும்பில் வசிப்பவருமான சோமசுந்தரக் குருக்கள் - கௌரியம்மா தம்பதியரின் மகன் வாமதேவசர்மா 19-12-2005 திங்கட்கிழமை இரவு கொழும்பில் காலமானார்.

அன்னார் ராஜராஜேஸ்வரி அம்மாவின் கணவரும் பிரபாகரன், சுதாகரன் ஆகியோரின் தந்தையும், சியாமளாதேவி, விமலாதேவி, நிர்மலாதேவி ஆகியோரின் சகோதரருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21-12-2005) புதன்கிழமை கொழும்பில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஸ்ரீமதி இ.வாமதேவசர்மா,
கிரிலப்பனை,
தொ.பே. இல. 011 2513118

(211115)

தகவல்:
ஸ்ரீமதி பவானி கோபாலசர்மா
(மருமகள்-கந்தரோடை)

(44334)

### திருமதி கனகசபை தில்லைநாயகம்

(சிறுப்பிட்டி மத்தி,நீர்வேலி)



மந்துவிலைப் பிறப்பிடமாகவும் சிறுப்பிட்டி மத்தியை வதிவிடமாகவும் கொண்ட திருமதி கனகசபை தில்லைநாயகம் 19.12.2005 திங்கட்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை கனகசபை (முன்னாள் அதிபர், புத்தூர் சோமஸ்கந்த கல்லூரி) அவர்களின் அன்பு மனைவியும், திருமதி உருக்குமணிதேவி கனகராசா, காலஞ்சென்ற கதிர்காமநாதன் (பொறியிலாளர்), மற்றும் ஸ்ரீபத்மநாதன்(லண்டன்), லோகநாதன் (லண்டன் - பொறியலாளர்), திருமதி ஞானசகுந்தலா தவநாயகம் ஆகியோரின் பாசமிகு தாயாரும் சு.கனகராசா (ஓய்வுபெற்ற முன்னாள் அதிபர், சோமஸ்கந்த கல்லூரி), Dr. அருந்ததி பாஸ்கரன் (லண்டன்), செ.தவநாயகம் (சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர், உள்ளூராட்சித் திணைக்களம்), சிவசக்தி லோகநாதன் (லண்டன்), ஆகியோரின் அன்பு மாமியும் காலஞ்சென்ற திருமதி நிற்சிங்க சேனாதிராசா சிவகாமசுந்தரி, திருமதி தாமோதரம்பிள்ளை இராசம்மா மந்துவில் இராசநாயகம்பிள்ளை ஆகியோரின் சகோதரியும் கணேசலிங்கம் (லண்டன்- பொறியியலாளர்), Dr. அருள்கணேசன் (லண்டன்), திருமதி மஞ்சுளா கணேசலிங்கம் (லண்டன்), தமிழ்நிலவன் (சென். ஜோன்ஸ் கல்லூரி), பாஸ்கரன், கணேஸ்குமார், லக்ஸ்மி, வைஸ்ணவி, ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் தர்சினி, திலகன், ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.12.2005) புதன்கிழமை சிறுப்பிட்டியில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக சிறுப்பிட்டி இந்து மயானத்திற்கு பிற்பகல் 4மணியளவில் எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சிறுப்பிட்டி மத்தி.
நீர்வேலி.
தொ.பேசி இல. 060–2212559

தகவல்:
லயன் செ.தவநாயகம்

(44328)(21.16.24)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் - இலங்கை

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் மாணவர்களுக்கான சகல கல்விச் செயற்பாடுகளும் 01.01.2006 வரை இடைநிறுத்தப்பட்டுள்ளது.
மாணவர்களுக்கான கல்விச் செயற்பாடுகள் மீண்டும் 02.01.2006 அன்று ஆரம்பமாகும்.

20.12.2005 (சி-46874)(18-12-45) -பதிவாளர்.

## கண்ணீர் அஞ்சலி



எமது கழக விளையாட்டுத்துறையில் முன்னோடியாகத் திகழ்ந்த

### சிவசம்பு குணரட்ணம்

அவர்களின் மறைவையிட்டு ஆழ்ந்த கவலையடைவதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

சம்பியன் லேன், கொக்குவில். (சி-46882)(18-12-45)

வளர்மதி முன்னேற்றக் கழகமும் வளர்மதி நிறைவாழ்வகமும்.

## மணிக்குரலின் மணிவிளக்கு மணிவதனன் + ஜெயச்சித்திரா சோதரரின் 11ஆவது ஆண்டு

ஞாபகார்த்த விளையாட்டுப் போட்டிகள், கலைப்போட்டிகள் ஆரம்பம்.

**கரம் + மேசைப்பந்தாட்டம்** (T.T) ஓப்பின்ஸ் ஆண், பெண் இருபாலாருக்குமான இப்போட்டியில் பங்குபற்ற விரும்பும் போட்டியாளர்கள் விண்ணப்பப்படிவங்களை யாழ். **YMCA** நிறுவனத்தில் பெற்றுக்கொள்ளலாம். விண்ணப்ப முடிவு திகதி (31.12.2005).

ஒற்றயர் ஆட்டத்தில் முதலாம் இடம் வகிக்கும் வீரருக்கு 22 கரட் தங்கப்பதக்கம் பரிசாக வழங்கப்படும்.

**கலைப் போட்டிகள்:**

பாட்டுக்குப்பாட்டு ,தேன்இசை மழை (தனிப்பாடல்) போட்டியில் பங்குபற்றவிரும்பும் போட்டியாளர்கள் உங்கள் பெயர்-முகவரி பங்குபற்றும் நிகழ்ச்சி ஆகியவற்றை கடிதமூலம் தெளிவாக எழுதி அனுப்பவேண்டிய முகவரி:

**மணிக்குரல் விளம்பர சேவை**

**.V.S. சற்குணன்**

52, மாட்டீன் வீதி, யாழ்ப்பாணம். T.P.: 7535 (44329)(18-12-45)

விளம்பர அனுசரணை:
தரம் நிறைந்த மங்கள புடைவைகளின் மனங்கவர் நிறுவனம்
**ஸ்ரீ அக்ஷா ரெக்ஸ்**
55, முனீஸ்வரன் வீதி, யாழ்ப்பாணம். T.P.: 7795

## நெஞ்சைவிட்டகலா 18 ஆம் ஆண்டு நினைவலைகள்

மலர்வு 09 - 02 - 1937



உதிர்வு 21 - 12 - 1987

### அமரர் சீ.செல்லத்துரை

(முன்னாள் மேற்பார்வையாளர், யாழ்.போதனா வைத்தியசாலை)

ஈனப் பிறவிகள் பறித்தனரோ - உம் உயிரை
பாச நெஞ்சங்கள் சுமக்குதய்யா - உம் நினைவை

'ஈஸ்வரி வாசம்' உரும்பிராய் மேற்கு, உரும்பிராய்.

உங்கள் பிரிவால் துயருறும்:
அன்பு மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், உறவினர்கள்.

(44340)(18-12-45)

## மரண அறிவித்தல்கள்

### செபதேயு சிங்கராயர்

(இளைப்பாறிய பிரதம லிகிதர் புனித பத்திரிசியார் கல்லூரி)

யாழ்ப்பாணம் பத்திரிசியார் வீதியைப் பிறப்பிடமாகவும் கொழும்பு கொச்சிக்கடையை வசிப்பிடமாகவும் கொண்ட செபதேயு சிங்கராயர் நேற்று(20.12.2005)செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செபதேயு - சபீனா தம்பதியரின் அன்பு மகனும் றெஜீனா (சோதி)யின் அருமைக் கணவரும் வலன்ரைன், சபீனா, அருட்தந்தை றெக்ஸ் கொன்ஸ்ரன்ரைன் (C.M.F), புளோறன்ரைன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் லக்கி, அவலின், அருந்ததி ஆகியோரின் அன்பு மாமனாரும் றெக்ஸன், அன்சன், மரீனா, சாளினி ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை(22.12.2005) வியாழக்கிழமை பிற்பகல் 4 மணிவரை பொறளை ஜெயரட்ண மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு திருப்பலியின் பின் கனத்தை பொது மயானத்துக்கு நல்லடக்கத்துக்காக எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள்அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

புனித கிளாரட் குருமடம், கட்டுவ, நீர்கொழும்பு. (சி-46878)(18-12-45)

தகவல்: அருட்தந்தை றெக்ஸ் கொன்ஸ்ரன்ரைன் (C.M.F), (மகன்).

### ஆறுமுகம் நாகமணி பொன்னையா

(ஓய்வு பெற்ற தலைமை இலிகிதர் மலையக நிக்கிலோயா எஸ்ரேட்)
(வராத்துப்பளை, பருத்துத்துறை)

பருத்தித்துறை, வராத்துப்பளையைச் சேர்ந்த ஆறுமுகம் நாகமணி பொன்னையா 18.12.2005 ஞாயிற்றுக்கிழமை இறைபதமெய்தினார்.

அன்னார் ஆறுமுகம் நாகமணி- செல்லமுத்து தம்பதியரின் அன்புப் புதல்வனாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றன என்பதை உற்றார், உறவினர்களுக்கு அறியத்தருகின்றோம்.

புலோலி கிழக்கு, புலோலி. (44338)(18-12-45)

தகவல்: எ.என்.எஸ்.திருச்செல்வம் (பெறாமகன்).

## வெளிவாரிப் பரீட்சை வைத்தீஸ்வராவில்!

பேராதனைப் பல்கலைக்கழகத்தினால் நாளை வியாழக்கிழமை முதல் யாழ்பல்கலைக் கழகத்தில் நடத்தப்படவிருந்த வெளிவாரிப் பரீசைகள் யாழ். வைத்தீஸ்வராக் கல்லூரியில் இடம்பெறும் எனத் தெரிவிக்கப்பட்டது.

இப்பரீட்சையில் தோற்றும் சகல பரீட்சார்த்திகளையும் வைத்தீஸ்வராக் கல்லூரியில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள பரீட்சை மண்டபத்திற்கு சமுகமளிக்குமாறு பேராசிரியர்களான இரா.வை.கனகரத்தினம், ஏஸ்.ஞானேஸ்வரன் ஆகியோர் கேட்டுள்ளனர். (3-6)

## மரண அறிவித்தல்

### செல்லையா சண்முகராசா

இணுவில் மேற்கு பரராஜசேகரப்பிள்ளையார்கோயிலடியைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட செல்லையா சண்முகராசா நேற்று (20.12.2005) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
இணுவில் மேற்கு, இணுவில். மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.
(சி-46881)

## தவறிவிட்டது

வதனா நிறைஞ்சினி என்பவரது தே.அ. அட்டை (816811783V) மற்றும் முக்கிய ஆவணங்கள் அடங்கிய கறுப்பு நிற Hand bag நேற்று காலை இணுவிலிலிருந்து கே.கே.எஸ். வீதி வழியாக தட்டாதெரு சந்தியூடாக அரசடி சென்று கோயில் வீதியூடாக நாவலர் வீதி வரை சென்ற வேளை தவறிவிட்டது.தயவுசெய்து கண்டெடுத்தவர்கள்'திருப்பதி' கே.கே.எஸ். வீதி, இணுவில் தொ.பே.:021 222 6001 என்ற முகவரியுடன் தொடர்பு கொள்ளவும். (44354)

## ஆசிரியர் பதவி வெற்றிடங்கள்

ஆரம்பப் பிரிவு/ தரம் 6 - 9 வகுப்புகளில்
★ சுற்றாடற்கல்வி ★ விஞ்ஞானம்
★ தமிழ் ★சமூகக்கல்வி
கற்பிக்கத் தகுதியும் அனுபவமும் உள்ள ஆசிரியர்கள் அலுவலக நேரங்களில் உரிய சான்றிதழ்களுடன் நேரில் வரவும்.

அதிபர்.

The Express Institute
Irupalai, Kopay.

(சி-46878)

## அண்ணி அன்பளிப்பு மாளிகை

ஜேசு, மாதா, அந்தோனியார், பாலன் செற் என்பனவும் மற்றும் நத்தார் அலங்காரப் பொருள்களும் விற்பனைக்குண்டு.
மொத்த வியாபாரிகள் உடன் நாடவும்.

அம்மன் வீதி,
திருநெல்வேலி கிழக்கு,யாழ்ப்பாணம்
தொ.பே. :0773151569
(44349(18-12-45)


நாதன்ஸ் யாழ்ப்பாணம்



ஷாம், சினேகா, வடிவேல் நடித்த
காட்சி நேரம் மாற்றம் 10.30, 2.00, 5.15, 8.15
ABCD 10.30, 2.00 (பு. நே)
Super Star Hero Pom Cruise in War of the World 5.15, 8.15 (ஆங்கிலம்)

ராஜா யாழ்ப்பாணம்
பிரசன்னா, மீராஜஸ்மின் நடித்த
கஸ்தூரிமான்
காட்சிநேரம்: பு.நே. 10.30, 2.30, 6.30, 9.30
(46404)

மனோகரா யாழ்ப்பாணம்



இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதின வெளியீடு
சூரியா, த்ரிஷா, வடிவேல் நடித்த
ஆறு
காட்சி நேரம் - 10.30, 1.30, 4.30, 7.30, 10.30

நாகம்ஸ் சுன்னாகம்



இலங்கையிலும் இந்தியாவிலும் ஒரேதின வெளியீடாக
அர்ஜுன், நமிதா, வடிவேல் நடித்த


## மரண அறிவித்தல்கள்

### வைரமுத்து இளையதம்பி (தறுமு)



வைரமுத்து இளையதம்பி (தறுமு) 19.12.2005 திங்கட்கிழமை இரவு காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வைரமுத்து - லஷ்சுமிபிள்ளை தம்பதியரின் அன்பு மகனும் நாகரத்தினத்தின் அன்புக் கணவரும் நித்தியானந்தன் (லண்டன்), வனஜா, தயாநிதி, அருள்நேசன்(சுவிஸ்), சாந்தரூபி, உதயகுமாரி, இளங்கோ (சுவிஸ்), நித்தியரதி (லண்டன்) ஆகியோரின் அனபுத் தந்தையும் ராஜேஸ்வரி(லண்டன்), பாலகிருஸ்ணன், நித்தியானந்தன், இந்திரா (சுவிஸ்), நித்தியானந்தன், உதயகுமார், கல்பனா (சுவிஸ்), சிவநேசன் (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (22.12.2005) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பிற்பகல் 4 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கோம்பையன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள்அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.30, கேசாவில் பிள்ளையார் வீதி, வண்ணார்பண்ணை , யாழ்ப்பாணம்.

தகவல்: N.தவேந்திரராஜா (ஆசிரியர்-பேரன்).

(44351)(18-12-45)

### சுப்பிரமணியம் கந்தசாமி



வவுனியாவைப் பிறப்பிடமாகவும் கின்னர் லேன் இல.10 இல் வசித்தவருமான சுப்பிரமணியம் கந்தசாமி அவர்கள் நேற்று (20.12.2005) செவ்வாய்க்கிழமை சிவபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் அமரர் சுப்பிரமணியம் - லெட்சுமி தம்பதியரின் மகனும் அமரர் இராமகிருஷ்ணன் - லெட்சுமி தம்பதியரின் மருமகனும் சத்தியபாமாவின் அன்புக் கணவரும் விக்கினேஸ்வரன் (சிவா), லோகேஸ்வரன் , துஷ்யந்தினி, சுதர்ஷன் ஆகியோரின் அன்பு தந்தையும் குமரேஸ், அமுதினி, தனுஷியா ஆகியோரின் அன்பு மாமனாரும் விதுஷன் தனுஷாந்தினி ஆகியோரின் பேரனும் கண்ணகி, அகிலாண்டேஸ்வரி, சண்முகவடிவேல், பத்மநாதன், நாகேஷ்வரி ஆகியோரின் சகோதரனும் காலஞ்சென்ற சதாசிவம், பரமசிவம், காலஞ்சென்ற நாகராசா தெட்சணாமூர்த்தி,மகேந்திரன், கந்தசாமி, காலஞ்சென்ற இராமலிங்கம், அருணாசலம், ஜெயமணி ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.12.2005) புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கோம்பையன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல. 10 கின்னர் லேன், யாழ்ப்பாணம். (44353)(18-12-45)

தகவல்: குடும்பத்தினர்.

### திருமதி சொக்கலிங்கம் மகேஸ்வரி

உரும்பிராய் கிழக்கைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் தற்போது வெள்ளவத்தையில் வசித்து வந்தவருமான திருமதி சொக்கலிங்கம் மகேஸ்வரி அவர்கள் நேற்று(20.12.2005) செ்வ்வாய்க்கிழமை வெள்ளவத்தையில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சிங்கப்பூர் அப்போதிக்கரி(**RMB**) சொக்கலிங்கம் அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான இராசரெத்தினம், செல்வரத்தினம், கனகரெத்தினம் ஆகியோரினதும் தங்கரெத்தினம் பூமணி, கனகம்மா, கமலாதேவி ஆகியோரினதும் அன்புச் சகோதரியும் ஓய்வு பெற்ற விவசாய பரிசோதகர் தனபாலசிங்கம் (ஜேர்மனி), ஓய்வுபெற்ற பெருந்தெருக்கள் திணைக்கள தொழில்நுட்ப அதிகாரி நவபாலசிங்கம் (ஜேர்மனி), சந்திரவதனா ஆகியோரின் அன்புத்தாயும், சிவலிங்கம் (ஓய்வுபெற்ற மருந்தாளர் -புத்தளம்), நாகேஸ்வரி (ஜேர்மனி) ,சத்தியராணி (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமியாரும் Dr.சமீரா (ஜேர்மனி), Dr.சுதன் (ஜேர்மனி) வாசுகி Msc - Chemistry - U.K.), Dr.கஜன், துர்க்கா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இறுதி அஞ்சலிக்காக கல்கிசை மகிந்த மலர்ச்சாலையில் 21, 22ஆம் திகதிகளில் வைக்கப்பட்டு, இறுதிக்கிரியைகள் 22ஆம் திகதி வியாழக்கிழமை பி.ப. 2 மணிக்கு நடைபெற்று தகனக்கிரியைகளுக்காக கொகுவல மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளுகின்றோம்.

9 1/2, Rudra M.W,
Wellawatha.
Colombo - 3.
T.P.:2361589 (சி-46880)(18-12-45)

தகவல்: மகள், மருமகன் குடும்பத்தினர்.

### மருதப்பு கனகசபை

புங்குடுதீவு கிழக்கு, 10 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்தவரும் முன்னாள் பிரபல வர்த்தகருமான மருதப்பு கனகசபை அவர்கள் நேற்று(20.12.2005)செவ்வாய்க்கிழமை சிவபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் கண்ணம்மாவின் பாசமிகு கணவரும் புண்ணியமூர்த்தி, தெட்சணாமூர்த்தி, குணபாலச்சந்திரன் (ஜேர்மனி), சிவலோகநாதன் (லண்டன்), மகாலெட்சுமி (ஆசிரியை-யா/கொட்டடி நமசிவாய வித்தியாலயம்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.12.2005)புதன்கிழமை 2 மணிக்கு நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

10 ஆம் வட்டாரம், புங்குடுதீவு. (44352)(18-12-45)

தகவல் மகாலெட்சுமி (ஆசிரியை- மகள்).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ். பல்கலைக்கழக ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வுரையாளர்கள் உட்படப் பலர் காயமடைந்தனர். அதனைக் கண்டித்து மாணவர்கள் நேற்று வகுப்புப் பகிஷ்கரிப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர். அதேநேரம் பல்கலைக் கழகத்திற்கு முன்பாகச் செல்லும் இராமநாதன் வீதியில் தடைகளைப் போட்டு போக்குவரத்தையும் அவர் தடைசெய்திருந்தனர்.

பகல் 11.30 மணியளவில் அந்த வீதி ஊடாகப் பொலீஸாரும் படையினரும் வந்தனர். வீதியில் தடைகள் இருந்ததால் அவற்றை விலக்கி விட்டு முன்னேற அவர்கள் முயன்றனர். இதற்கு மாணவர்கள் தரப்பிலிருந்து எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டது. போக்குவரத்துப் பாதையைத் தடைசெய்யவேண்டாம் என்று கூறி மாணவர்களுடன் படையினர் தர்க்கத்தில் ஈடுபட்டனர். இதனால் முறுகல் நிலை ஏற்பட்டது. ஆத்திரமடைந்த மாணவர்கள் பொலீஸார் மீது கற்களை வீசித் தாக்க ஆரம்பித்தனர்.

உடனடியாகத் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்ட பொலீஸாரும் இராணுவத்தினரும் யாழ். பல்கலைக் கழக வளாகத்திற்குள் புகுந்து மாணவர்களைக் கண்மூடித்தனமாகத் தாக்கத் தொடங்கினர்.

படையினர் உள்ளே நுழைந்து துப்பாக்கிப் பிடிகளாலும் கொட்டன்களாலும் தாக்கத் தொடங்கியதை அடுத்துத் துப்பாக்கிப் பிரயோகமும் மேற்கொண்டனர். கண்ணீர்ப் புகைக் குண்டுகளையும் ஏவினர். இதனை அடுத்து பல்கலைக் கழக ஊழியர்களும் மாணவர்களும் நாலாபுறமும் சிதறி ஓடினர். தரையில் வீழ்ந்து பாதுகாப்புத் தேடினர். அப்படித் தரையில் வீழ்ந்து படுத்தவர்களைப் படையினர் தேடித் தேடித் தாக்கியதைத் தொடர்ந்து, அவர்கள் உருண்டு உருண்டு பாதுகாப்புத் தேடி ஓடினர்.

இவ்வாறு வீழ்ந்து படுத்துப் பாதுகாப்புத் தேடிய உடற்கல்வி விரிவுரையாளர் இளம்பிறையன் படையினரால் மிகமோசமாகத் தாக்கப்பட்டார். பின்னர் இழுத்துச் செல்லப்பட்டு பொலீஸ் ஜீப்பினுள் வீசி எறியப்பட்டார். வேறு இரு மாணவர்களும் இவ்வாறே மோசமாகத் தாக்கப்பட்ட பின்னர் கைது செய்யப்பட்டு ஜீப்பினுள் வீசப்பட்டனர். அவர்கள் மூவரும் யாழ். பொலீஸ் நிலையத்திற்குக் கொண்டு செல்லப்பட்டனர். அங்கு வைத்து விரிவுரையாளர் இளம்பிறையனும் மற்றொரு மாணவனும் விடுவிக்கப்பட்டனர். ஒருவர் தொடர்ந்தும் தடுத்து வைக்கப்பட்டார்.

படையினரின் இந்தத் தாக்குதலால் பல்கலைக்கழக இராமநாதன் கட்டடத்தில் சூட்டுக் காயங்கள் ஏற்பட்டன. தொலைபேசி வயர்களும் அறுந்தன. வீதியோரம் நின்ற மின்கம்பங் களில் பொருத்தப்பட்டிருந்த மாபிள்கள், துப் பாக்கிச் சன்னங்கள் பட்டு துகள்களாகச் சிதறி வீழ்ந்தன.

இராமநாதன் வீதியில் உள்ள வீடு ஒன்றிற்கு தகவல் வழங்குவதற்காகப் பொலீஸார் அங்கு சென்றனர் என்றும் -

அவர்களை மேற்கொண்டு செல்லவிடாது தடுத்த மாணவர்கள், அவர்கள் மீது கற்களை வீசினர் என்றும் -

அதனாலேயே பல்கலைக்கழக வளாகத்திற்குள் நுழைந்து பொலீஸார் மாணவர்களைத் தாக்கினர் என்றும் -

பொலீஸ் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். அண்மைய நாள்களாகத் தொடரும் இந்தச் சம்பவங்களை அடுத்து யாழ். குடாநாடு முழு வதும் பெரும் பதற்றம் நிலவுகின்றது. (க-3-12-86-190)

## துணைப்படைகளின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திருக்கின்றன.

இலங்கைக்கு உதவி வழங்கும் இணைத் தலைமை நாடுகளின் கூட்டம் நேற்றுமுன்தினம் பெல்ஜியத்தின் தலைநகர் பிரஸல்ஸில் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தின் பின்னர் ஜப்பான், நோர்வே, அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய ஒன்றியத் தலைமை நாடான பிரிட்டன் ஆகிய இணைத்தலைமைகள் கூட்டறிக்கையொன்றையும் வெளியிட்டன. அந்த அறிக்கையிலேயே மேற்படி விடயம் குறிப்பிடப்பட்டிருந்தது. அந்த அறிக்கையின் முழு விவரம் வருமாறு:-

இலங்கையினது நிலைமைகள் தொடர்பாக டிசெம்பர் 19ஆம் திகதி பிரஸல்ஸில் இலங்கைக்கு உதவி வழங்கும் டோக்கியோ மாநாட்டின் இணைத்தலைமை நாடுகளின் கூட்டம் ஆராய்ந்தது. இணைத்தலைமை நாடுகளுடன் இந்திய அரச பிரதிநிதி ஒருவர் தனித்தனியே சந்தித்துக் கருத்துகளைப் பகிர்ந்துகொண்டார்.

அதிகரித்துவரும் வன்செயல்களுக்கும் சமாதான முயற்சிகளை மீள ஆரம்பிப்பதற்கும் இடையில் மிக முக்கியமான தெரிவு ஒன்றைச் செய்யவேண்டிய நிலைமையை இலங்கை முகம் கொடுக்கின்றது என்பதை இணைத்தலைமைகள் கவனத்தில் கொள்கின்றன.

இலங்கையில் உள்ள மக்கள் அமைதியையே விரும்புகின்றனர்.

இந்த விருப்புக்கு அமைய செயற்படத் தவறுவது ஒரு பின்னோக்கிய துன்பியல் அடியாகவே அமையும்.

தமிழீழ விடுதலைப் புலிகள் அண்மையில் விடுத்திருந்த 'அர்த்தமுள்ள அரசியல் தீர்வுத் திட்டம்' என்ற கோரிக்கையை இணைத் தலைமைகள் கவனத்தில் எடுத்தன. எனினும், தமிழ் மக்களின் வாக்களிக்கும் உரிமையை மறுக்கும் விதத்தில் வடக்கு - கிழக்கில் ஜனாதிபதித் தேர்தல் பகிஷ்கரிப்பை நடைமுறைப்படுத்திய புலிகளின் செயற்பாட்டையும் இணைத் தலைமைகள் கண்டிக்கின்றன.

வடக்கு - கிழக்கில் அண்மையில் அதிகரித்து வரும் வன்முறைகளையும் இணைத்தலைமைகள் மிகக் கடுமையான முறையில் கண்டிக்கின்றன.

தமது வன்முறைப் பிரசாரத்துக்கு உடனடி முற்றுப்புள்ளி வைத்து, யுத்த நிறுத்த ஒப்பந்தத்தில் தங்களுக்கு உள்ள உள்ளார்ந்த ஈடுபாட்டை வெளிப்படுத்துமாறு புலிகள் அமைப்பை இணைத்தலைமைகள் கோருகின்றன. இது தொடர்பான மாற்றத்துக்கான விருப்பத்தை வெளிப்படுத்துவதற்குத் தவறுவது மோசமான விளைவுகளைத் தராமல் போகாது.

நிலைமை மோசமடைந்து வருவதற்கு இரா ணுவத்துணைப் படைகளின் நடவடிக்கைக ளும் மற்றொரு காரணம் என்பதை இணைத் தலைமைகள் ஏற்றுக்கொண்டுள்ளன. இத்தகைய துணை இராணுவப் படைகளின் நடவடிக் கைகளை முடிவுக்குக் கொண்டுவந்து, சமா தான வழியை முன்னெடுத்துச் செல்வதில் தனக்குரிய பற்றுறுதியை வெளிப்படுத்துமாறு அரசை அது கேட்டுக்கொண்டுள்ளது.

யுத்தநிறுத்த உடன்பாட்டின் அமுலாக்கம் தொடர்பான மீளாய்வுக்குரிய பேச்சுகளை உட னடியாக நடத்துவதற்கு இலங்கை அரசும் - புலிகளும் உடன்பட்டிருப்பதை வரவேற்கும் இணைத்தலைமைகள், இதை நடத்துவதற்கு ஜப்பான் இடமளிக்க முன்வந்ததையும் வரவேற்கிறது. இனியும், தாமதிக்காமல் - மேலும் தெளிவுபடுத்தக் காத்திராமல் - இத்தகைய பேச்சுகளை உடனடியாக ஆரம்பிக்குமாறு இரண்டு தரப்புகளையும் இணைத்தலைமைகள் வலிமையாகக் கோருகின்றன

அமைதி நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்குத் தோதான அரசியல் நிலைவரம் ஒன்றைத் தெற்கில் உருவாக்கும் ஜனாதிபதியின் எண்ணத்தை இணைத்தலைமைகள் வரவேற்கின்றன. தெற்கை - குறிப்பாக பிரதான அரசியல் கட்சிகளை - இதுவிடயத்தில் ஆக்கபூர்வமாகவும், நெகிழ்வுத்தன்மையுடனும் பங்களிக்குமாறு இணைத்தலைமைகளும் கோருகின்றன.

அத்தகைய தீர்வு ஐக்கிய இலங்கை என்ற அடிப்படையில் எல்லா இனங்களினதும் அபிலாஷைகளைக் கவனத்தில் கொண்டதாக அமையவேண்டும் என இணைத்தலைமைகள் நம்புகின்றன.

அண்மைக்கால ஆத்திரமூட்டல்களுக்கு முகம் கொடுக்கும் நிலையிலும் பொறுமை காக்கும் முஸ்லிம் சமூகத்தின் செயற்பாட்டை இணைத்தலைகள் விதந்துரைக்கின்றன.

நோர்வே அனுசரணைப் பணி மீதான நம்பிக்கையை ஸ்ரீலங்கா அரசு உறுதிப்படுத்தியிருக்கின்றமையையும், அதேபோன்று விடுதலைப் புலிகளும் செயற்பட்டிருப்பதையும் இணைத்தலைமைகள் வரவேற்கின்றன.

யுத்தநிறுத்தம் ஏற்பட்ட காலம் தொடக்கம் அமைதிப்பேச்சுகளை முன்நகர்த்த நோர்வே எடுத்துவரும் எத்தனங்களுக்கு இணைத்தலைமைகள் தமது முழு ஆதரவைத் தெரிவிக்கின்றன.

அதிகரித்துவரும் மோசமான வன்முறைச் சூழ்நிலையிலும் இலங்கைப் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழு மேற்கொள்ளும் பணிகளுக்கு இணைத்தலைமைகள் முழு ஆதரவைத் தருகின்றன.

கண்காணிப்புக் குழுவினரின் நடவடிக்கைக்கு சாதகமான சூழல் நிலவுவதை உறுதிப்படுத்துவதும் கண்காணிப்புக் குழு உறுப் பினர்களின் பாதுகாப்பும் தொடர்ந்தும் முக் கியமானவையாக அமைகின்றன.

இலங்கையின் உள்நாட்டுப் பிரச்சினைக்கு அமைதி வழியில் தீர்வு காண்பதில் இணைத் தலைமை நாடுகளுக்குள்ள பற்றுறுதியை வெளிப்படுத்தும் விதத்தில் இணைத்தலைமைகளின் அடுத்த கூட்டத்தை யுத்தநிறுத்த ஒப்பந்தத்தின் நான்காம் ஆண்டையொட்டிய காலத்தில் இலங்கையில் நடத்துவதற்கு தனது விருப்பத்தை - தயார் நிலையை - இணைத் தலைமைகள் வெளிப்படுத்துகின்றன.

- என்று உள்ளது. (க-3)


**SLAS**

28.12.2005 இல் நடைபெறவுள்ள

**பரீட்சைக்கான விசேட வகுப்புகள்**

நிபுணத்துவம் வாய்ந்த ஆசிரியர் குழு

பொது அறிவு - திரு.வே.தபேந்திரன் B.com.

நுண்ணறிவு - திரு.சு.கிருபாகரன் B.Sc.

கட்டுரை, சுருக்கம் - திரு.பாலசிங்கசிவம் B.A.

கையேடுகளும் மாதிரி வினாத்தாள்களும் வழங்கப்படும்.

ஆரம்பம் - 24.12.2005 சனி காலை 9மணி

விவரங்களுக்கு:

**பட்டப்படிப்புகள் கல்லூரி**

57/18, ஸ்ரான்லி வீதி

(இலங்கை வங்கி முன்பாக),

யாழ்ப்பாணம்.

(44309)


## சிப்பாய் காயம்

யாழ்.செயலகத்துக்கு அண்மையில் பழைய பூங்காப் பகுதியில் நேற்று மதியம் குண்டு ஒன்று வெடித்துள்ளது.இதில் சிப்பாய் ஒருவர் காயமடைந்தார்.

வீதிப் பாதுகாப்பு கடமையில் ஈடுபட்டிருந்த படையினர் ஒருவருடைய கைக்குண்டே தவறுதலாக வெடித்தது என்று கூறப்பட்டது. (3-6-75-204)

## சங்கத்தானை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சிப்பாய் யாழ் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சங்கத்தானை பிறைற்றன் கல்வி நிலையம் முன்பாக அமைந்திருந்த இராணுவக் காவலரண் மீதே கிரனேட் வீச்சு இடம்பெற்றுள்ளது. இச்சம்பவத்தையடுத்து கடைகள் பூட்டப்பட்டன. வீதிகள் வெறிச்சோ டின. ஏ-9 வீதியூடான போக்குவரத்து சாவகச் சேரி மார்க்கத்திற்குப் பதிலாக வேறு பாதை களூடாக இடம்பெற்றது. படையினர் தேடுதல் நடவடிக்கைகளில் ஈடுபட்டனர். (க-3)

## யாழ். நகர...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பட்டிருந்தனர் என்றும் -

அச்சமயம் அவர்களை நோக்கி வேட்டுக்கள் தீர்க்கப்பட்டன என்றும் கூறப்பட்டது.

இந்தச் சம்பவத்தில் சிப்பாய் ஒருவர் காயமடைந்து பின்னர் மரணமானார் எனக் கூறப்பட்டது. ஆனால், இத்தகவல் செய்தி அச்சுக்கு போகும்வரை உறுதி செய்யப்படவில்லை. (3-6-14)

## விரைந்து....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குழுவுக்கு விளக்கினார்.

இலங்கையில் புதிய இராணுவத் தளபதி பொறுப்பேற்ற பின்னர் குடாநாட்டில் மட்டுமல்லாமல் தமிழர் பிரதேசமெங்கும் இராணுவத்தின் அடாவடித்தனங்கள், அத்துமீறல்கள் அதிகரித்து வருவதைப் பாலசிங்கம் சுட்டிக் காட்டினார்.

அமைதியாக - ஜனநாயக வழியில் - தங்கள் உணர்வுகளை வெளிப்படுத்த முயன்ற மக்கள், இராணுவத்தினால் அராஜகத்தின் மூலம் அடக்கப்பட்டிருக்கிறார்கள் என்றார் பாலசிங்கம்.

இந்த நிலைமையில் போர்நிறுத்தத்தை செம்மையாகக் கடைப்பிடிப்பது குறித்து தாமதமின்றி இருதரப்பும் நேரடியாக அமர்ந்து பேசவேண்டுமென நோர்வேப் பிரதிநிதிகள் வற்புறுத்தினர். பேச்சு எங்கு நடக்கவேண்டும் என்பது முக்கியமல்ல, உடனடியாக பேச்சுகளை ஆரம்பித்து பதற்ற நிலையைத் தணிப்பதே முக்கியமானதாகும். தற்போதைய வன்முறை முற்றி, அது யுத்தமாக வெடிப்பதை தவிர்ப்பதே இப்போது அவசியமானது - என்றும் நோர்வே தரப்பினர் வலியுறுத்தினர்.

எங்கு பேச்சு நடந்தாலும், அதற்கு அனுசரணைப் பணிபுரிய தாங்கள் தயார் என்று தெரிவித்த நோர்வேப் பிரதிநிதிகள், பேச்சுக்கான இடத்தையும் நேரத்தையும் தீர்மானித்து இணங்குவதுதான் தரப்புகள் முன்னுள்ள முக்கிய விடயம் என்றனர்.

நேற்றுமுன்தினம் இணைத்தலைமை நாடுகளின் கூட்டத்தில் ஆராயப்பட்ட விடயங்களையும், முடிவுகளையும் பாலசிங்கத்துக்கு எடுத்து விளக்கிய நோர்வேக் குழுவினர் தற்போது யாழ். நிலைமைகள் மோசமடைந்திருப்பது குறித்தும், அங்கு வன்முறைகள் வெடித்திருப்பது குறித்தும் உலகம் ஆழ்ந்த கவலை கொண்டிருப்பதாகவும் தெரிவித்தனர்.

பேச்சுகளை விரைந்து ஆரம்பிப்பதே உலகின் எதிர்பார்ப்பு என்றும் தெரிவித்தனர் அவர்கள். நோர்வேயின் அனுசரணைப் பணி தொடர்பாக மூன்று விடயங்களை அவர்கள் பாலசிங்கத்திடம் தெரிவித்தனர்.

ஒன்று - அனுசரணைப் பணியை ஆற்றுவது மட்டுமே நோர்வேயின் பங்கு. அதை வெற்றிகரமாக முன்னெடுப்பது சம்பந்தப்பட்ட இரு தரப்புகளின் பொறுப்பு. பேச்சு முயற்சிகளில் பலன் கிட்டாவிடின் அல்லது தடங்கல், பின்னடைவு ஏற்பட்டால் அதற்கு நோர்வேவைக் கண்டிப்பதோ, குறைகூறுவதோ பொருத்தமற்றது.

இரண்டாவது - அமைதி முயற்சிகளில் இரண்டு தரப்பும் பற்றுறுதியோடு செயற்படவேண்டும். அதை தரப்புக்கள் வெளிப் படுத்தவும் வேண்டும். இல்லையேல் தொடர்ந்து அனுசரணைப்பணி வகிப்பதில் அர்த்தமில்லை.

மூன்று - அனுசரணைத் தரப்பின் உயர் மட்டத்தினர் கொழும்பு வரும்போது இலங்கை அரசதரப்பில் ஜனாதிபதி, பிரதமர் போன்ற உயர் மட்டத்தினரை சந்திக்க முடிகிறது. அதே போன்று புலிகளின் தலைவரையும் சந்திக்க வசதிசெய்யப்படவேண்டும்.

- இவ்வாறு நோர்வேத் தரப்பினர் தெரிவித்த தகவல்களை - அவர்களோடு கலந்துரையாடப்பட்ட விடயங்களைத் தலைவர் பிரபாகரனுக்கு தாம் தெரிவிப்பார் என பாலசிங்கம் நோர்வேக் குழுவினரிடம் உறுதியளித்தார்.

இலங்கை அரச தரப்பினருடன் தாங்கள் இதுவரை நடத்திய பேச்சுகள் இலங்கை, இந்திய அதிகாரிகளிடையே இடம்பெற்ற பேச்சுகள் தொடர்பாக தமக்குத்தெரிந்த, தெரிவிக்கப்பட்ட விடயங்கள் போன்றவற்றையும் நோர்வேப் பிரதிநிதிகள் பாலசிங்கத்துக்கு எடுத்துரைத்தனர் எனத் தெரிகின்றது. (க-3)

## ஓட்டோச் சாரதி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வீதியின் குறுக்கே ஓட்டோக்கள் நிறுத்தப்பட்டு போக்குவரத்து முற்றாகத் தடுக்கப்பட்டது.

இதனை அடுத்து அங்கு விரைந்த படையினர் ஓட்டோச் சாரதிகளுடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர். அவர்களை விரட்டி விரட்டித் தாக்கினர். இதனால் சில ஓட்டோக்கள் சேதமாகின என்று தெரிவிக்கப்பட்டது.

இந்தக் களேபரத்தை அடுத்து நகரில் இருந்த கடைகள் அனைத்தும் இழுத்து மூடப்பட்டன. நகரிலிருந்து தூர இடங்களுக்கான போக்குவரத்து இடைநிறுத்தப்பட்டது. ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றிவிட்டு வீடு திரும்புவதற்காக பஸ் நிலையத்தில் காத்திருந்த மாணவர்கள், வைத்தியசாலைக்கு வந்திருந்த நோயாளர்கள், நத்தார் கொண்டாட்டத்திற்கான பொருள்களை வாங்கவென வந்திருந்த பொதுமக்கள் எனப் பல்வேறு தரப்பினரும் திணறி அடித்துக்கொண்டு தப்பியோடினர். (க-3-12-13-15-86)

## கிழக்குப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தாக்குதலை வன்மையாகக் கண்டிப்பதென்றும், இதனை உடனடியாக நிறுத்துமாறு இராணுவத்தினருக்கு அழுத்தத்தை வழங்கும் வகையில் தொடர்ந்து வகுப்புகளைப் பகிஷ்கரிப்பதென்றும் மேற்படி மாணவர்கள் தீர்மானித்திருக்கின்றனர்.

இவற்றில் பேராசியர்கள், விரிவுரையாளர்கள், அனைத்து பீடங்களையும் சேர்ந்த மாணவர்கள் இந்த பகிஷ்கரிப்பில் ஈடுபடுவர் எனத்தெரி விக்கப்படுகிறது. (க-3)

## இராணுவ உயர்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

யுத்த நிறுத்தக் கண்காணிப்பாளர் செல்வி மெத்தவுக்கும் யாழ். மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதிக்கும் இடையிலான சந்திப்பு நேற்றுமுற்பகல் 10.30 மணிக்கு நடைபெற்றது.

பளையில் உள்ள அரசியல்துறை அலுவலகத்தில் நடைபெற்ற இச்சந்திப்பின்போது இளம்பரிதி தெரிவித்ததாவது:-

போர்நிறுத்த உடன்படிக்கையை விடுதலைப் புலிகள் செம்மையாக நடைமுறைப்படுத்தும் அதேவேளை, படையினர் அந்த உடன்படிக்கையைப் புறக்கணித்து அத்தமீறல்களில் ஈடுபட்டுள்ளனர்.

பெண்களை பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்திக் கொலை செய்தல், அப்பாவிப் பொதுமக்களைத் தாக்கி அவமானப்படுத்தல் போன்ற செயற்பாடுகளில் இராணுவம் ஈடுபட்டுவருகின்றது.

புனித இல்லங்களாக மதிக்கப்படும் மாவீரர் துயிலும் இல்லங்களுக்குள் ஆயுதங்களுடன் சென்று சோதனை செய்கிறார்கள்.

நாகரிக வரம்பை மீறி பொதுமக்களின் வீடுகளில் தேடுதல் என மனித உரிமைகளையும் போர் நிறுத்த உடன்படிக்கையையும் உதாசீனப்படுத்தும் வகையில் படையினர் செயற்பட்டுகின்றனர்.

இத்தகைய அத்துமீறல்கள் படையினரின் உணர்ச்சி வசப்படுத்தப்பட்ட நிலையின் வெளிப்பாடு எனக் கருதமுடியாது. மாறாக இவை இராணுவத்தின் உயர்பீடத்தினால் ஏற்கனவே நன்கு திட்டமிடப்பட்டு மக்களை அச்சுறுத்தி ஒடுக்கும் வன்முறையாகும்.

இத்தகைய படையினரின் அத்துமீறல்களை போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு வெளியுலகின் கவனத்துக்கு வெளிப்படுத்த வேண்டும்.

சமாதானத்தில் மக்கள் கொண்டிருந்த நம்பிக்கையை படையினரின் அடாவடித்தனத்தால் முற்றாக இழந்துவிட்டனர். போர் நிறுத்த உடன்பாட்டுக்கு மாறாகவும் படையினரின் இச்செயற்பாடுகள் அமைந்துள்ளன.

போர்நிறுத்த உடன்படிக்கைக்கு இடையூறு ஏற்படுத்துவது ஏற்புடையதல்ல. உடன்படிக்கையைச் செம்மையாக நடைமுறைப்படுத்த நாம் முழு ஒத்துழைப்பையும் வழங்குவோம் - என்றார்.

குடாநாட்டில் பணிபுரியும் கண்காணிப்பாளர்கள் செம்மையாக - சுதந்திரமாக - பணியை மேற்கொள்ள பொதுமக்கள் ஆதரவு வழங்க வேண்டும் என்றும் -

அவர்களின் பாதுகாப்பைத் தமிழர்தரப்பு உறுதி செய்யவேண்டும் என்றும் - இளம்பரிதி கேட்டுள்ளார்.

பதில் அளித்த கண்காணிப்பாளர் -

குடாநாட்டில் கடந்த சில தினங்களாக இடம்பெறும் சம்பவங்களைக் கூர்ந்து கவனித்து வருகின்றோம். உயர் பீடத்தின் கவனத்துக்கு இங்குள்ள நிலைமையைத் தெரிவிப்போம். உடன்படிக் கைக்கு ஊறு ஏற்படமாட்டாது என நம்பிக்கை கொண்டுள்ளோம் - என்று பதில் அளித்தார். (3)


**திரு ரீயூசன் சென்ரர்**

கோண்டாவில்

**English Mediem**

தரம் 6, 7, 8

Maths.- திரு.பரமேஸ்வரன்

Sci.- திரு.கனகேஸ்வரன்

Eng.- திரு.நமசிவாயம்

திரு.கணேசலிங்கம்

So.st.- திரு.சண்முகலிங்கம்

ஆரம்பம் - 24.12.2005

(சனி 7 மணி)

(44323)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 21.12.2005 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org